
சுவடி : 42
ஏடு : 9
மார்ச்சு 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.272/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

# காவிரி நீர்ப்பங்கீடு உரிமைக்குப் போராடுவோம்! ஆயிரம் ஆண்டுகளாக உள்ள ஏரிகளைத் தூர் வாருவோம்! 2018 மார்ச்சு முதல் சூன் வரை போர்க்கால விசையில் தூர்வாரி நிரந்தரப் பாசன வசதிக்கு உரிய வசதிகளைக் காண்போம்!



காவிரி ஆற்றுநீர்ப்பங்கீடு சிக்கல் கி.பி.1807 ஆம் ஆண்டே தொடங்கிவிட்டது. பேச்சுவார்த்தையும் அதே கட்டத்தில் நடந்தது. மைசூரு அரசில் நிருவாகத்திலிருந்த பிரிட்டனைச் சேர்ந்த கர்னல் ஆர்.ஜே. சாங்கி என்பவர் மலைச்சரிவில் விழும் மழைநீரைச் சேகரித்து ஓர் அணைகட்டி அதில் நீரைத் தேக்கத் தீர்மானித்தார்.

இதற்கு மெட்ராஸ் மாகாண அரசு ஒத்துக் கொண்டது. ஆனால் நாள்கள் செல்லச் செல்ல காவிரிக்கு நீர்வரத்து குறையுமே என்ற அச்சம் சென்னை மாகாணத்தாருக்கு ஏற்பட்டது. பல சுற்றுப் பேச்சு வார்த்தைக்குப் பின்னர், 1892 பிப்ரவரி 18ஆம் நாள் ஓர் ஒப்பந்தம் ஆயத்தமானது. இதுதான் காவிரி ஆற்று நீர்ப் பங்கீடு பற்றி ஏற்பட்ட முதலாவது ஒப்பந்தம்.

**அந்த ஒப்பந்தப்படி, மைசூரு அரசு காவிரியின் குறுக்கே ஏதேனும் அணை கட்டத் தீர்மானித்தால், காவிரியின் கீழ் மடையிலுள்ள சென்னை மாகாண அரசின் அனுமதியைப் பெற வேண்டும்; பாசனப் பகுதியின் பரப்பை அதிகரிக்கவும் சென்னை மாகாண அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.**

அப்போது 1910ஆம் ஆண்டு முதன்முதல் சிக்கல் ஏற்பட்டது. அதாவது காவிரியின் குறுக்கே கண்ணம்பாடி என்கிற இடத்தில் 41.5 டி.எம்.சி. நீரைத் தேக்க கிருஷ்ணராஜசாகர் அணையைக் கட்ட மைசூரு சுதேச அரசு தீர்மானித்தது. அதே காலக்கட்டத்தில் சென்னை மாகாண அரசு, சேலம் மாவட்டத்தில் ஓர் அணை கட்டத் தீர்மானித்தது. அது குறித்த பேச்சுவார்த்தை பல சுற்றுக்களாக நடந்தது. ஆனால் ஒருமித்த கருத்து எதுவும் ஏற்படவில்லை.

உடனே, இந்திய விவகாரங்களுக்கான பிரிட்டிஷ் அமைச்சகம் நேரடியாகத் தலையிட்டு, 1924ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கியது. அந்த ஒப்பந்தப்படி இரு மாகாண அரசுகளும் பாசனப் பரப்பை அதிகப்படுத்திக் கொள்ளலாம் என ஏற்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் 50 ஆண்டுகள் நீடிக்கும் என ஏற்கப்பட்டது.

வெள்ளையர் வெளியேறிய பிறகு, 1956இல், மொழிவாரியாக, மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. 1960களில் மேலும் இரண்டு புதிய அணைகளைக் காவிரியின் குறுக்கே கட்ட கர்நாடக அரசு தொடங்கியது. அதைத் தமிழக அரசு எதிர்த்தது. **கர்நாடக அரசு அதைப் பொருட்படுத்தவில்லை. இந்திய காங்கிரசுக் கட்சி அரசும் அதைக் கண்டுகொள்ளவில்லை.**

1974ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்காலத்தில், தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்கம், கர்நாடக அரசு காவிரியில் நீர்விடக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத்

தொடர்ந்தது. கர்நாடக அரசு, பிரதமர் இந்திரா காந்திக்கு அழுத்தம் கொடுத்து, முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி மூலம் மேலே கண்ட வழக்கை தஞ்சை விவசாய சங்கம் திரும்பப் பெறச் செய்தது. இங்கேதான் முதல் சிக்கல் தொடங்கியது.

1977 பொதுத் தேர்தலில், அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெற்று, நடிகர் எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆனார். அவருடைய ஆட்சி 1979இல் கலைக்கப்பட்டது. 1980 தேர்தலில் மீண்டும் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. 1982ஆம் ஆண்டு, எம்.ஜி.ஆர். அரசு 1892 ஒப்பந்தமே செல்லும் என வாதாடியது.

இதில் தீர்வு எட்டப்படாததால், தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்கத்தார், மீண்டும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். உச்சநீதிமன்றம், ‘‘தமிழகம், கர்நாடகம் இரண்டு மாநில அரசுகளும் கலந்துபேசி 24.4.1990க்குள் ஒரு தீர்வு காணவேண்டும்’’ என்று ஆணையிட்டது. அப்படி ஒரு தீர்வும் எட்டப்படாததால், 2.6.1990இல் ஒரு காவிரி நீர் தீர்ப்பாயம் உருவாக்கப் பட்டது.

**அந்தத் தீர்ப்பாயம் 25.6.1991இல் ஒரு இடைக் காலத் தீர்ப்பை வழங்கியது. அதன்படி 205 டி.எம்.சி. நீரைக் கர்நாடக அரசு தமிழக அரசுக்கு விட வேண்டும்.**

இதை வைத்து, கர்நாடக அரசு, அங்கு வன்முறையைத் தமிழர்கள் மீது ஏவியது. தமிழர் சிலர் கொல்லப் பட்டனர்; தமிழரின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன; தமிழச்சிகள் பலர் கற்பழிக்கப்பட்டனர்; சில தமிழர்கள் தமிழகத்திற்கு ஓடி வந்தனர்.

11.12.1991இல் இந்திய அரசிதழில் இடைக்காலத் தீர்ப்பு வெளியாகியது. அதன்பிறகும் கர்நாடக அரசு உச்ச நீதிமன்ற ஆணையை மதிக்க மறுத்தது. 1998இல் பிரதமரின் தலைமையில் காவிரி ஆணையம் அமைக்கப் பட்டது. அதில் புதுச்சேரி, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா முதலமைச்சர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். இதற்கு ஆலோசனை வழங்க காவிரி கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டது.

2002 வரையில் போதிய பெருமழையின் காரணமாகப் பெரிய சிக்கல் உருவாகவில்லை. 2002இல் மீண்டும் சிக்கல் உருவாயிற்று. தமிழக அரசு மீண்டும் உச்சநீதிமன்றத்தை நாடியது.

இதன் பிறகு, காவிரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று ஒரு தீர்ப்பை வழங்கியது.

அத்தீர்ப்பின்படி, கர்நாடகத்துக்கு 270 டி.எம்.சி. தமிழகம், புதுச்சேரிக்கு 192 டி.எம்.சி., கேரளாவுக்கு 21 டி.எம்.சி. நீரும் கர்நாடகம் விட வேண்டும் என்று கூறியது.

1) தமிழகம் பெறவேண்டிய நீர் 192 டி.எம்.சி. அதன் விவரம் மாதவாரியாக விடப்படவேண்டிய நீர் அளவு

| | |
|---|---|
| சூன் மாதம் | 10 டி.எம்.சி. |
| சூலை | 34 டி.எம்.சி. |
| ஆகத்து | 50 டி.எம்.சி. |
| செப்டம்பர் | 40 டி.எம்.சி. |
| அக்டோபர் | 22 டி.எம்.சி. |
| நவம்பர் | 15 டி.எம்.சி. |
| திசம்பர் | 8 டி.எம்.சி. |
| சனவரி | 3 டி.எம்.சி. |
| பிப்பிரவரி | 2.5 டி.எம்.சி. |
| மார்ச்சு | 2.5 டி.எம்.சி. |
| ஏப்பிரல் | 2.5 டி.எம்.சி. |
| மே | 2.5 டி.எம்.சி. |
| ஆக மொத்தம் | 192 டி.எம்.சி. |

இப்போது 16.2.2018இல் தீர்ப்பு அளிக்கப்பட்ட வழக்கில், இது, தமிழக அரசின் முதலாவது கோரிக்கை.

மாதா மாதம் தண்ணீர் திறந்துவிட வேண்டிய அளவைக் கண்காணிக்கவும், கர்நாடக அணைகளில் உள்ள நீரைக் கணக்கெடுத்து நீர்ப் பகிர்வை உறுதி செய்யவும் ‘‘காவிரி மேலாண்மை வாரியம்’’ அமைக் கப்பட வேண்டும். இது இரண்டாவது கோரிக்கை.

கிருஷ்ணராஜ சாகர் அணையிலிருந்தும், கபினி அணையிலிருந்தும் திறந்துவிடப்படும் நீர், பில்லி குண்டுலு வரையில், சரியாக வந்து சேர்கிறதா என்பதைக் கண் காணிக்க, ‘‘காவிரி நீர் ஒழுங்குமுறை ஆணையம்’’ அமைக்கப்பட வேண்டும். இது மூன்றாவது கோரிக்கை.

இவற்றுக்குச் சட்ட வடிவிலான அதிகாரம் அளிக்கப் பட வேண்டும்.

இவை தமிழ்நாட்டின் கோரிக்கைகள்.

இம் மூன்று கோரிக்கைகளைப் பற்றி, 16.2.2018 அன்று இந்திய உச்சநீதிமன்றம் என்ன முடிவுகளைக் கூறியது?

I. தமிழகம், புதுச்சேரிக்கு ஆண்டுக்கு 192 டி.எம்.சி. நீர் தரவேண்டும் என்று காவிரி நடுவர் மன்றம் கூறியது தவறு. ஏனெனில், வளர்ந்துவரும் பெங்களூரின் குடிநீர் சிக்கலையும், தமிழகம் பெற்றுள்ள நிலத்தடி நீரையும் காவிரி நடுவர் மன்றம் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறிவிட்டது.

இந்தத் தவறு இப்போது சரிசெய்யப்பட்டிருக்கிறது. அதாவது தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்ட 192 டி.எம்.சி. காவிரி நீர், 177.25 டி.எம்.சி.யாகக் குறைக்கப்பட்டிருக் கிறது. அதாவது 14.75 டி.எம்.சி. நீர் தமிழகத்துக்குக் காவிரியில் விடப்படுவதற்குப் பதிலாக, அது கர்நாடகத் துக்குத் தரப்படுகிறது. இதில் வேகமாக வளர்ந்துவரும் பெங்களூரின் குடிநீருக்காக 4.75 டி.எம்.சி. கன அடி காவிரி நீரும், பெங்களூரில் வளர்ந்துவரும் தொழிற் சாலைகளுக்காக 10 டி.எம்.சி. காவிரி நீரும் பகிர்ந்தளிக் கப்படுகிறது. கர்நாடக மக்கள் காவிரி நீரை அனுபவிக்க முடியாமல் செய்யப்பட்ட அநீதி இதன்மூலம் களையப் படுகிறது.

II. இந்திய அரசு இன்றிலிருந்து 6 வார காலத்துக் குள், "காவிரி மேலாண்மை வாரியம்" அமைக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டு அரசு தமிழ்நாட்டில் காவிரிப் பாசனப் பகுதியில், நிலத்தடியில் தேங்கியுள்ள 20 கோடி கன அடி நீரை எடுத்து, அதில் 10 கோடி நீரைப் பாசனத் துக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

III. "காவிரி நீர் ஒழுங்குமுறை ஆணையம்" பற்றி எந்தக் கருத்தையும் உச்சநீதிமன்றம் கூறவில்லை.

IV. இந்த உச்சநீதிமன்ற ஆணை இன்றிலிருந்து 15 ஆண்டுகளுக்கு நீடிக்கும்.

V. காவிரி நீர்ப் பங்கீடு பற்றி, சம்பந்தப்பட்ட எந்த மாநிலமும், 16.2.2018இல் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து, மேல்முறையீடு செய்ய அனுமதி இல்லை.

VI. கேரளாவுக்கு உரிய 30 டி.எம்.சி. கன அடி நீரும், புதுச்சேரிக்கு உரிய 7 டி.எம்.சி. கன அடி நீரும் குறைக்கப்படவில்லை.

இதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம் என்பதே அத்தீர்ப்பின் விவரங்கள் ஆகும்.

நாம் - தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் உணர்ச்சியில் மிதக்கிறவர்கள்; மேடையில் வீர முழக்கம் செய்யக் கற்றவர்கள்.

**காவிரி நீர் உரிமைக்கு உலை வைத்தவர்கள். தமிழ் நாட்டுக் காங்கிரசுக் கட்சியினரும், தி.மு.க.வினரும், அ.இ.அ.தி.மு.க.வினரும் இவர்களின் தொங்கு சதைக் கட்சிகளுமே ஆவர்.**

எப்படி?

1967 முதல் 2018 வரை 51 ஆண்டுகளில், 42 ஆண்டுகளாகக் காவிரி நீர்ச் சிக்கலைத் தமிழர் எதிர் கொள்கிறோம்.

தமிழ்நாட்டுக்கு உரிய 57 (39 + 18) நாடாளுமன்ற உறுப்பினர்களும், புதுச்சேரிக்கு உரிய 2 (1+1) நாடாளு மன்ற உறுப்பினர்களும் ஆக 59 உறுப்பினர்களும் - எப்போதாவது, காவிரி நீர்ப் பங்கீடு சிக்கல் பற்றி 1) குடிஅரசுத் தலைவர், 2) பிரதமர், 3) இந்தியப் பாசனத் துறை அமைச்சர் ஆகியோரை ஒரு தடவையாவது பார்த்து, உண்மை நிலையை நேரில் விளக்கிச் சொல்லி யிருக்கிறார்களா?

இல்லை; இல்லவே இல்லை. அவ்வளவு ஈனத்தன மானவர்கள் நம் தலைவர்கள்.

கர்நாடகத்தை எந்தக் கட்சி ஆண்டாலும், அவர்கள் - கட்சி, சாதி, பதவி இவற்றைப் பார்க்காமல் - சிக்கலை முன்வைத்து-இந்நாள், முன்னாள் முதலமைச்சர்களும், எல்லாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து, தில்லிக்குப் போய் எல்லோரையும் பார்த்துப் பேசுகிறார்களே! தில்லிக்காரரை அச்சுறுத்துகிறார்களே!

தமிழர்கள் ஏன் அப்படிச் செய்யவில்லை?

இனியும் காவிரியைப் பற்றிய கூப்பாடு, முல்லைப் பெரியாறு பற்றிய உரிமைப் போர் இவற்றோடு நிற்காதீர்கள்!

சோழர்கள் காலந்தொட்டு தமிழகத்தில் ஏரிகள் உள்ளன. 41,000 பெரிய - சிறிய ஏரிகள் உள்ளன.

நீங்கள் எந்தக் கட்சி - எந்தச் சாதியைச் சார்ந்த வராக இருந்தாலும், உங்கள் உங்கள் ஊரில் - ஊர்க் குளம், கோவில் குளம், குட்டை, சிறிய ஏரி, பெரிய ஏரி, நீர்வரத்து வாய்க்கால், நீர்ப்போக்கு வாய்க்கால் இவை இருக்கின்றன.

கடந்த 50 ஆண்டுக்காலமும் தமிழ்நாட்டுத் திராவிடக் கட்சி ஆட்சியாளர்களும், அதிகாரிச் சாதியினரும் இவற் றைச் செப்பனிடத் தவறிவிட்டார்கள். அல்லது செப்பனிடு வதாகப் பேர் வைத்து, மக்கள் பணத்தைக் கொள்ளை அடித்துவிட்டார்கள்.

இவர்கள் ஆற்று மணல், ஓடை மணல், வனத்துறைக் காடுகள் இவற்றைச் சூறையாடிவிட்டார்கள்.

இனி, வீட்டுக்கு ஒருவர் வீதிக்கு வந்து -

1. காவிரி நீர் உரிமையைக் காக்கப் போராடுங்கள்
2. நீர்நிலைகளைக் காப்பாற்றப் போராடுங்கள்!
3. மணல் கொள்ளையைத் தடுக்கப் போராடுங்கள்!
4. அரசுக் காடுகளைக் காக்கப் போராடுங்கள்!
5. வேளாண்மையைக் காப்பாற்றுங்கள்!

**01-03-2018** **- வே. ஆனைமுத்து**

# தாய்மொழிக் கல்வியை மறுக்கும் தமிழன் உருப்படுவானா? இந்தியன் உருப்படுவானா?

**வே.ஆனைமுத்து**

2017இல் இந்தியாவில், மொத்தம் 819 பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்துடனும் பல கல்லூரிகள் இணைந்துள்ளன. இவற்றில் கலை, அறிவியல் கல்லூரிகள், 2013 கணக்குப் படி, 35,539 உள்ளன. ஒரு கல்லூரியிலிருந்து, சராசரியாக ஆண்டுதோறும் 200 பேர் பட்டம் பெற்று வெளியேறுகிறார்கள்.

இவர்களில் பலர் 10ஆம் வகுப்பு வரையிலும் தாய்மொழி வழியில் படித்தவர்கள்; சிலர் ஆங்கில மொழி வழியில் படித்தவர்கள்.

இவர்களில் 12ஆம் வகுப்பு வரையில் சிலர் தாய்மொழி வழியிலும், பலர் ஆங்கில மொழி வழியிலும் படித்தவர்கள்.

**ஆனல் இவர்கள் எல்லோரும், பட்டப்படிப்பிலும், மேல்பட்டப் படிப்பிலும் கலை, அறிவியல் முதலிய எல்லாப் பாடங்களையும் ஆங்கில மொழி வழியில் மட்டுமே படிக்கிறார்கள்.**

இப்படிப் படித்துப் பட்டம் பெற்றவர்கள், இந்தியாவில் ஆண்டுக்கு 72 இலட்சம் பேர் ஆண்களும் பெண்களும் ஆவர்.

இவர்கள் தாங்கள் படிக்கும் பாடங்களைச் சரிவர உள்வாங்கிக் கொள்ள முடியாது. அவரவர் எடுத்த படிப்புத் துறையில்-துறைபோன திண்ணிய அறிவைப் பெற முடியாது. பொது மக்களுக்குப் புரிகிற தன்மையில் எடுத்துச் சொல்ல முடியாது.

இந்தியா முழுவதிலும் 3,345 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை தனியார் கல்லூரிகள்.

தமிழ்நாட்டில் மட்டும் 545 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றிலும் பெரும்பாலானவை தனியார் கல்லூரிகள்.

**இப்படிப்பட்ட தனியார் பொறியியல் கல்லூரிகள், 1977 முதல் 2010 வரையில், 33 ஆண்டுகள் காலம், கள்ளப்பணம் அச்சடிக்கும் களங்கள் போல் பயன் பட்டன.**

இவற்றில் எந்த மாநிலத்திலும் எந்த அரசுப் பொறியியல் கல்லூரியிலும் அல்லது தனியார் பொறியியல் கல்லூரியிலும், பொறியியல் பாடங்களும், செய்வினைப் பாடங்களும் (Practical) அவரவர் தாய்மொழி வழியில் கற்பிக்கப்படவில்லை.

**ஆனால் தமிழ்நாட்டில் 100 பேர் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றால், கடந்த 2017 ஆண்டு முதல் அந்த 100 பேரில் 45 (அ) 46 பேர் உயர் கல்விக்குச் செல்கிறார்கள் என தமிழக அரசு பீற்றிக் கொள்கிறது; பெருமைப்படுகிறது.**

மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாடு மாநிலம் உயர்கல்வியில் முன்னேறியிருப்பது தமிழகத்துக்குப் பெருமைதான்.

**ஆனால், தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு பல்கலைக்கழகமும்-இந்தியா முழுவதிலும் உள்ள 819 பல்கலைக்கழகங்களில் எந்த ஒரு பல்கலைக்கழகமும் உலகத் தரம் வாய்ந்த 100 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக-2017 வரை இடம்பெறவில்லையே, அது ஏன்?**

அமெரிக்கா, சீனா, இரஷ்யா, அய்ரோப்பா போன்ற எந்தத் தொலைதூர அயல்நாடுகளிலும் - ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அவரவர் தாய்மொழி வழியில் மட்டுமே பாலர் வகுப்பு முதல் (கிண்டர் கார்ட்டன் முதல்) பல்கலைக்கழகப் படிப்பு வரையில் பாடங்களைப் பயிற்றுவிக்கிறார்கள்.

அதனால் அவ்வந்நாடுகளில் உள்ள உயர்கல்வித் துறை தங்கள் தங்கள் தாய்மொழியில் நூல்களையும், பாடப் பயிற்சிக்கான நூல்களையும், அகராதிகள், ஆய்வு நூல்கள் போன்ற கருவி நூல்களையும் உருவாக்கும் திறன் நிரம்பப் பெற்றிருக்கிறார்கள்.

ஆங்காங்கு உள்ள அரசுகளும் - எல்லாக் குடி மக்களுக்கும் ஒரே தரம் உள்ள கட்டாய - இலவசக் கல்வியை அவரவர் தாய்மொழி வழியில் தருகிறார்கள்.

இந்தியாவில் 1947 முதல் 1977 வரையில் தொடர்ந்து ஒரே கட்சி ஆட்சி இருந்த போதிலும், எந்த இந்திய மொழியையும்-எந்தக் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை துறைகளைச் சார்ந்த அறிவைக் கற்பிக்க ஏற்ற தகுதிவாய்ந்த மொழியாக வளர்த்தெடுக்கவில்லை.

அதாவது - சுதந்தர இந்தியா, கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை எல்லாத் துறைகளிலும் ஆங்கிலமே பயிற்று மொழி, ஆங்கிலமே ஆட்சி மொழி, ஆங்கிலமே உயர்கல்வி மொழி என்கிற அடிமைப்புத்தியிலிருந்து 70 ஆண்டுகளாகியும் விடுதலை பெறவில்லை.

இந்தியாவில் ஏறக்குறைய 460 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன.

மருத்துவக் கல்வியைத் தரப்படுத்துதல் என்கிற நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஒரே வழியாக, பொது மருத்துவப் படிப்பு என்கிற பட்டப் படிப்பில் M.B.B.S.-இல் சேருவதற்கான பொதுத் தேசியத் தகுதிகாண் நுழைவுத் தேர்வை எழுதச் செய்து, அனைத்திந்திய அளவில் - 'நீட்' (National Eligibility Entrance Test-NEET) என்ற ஒரு தேர்வை நடத்துவது தான் என்று மூடத்தனமாக இந்திய அரசு முடிவெடுத் திருக்கிறது. ஏன்?

இந்தியக் கல்வியாளர்கள், இன்னமும் பெரிதும் ஆளும் வகுப்பை - உயர் வகுப்பைச் சார்ந்தவர்கள் ஆக இருக்கிறார்கள்.

இந்திய சமுதாய அமைப்பில் 1800 வரையில், 100க்கு 90 பேராக உள்ள கீழ்ச்சாதி மக்கள், சாத் திரப்படி, எழுத்தறிவு மறுக்கப்பட்டவர்கள்.

1835க்கும் 2020க்கும் இடைப்பட்ட 185 ஆண்டுக் காலத்தில்தான் - எழுத்தறிவு என்பதை 100க்கு 90 இந்தியர்கள் சுவைத்தார்கள். இவர்களில் முக்கால்வாசிப் பேர் இன்னமும் சிற்றூர்ப் புறங்களில் உடல் உழைப் பாளிகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய பிள்ளைகளும், திருச்சி, சென்னை, பெங்களூர், மும்பை, புதுதில்லி, கல்கத்தா வாழ் நகரங்கழகளில் வாழ்கின்ற பிள்ளைகளும் ஒரே போட்டியில் - NEET தேர்வில் பங்கேற்றால், எப்படி சிற்றூர்ப்புற ஏழைப்பிள்ளைகள் வெற்றி பெற முடியும்?

அப்படி வெற்றி பெற்று, எம்.பி.பி.எஸ். வகுப்பில் சேரவோ அல்லது எம்.பி.பி.எஸ். தேர்ச்சி பெற்ற பிறகு, மேலும் மேலும் M.D., M.S. போன்ற ஆராய்ச்சிப் படிப்புக்கு - சீனா, இரஷ்யா, ஸ்விட்சர்லாந்து முதலான அயல்நாடுகளுக்குப் போனால்-முதலில், எந்த நாட்டில், படிக்க இடம் கிடைக்கிறதோ, அந்த நாட்டு மொழியை, இந்திய மாணவர் ஒவ்வொருவரும் ஓராண்டுக்குள் கற்க வேண்டும்.

அவர் எம்.பி.பி.எஸ். தகுதி பெற எந்த ஆங்கில வழியில் படித்தாரோ, அந்த ஆங்கிலம் - அன்றும் இன்றும்-சீனனுக்கு வேண்டப்படவில்லை; இரஷ்யனுக்குக் கிட்டவே வரக்கூடாது; ஸ்விட்சர்லாந்துக்காரனுக்குத் தேவையில்லை.

**ஆனால், இந்தியன் ஒவ்வொருவனும் - தமிழன் ஒவ்வொருவனும், இந்திக்காரன் ஒவ்வொருவனும் 2018க்குப் பிறகும் ஆங்கில மொழி வழியில் கற்பான்; பேசுவான்; எழுதுவான்.**

**உருப்படுவானா தமிழன்? உருப்படுவானா இந்தியன்?**

## வெகுண்டெழுவார் உழவர்

உழவனே உழைப்பாளியே உடலுழைப்பாளியே
உன் உழைப்புத்தான் விளைச்சல் உணவுப் பொருள்கள்
உயிர்களே, உலகமே வளங்களெல்லாம்
உழவனுக்குப் பிழைப்புக்குக் கூட வழி இல்லையே
பின் எங்கு வாழ்வு வளமையெல்லாம்?

உடையோரே, கற்றோரே, மற்றோரே
உங்கள் உயர்களிப்பு வாழ்வுக்கு
உழவர்களைக் காவு கொடுத்துவிட்டீர்களே
உறுத்தலில்லை உங்களுக்கு
உங்கள் காட்டாட்சியைக் கட்டவிழ்த்து விட்டீர்களே!

உழைப்பை மறைமுகமாய் உறிஞ்சுகின்றீர்
உரிய உயர்விலை மறுக்கின்றீர் விளைச்சலுக்கு!
உணவுக்கு எஞ்சிய கொஞ்ச வருவாயைக்
கொள்ளை கொள்கின்றீர் மறைமுகவரியாய்
மருத்துவமாய், கல்வியாய்.

பல்லாயிரம் கோடிகளில் ஆலைகள்
அவர்க்களிப்பீர் ஆயிரம் கோடிகளில் வரிச்சலுகை
அலுங்காமல் குலுங்காமல் அடிக்கின்றார் கொள்ளை
உழவன் உழைப்பின் விழுமியங்கள்
உடைமை ஆகின்றதே உழைப்பை மறுப்போர்க்கு.

உயர் பணிகளாம், உயர் அறம்கூறும் அவையாம் என பிறவாம்
அவர் பெறுவார் ஊதியம் இலக்கங்களில்
அதுவன்றி கிடைக்கும் பிற இனங்களாய்
அரசியல் பிழைப்பாய்ப்போன அரைவேக்காடெல்லாம்
அடிக்கின்றார் கொள்ளை கொள்ளையாய்.

தலைமைச் செயலகமாம் செயலற்ற தாளுக்கும் மைக்கும்
அத்தன்மைத்தே தலைமைத் துறைகளாம் மாநில அளவில்
அஃதே மாவட்டங்களிலும்
இவர்க்கெல்லாம் உயர் ஊதியமாம் உயர் ஓய்வூதியமாம்
உழைப்பாளி உழவனுக்குப் பிச்சைக் கூலி பிச்சை முதியோர் ஊதியம்

இவ்விழிநிலை கண்டு யாருக்கும் வெட்கமில்லை
நெஞ்சு பொறுக்குதில்லையே இந்நீச நிலைகண்டு,
வேண்டாம் வேண்டாம் வெற்றுப் புகழுரைகள்
வேண்டும் வேண்டும் நல்லூதியம் உடலுழைப்புக்கு
உழவனுக்கு வேண்டும்!

இவ்வவலங்கள் அகல வேண்டும்
வேண்டும் எல்லார்க்கும் எல்லாம்
கடிதே வேண்டும்; கழியும் காலமெனில்
வெகுண்டெழுவார் உழவர், உழைப்போரெல்லாம்
உலகை உலுக்கிடுவர், உணர்வீர்.


- இரா. பச்சமலை

# உழவர்களின் வருவாயை இரட்டிப்பாக்கும் மோடி அரசின் அறிவிப்பு : நாடாளுமன்றத் தேர்தலுக்கான வெற்று ஆரவார முழக்கமே!

- க. முகிலன்

நடுவண் அரசின் 2018-2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 1-2-2018 அன்று நிதி அமைச்சர் அருண்ஜெட்லி நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார். 2019 ஏப்பிரல்-மே மாதங்களில் நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் நடக்க இருப்பதால், நரேந்திர மோடி ஆட்சியின் முழுமையான இறுதி நிதிநிலை அறிக்கை இதுவேயாகும்.

2019ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் வாக்குகளை ஈர்க்கும் நோக்கத்துடன் இந்த நிதிநிலை அறிக்கையில் இரண்டு முதன்மையான திட்டங்களை மோடி அரசு அறிவித்துள்ளது, முதலாவது உழவர்களின் வருவாயை இரண்டு மடங்காக உயர்த்துவது; இரண்டாவது பத்துக்கோடி குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு உருவா 5 இலட்சம் மருத்துவக் காப்பீடு வழங்குவது ஆகும்.



*2017 திசம்பரில் உருளைக் கிழங்கை ஒரு உருபாவுக்கு விற்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டதால் அறுவடை செய்த உருளைக் கிழங்கைச் சாலையில் கொட்டி எதிர்ப்பைத் தெரிவிக்கும் உழவர்கள்*

பாரதிய சனதாக் கட்சி 2014இல் வெளியிட்ட நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில், மொத்த உற்பத்திச் செலவில் உழவர்களுக்கு 50 விழுக்காடு இலாபம் கிடைக்கச் செய்தல், குறைந்த விலையில் இடுபொருள்களை வழங்குதல், எளிதில் கடன் கிடைக்கச் செய்தல், புதிய வேளாண் தொழில் நுட்பங்கள், உயர் விளைச்சல் விதைகள் வழங்குதல், ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தை வேளாண்மைப் பணியுடன் இணைத்தல் முதலான வாக்குறுதிகளை பா.ச.க. அளித்திருந்தது. தேர்தல் மேடைகளில் மோடி இந்த வாக்குறுதிகளை முழங்கினார்.

கடந்த நான்கு ஆண்டு ஆட்சிக்காலத்தில் உழவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் எதையும் நிறைவேற்றிட எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததுடன், 2017 திசம்பர் வரையில் உழவர்களின் விளை பொருள்களுக்கு உற்பத்திச் செலவைப் போல் 1.5 மடங்கு விலை நிர்ணயிப்பது சந்தையைச் சீர்குலைக்கும் என்று மோடி ஆட்சி கூறிவந்தது.

2014 தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யுமாறு நடுவண் அரசுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்குத் தொடுக்கப்பட்டது. இதுகுறித்து நடுவண் அரசின் கருத்தை உச்சநீதிமன்றம் கோரியது. 2015 பிப்பிரவரி 20 அன்று உச்சநீதிமன்றத்தில் மோடி அரசு அளித்த அறிக்கையில், “மொத்த உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு இலாபம் கிடைக்கும் வகையில் தானியங்களுக்கோ, மற்ற விளைபொருள்களுக்கோ குறைந்தபட்ச ஆதரவு விலையை (Minimum Support Price - MSP) நிர்ணயிக்க முடியாது; ஏனெனில் அது வேளாண் சந்தையைச் சீர்குலைக்கும்” என்று கூறித் தேர்தல் வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டது. 2017 திசம்பர் 12 அன்று நாடாளுமன்றத்தில் குளிர்காலக் கூட்டத்தொடரில் நடுவண் அரசின் வேளாண் துறை இணை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்து வடிவில் கேட்கப்பட்ட கேள்விக்கு, “உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு இலாபம் கிடைக்கும் வகையில் விலை நிர்ணயம் செய்வது சந்தையைச் சீர்குலைக்கும்” என்று பதில் சொன்னார்.

அதன்பின் அய்ம்பது நாள்களுக்குள் நடுவண் அரசு தன் நிலைப்பாட்டைத் தலைகீழாக மாற்றிக் கொண்டது. 1.2.2018 அன்று அருண்ஜெட்லி நாடாளுமன்றத்தில் முன்மொழிந்த நிதிநிலை அறிக்கையில், “2022ஆம் ஆண்டு இந்தியா சுதந்தரம் பெற்ற 75ஆவது ஆண்டைக் கொண்டாடவுள்ளது. அதற்குள் உழவர்களின் வருவாயை இரண்டு மடங்காக உயர்த்த வேண்டும் என்ற இலக்கைப் பிரதமர் அறிவித்துள்ளார். எனவே தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, 2018ஆம் ஆண்டின் ராபி பருவத்தின் பெரும்பாலான பயிர்களுக்குச் சாகுபடிச் செலவில் 50 விழுக்காடு இலாபம் கிடைக்கும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலையை இந்த அரசு நிர்ணயித்துள்ளது; அடுத்து

வரும் காரீப் பருவப் பயிர்களுக்கும் இதேபோல் விலை நிர்ணயம் செய்யப்படும்" என்று கூறியுள்ளார். 2014 தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியைக் கடந்த நான்கு ஆண்டுகளாக நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டிருந்ததுடன், அந்த வாக்குறுதிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த மோடி அரசு, 2019இல் நாடாளுமன்றத் தேர்தலை மனதிற்கொண்டே இந்த அறிவிப்பைச் செய்துள்ளது. இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நடவடிக்கை என்று கூறி அருண்ஜெட்லி தன் முதுகைத் தானே தட்டிக்கொடுத்துக் கொள்கிறார்.

எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் நடுவண் அரசால் அமைக்கப்பட்ட தேசிய உழவர் ஆணையம் 2006ஆம் ஆண்டு அதன் அறிக்கையை அளித்தது. உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு அளவுக்கு உழவர்களுக்கு இலாபம் கிடைக்குமாறு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அந்த அறிக்கை வலியுறுத்தியது. அதன்படி 2018ஆம் ஆண்டிற்கான ராபி பயிர்களுக்கு அரசின் கொள்முதல் விலையை அறிவித்திருப்பதாக அருண்ஜெட்லி கூறியிருப்பது எந்த அளவுக்கு உண்மை என்பதைப் பார்ப்போம்.

நெல், கோதுமை, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி, சணல் முதலான பயிர்களுக்கு நடுவண் அரசின்கீழ் இயங்கும் வேளாண் பயிர்களின் உற்பத்திச் செலவு மற்றும் விலை நிர்ணயக் குழு (CACP) ஆண்டுதோறும் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) அறிவிக்கிறது. ஒரு ஏக்கரில் ஒரு குறிப்பிட்ட பயிருக்கான சாகுபடிச் செலவு என்பது விதை, உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், ஆட்களுக்கான கூலி, மாடுகள், இயந்திரங்களுக்கான வாடகை, நீர்ப்பாசனம், எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றுக்காகச் செலவிட்ட பணத்தின் கூட்டுத் தொகையாகும். இது $A_2$ என்று குறிக்கப்படுகிறது. இத்துடன் குடும்ப உறுப்பினர்களின் உழைப்புக்கான கூலி (Family Labour - FL) சேர்க்கப்படும். இது $A_2$ + FL என்று குறிக்கப்படுகிறது. இத்தொகையுடன் நிலம் மற்றும் மூலதனச் சொத்துக்களுக்கான வட்டி, பயிர்க்காப்பீட்டுப் பிரீமியம், போக்குவரத்துச் செலவு, சந்தைப்படுத்தல் செலவு ஆகியவை சேர்க்கப்படும் போது இதன் கூட்டுத் தொகை $C_2$ என்று குறிக்கப்படுகிறது. இந்த விவரங்களை மனதிற்கொண்டு கீழே உள்ள அட்டவணையைப் படியுங்கள்.

**2018ஆம் ஆண்டின் ராபி பயிர்களுக்கான உற்பத்திச் செலவு மதிப்பீடும் அறிவிக்கப்பட்ட விலையும்**

100 கிலோவுக்கு (குவிண்டால்) ரூபாயில்


| பயிர் | $A_2$ ரூ. | $A_2$+ FL ரூ. | $C_2$ ரூ. | $C_2$ + 50% ரூ. | அறிவிக்கப்பட்டுள்ள விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| கோதுமை | 642 | 817 | 1,256 | 1,884 | 1,735 |
| பார்லி | 522 | 845 | 1,190 | 1,785 | 1,410 |
| உளுந்து | 1,977 | 2,461 | 3,526 | 5,289 | 4,400 |
| எள் | 1,354 | 2,123 | 3,086 | 4,629 | 4,000 |

(ஆதாரம் : ஃபிரண்ட்லைன், மார்ச்சு 2, 2018)

**எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரைத்த $C_2$ + 50% என்கிற அளவுகோலின் அடிப்படையில் ராபி பயிர்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையை நடுவண் அரசு அறிவிக்கவில்லை என்பதை மேலே உள்ள புள்ளிவிவரம் அம்பலப்படுத்துகிறது. அதனால் மொத்த உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு இலாபம் உழவர்களுக்குக் கிடைக்கும் என்று அருண்ஜெட்லி நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பது உழவர்களை வஞ்சிப்பதாகும். இந்த ஏமாற்று முறையிலேயே காரிப் பருவப் பயிர்களுக்கும் விலை நிர்ணயிக்கப் போவதாகப் பெருமிதத்துடன் கூறுகிறார், நிதி அமைச்சர்.**

அரசு அறிவிக்கின்ற விலையில் உழவர்களிடம் நெல், கோதுமை போன்றவற்றை அரசு சில பகுதிகளில் மட்டுமே கொள்முதல் செய்கிறது. 1966 முதல் இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India - FCI) பற்றாக்குறைக் காலங்களின் தேவைக்காகவும், நியாய விலைக்கடைகள் மூலம் வழங்குவதற்காகவும் நெல், கோதுமை ஆகியவற்றை உழவர்களிடம் அரசு அறிவிக்கும் விலையில் கொள்முதல் செய்து வருகிறது. கோதுமையில் 90 விழுக்காடு பஞ்சாப், அரியானா, மேற்கு உத்தரப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் கொள்முதல் செய்கிறது. நெல்லில் 75 விழுக்காடு பஞ்சாப், அரியானா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கொள்முதல் செய்கிறது. இந்திய உணவுக்கழகம் இப்பகுதிகளில் அமைக்கும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் அரசு அறிவிக்கும் விலையில் உழவர்களிடம் கொள்முதல் செய்கிறது.

இதேபோன்று தமிழ்நாட்டு அரசு காவிரிப் பாசனப் பகுதியிலும், ஆந்திர அரசு கோதாவரி, கிருஷ்ணா ஆற்றுப் பாசனப் பகுதிகளிலும் நேரடிக் கொள்முதல் நிலையங்



*நேரடிக் கொள்முதல் செய்வதைக் குறைத்து, இந்திய உணவுக் கழகத்தைக் கலைத்து, வேளாண் சந்தையைத் தனியாரின் ஏகபோகமாக்கிட திட்டமிடும் இந்திய அரசு, உழவர்களின் வருவாயை இரட்டிப்பாக்குவோம் என்று கபட நாடகமாடுகிறது.*

கள் மூலம் மாநில அரசு அறிவிக்கும் விலையில் நெல்லைக் கொள்முதல் செய்கின்றன. கடந்த இருபது ஆண்டுகளாக இப்பகுதிகளில் தனியார் வணிகர்களும் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுவதால், தனியாரிடம் கடன் வாங்கிய உழவர்கள் குறைந்த விலையில் தங்கள் நெல்லை அவர்களிடம் விற்கும் நிலைக்கு ஆளாகின்றனர்.

இதுதவிர அரசின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் வேளாண் விளைபொருள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உழவர்கள் தங்கள் விளைபொருளை விற்கின்றனர். ஆனால் இவற்றில் கொள்முதல் செய்யும் வணிகர்கள்தான் விலையைத் தீர்மானிக்கிறார்கள். அதனால் அரசு அறிவிக்கும் விலையில் விளைபொருளை உழவர்களால் விற்க முடிவதில்லை. தனியார் மயம் பெருகிய பிறகு செயல்படும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கைச் சுருங்கிவிட்டது. எனவே தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் தனியாரிடமே குறைந்தவிலையில் தங்கள் விளைபொருள்களை உழவர்கள் விற்கும் நிலை இருக்கிறது.

இந்திய அளவில் அரசு அறிவிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) விற்பனை செய்யும் உழவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கிறது. 2012-13ஆம் ஆண்டில் இந்திய அரசின் புள்ளியல் துறை நடத்திய ஆய்வில் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) என்பதை 25 விழுக்காடு உழவர்கள் மட்டுமே அறிந்துள்ளனர். மகாராட்டிரத்தில் 8 விழுக்காட்டினர், குசராத்தில் 11 விழுக்காட்டினர், பஞ்சாபில் 50 விழுக்காட்டினர் இதைப்பற்றி அறிந்துள்ளனர். பஞ்சாப் மாநிலத்தில் உழவர்களில் பாதிப்பேர் இதைப்பற்றித் தெரிந்து வைத்திருப்பதற்குக் காரணம் முன்பு குறிப்பிட்டது போல் இந்தியாவிலேயே அதிக அளவில் நெல், கோதுமை நேரடி கொள்முதல் இங்குதான் செய்யப்படுகிறது. 19 விழுக்காட்டினர் மட்டுமே இந்திய உணவுக் கழகம் (FCI) பற்றி அறிந்துள்ளனர். எனவே 75 விழுக்காடு உழவர்கள் தனியாரிடமே தம் விளைபொருள்களை விற்கின்றனர். இந்நிலையில் அரசு, கொள்முதல் விலையை இன்னும் உயர்த்தி அறிவித்தாலும் பெரும்பான்மையான உழவர்களுக்கு அதனால் ஒரு பயனும் கிட்டாது.

இந்த நிலைமையை நிதி அமைச்சரும் அறிவார். அதனால்தான் நிதிநிலை அறிக்கையில், "அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட (MSP) பொதுச் சந்தையில் விலை குறைவாக இருந்தால் அரசு தலையிட்டு அரசு அறிவித்த விலையில் நேரடியாகக் கொள்முதல் செய்யும்; அல்லது இதற்கான மாற்று ஏற்பாட்டை உருவாக்கும். நிதி ஆயோக் அமைப்பு நடுவண் அரசிடமும் மாநில அரசுகளுடனும் கலந்து பேசி உழவர்களின் விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கான கட்டமைப்பை உருவாக்கும்" என்று தெரிவித்துள்ளார், அருண்ஜெட்லி. உழவர்களின் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைத்திட வழி செய்வோம் என்று காலங்காலமாக எல்லா அரசியல் கட்சிகளும் சொல்லி வருவதையேதான் "வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு" என்று கூறி, உழவர்களை ஏய்க்கப் பார்க்கிறார்.

உழவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்காக இந்திய அளவில் 585 வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை டிஜிட்டல் (e-NAM) மயமாக்கப் போவதாகக் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. 470 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுவிட்டன. மீதியுள்ளவை 2018 மார்ச்சு மாதத்திற்குள் இணைய சேவை மூலம் இணைக்கப்படும். இந்த இணைய சேவை மூலம் இந்தியாவில் எந்த இடத்தில் அதிக விலை கிடைக்கிறதோ அங்கு விற்று அதிக வருவாய் ஈட்டலாம் என்று நிதி அமைச்சர் சொல்கிறார்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அவற்றில் பதிவு செய்துகொண்டுள்ள வணிர்கள் தான் விளைபொருள்களின் விலையைத் தீர்மானிக்கிறார்கள். அவர்கள்தான் கொள்முதல் செய்கிறார்கள். இணைய சேவை மூலம் கொள்முதல் செய்வதானால் எங்கு விலை குறைவாக இருக்கிறதோ, அங்குதான் வணிகர்கள் கொள்முதல் செய்வார்கள். சேவைப் பிரிவுகளில் வங்கிகள் மூலம் பரிவர்த்தனை நடப்பது போல் வேளாண்மையையும் நினைக்கும் மோடி அரசின் இந்த பைத்தியக்காரத் திட்டத்தை உழவர்கள் எள்ளி நகையாடுகின்றனர்.

தாராளமயம், தனியார்மயம், உலகமயம் கொள்கையின்படி கடந்த இருபது ஆண்டுகளாக நடுவண் அரசில் ஆட்சி செய்த காங்கிரசும், பா.ச.க.வும் அரசு

நேரடியாகக் கொள்முதல் செய்வது, கிடங்குகளில் சேமித்து வைப்பது என்பதைப் படிப்படியாகக் குறைத்து வருகின்றன. இந்திய உணவுக் கழகத்தையே (FCI) கலைத்து விட்டு, வேளாண் சந்தை முழுவதையும், தனியாரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று நினைக்கின்றன. நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருள்களையும் அவற்றின் அளவையும் குறைத்துவருகின்றன. இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்திய அரசு உழவர்களின் வருவாயை இரண்டு மடங்கு உயர்த்தப் போவதாக இரட்டை வேடம் போடுகிறது.

அரசு கொள்முதல் செய்வதற்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளை அழித்துவிட்டு, அரசு அறிவிக்கும் விலையில் உழவர்களிடம் எப்படிக் கொள்முதல் செய்ய முடியும்? இதற்கு நிதி அமைச்சர் ஒரு ஏமாற்று வழியைக் காட்டுகிறார். மொத்த உழவர்களில் 86 விழுக்காட்டினராக இருக்கும் சிறு, குறு உழவர்களால் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலோ, தனியார் மொத்த கொள்முதல் மண்டிகளிலோ விற்க முடியாது. எனவே இந்தியாவில் உள்ள கிராமச் சந்தைகளில் 22,000 சந்தைகளைத் தேர்வு செய்து, அவற்றை மேம்படுத்தி, அவற்றின் மூலம் உழவர்கள் நுகர்வோருக்கும், மொத்தமாக வாங்குவோர்க்கும் விற்பனை செய்வதன் மூலம் சிறு, குறு உழவர்களுக்கும் நல்ல இலாபம் கிடைக்கும் என்று நிதி அமைச்சர் கூறுகிறார். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், கிராமச் சந்தைகளின் கட்டமைப்பை மேம்படுத்த ரூ.2000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு வெறும் கண் துடைப்பே ஆகும்.

கிராமச் சந்தைகளை மேம்படுத்த ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நரேந்திர மோடி பிரதமரான பின், காங்கிரசு ஆட்சியில் கொண்டுவரப்பட்ட ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. பல மாதங்கள் கழித்தே கூலி தரப்படுகிறது. இதில் நடுவண் அரசு திட்டமிட்டே பொய் சொல்கிறது.

தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவை எளிதில் அழும் தன்மை கொண்டவை. அதனால் அறுவடைக் காலங்களில் உழவர்களுக்கு உரிய விலை கிடைக்காமல் போகிறது. இத்தகைய இழப்பைத் தடுப்பதற்காக "கிரீன்ஸ் ஆபரேஷன்" (Greens operation) திட்டத்திற்காக ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அருண்ஜெட்லி நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளார். காய்கறிகள் பயிரிடும் உழவர்களுக்காகவும் இந்த அரசு திட்டம் தீட்டுகிறது என்று காட்டிக்கொள்வது என்பதற்கு மேல் இதனால் ஒரு பயனும் ஏற்படாது.



*ஏழைகளின் பசிப்பிணியைப் போக்கும் பொது வழங்கல் முறைக்கு இந்திய அரசு புதிய புதிய முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகிறது.*

**சந்தையில் விளைபொருளின் விலையை நிலைப்படுத்துவதற்காக என்று முதன்முதலாக 2016-2017 இல் ரூ.6,900 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்போது ராபி பருவப் பயிர்களின் கொள்முதல் விலையை உயர்த்தியிருப்பதாகக் கூறும் நேரத்தில், இத்தொகை ரூ.1,500 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. எனவே மோடி அரசின் அறிவிப்புகளில் நேர்மை இல்லை என்பது புலனாகிறது.**

வேளாண் கடன் 2014-2015இல் 8.5 இலட்சம் கோடியாக இருந்தது; இப்போது 11 இலட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்கிறார், அருண்ஜெட்லி. மொத்த கடன் தொகையில் 86 விழுக்காட்டினராக உள்ள சிறு, குறு உழவர்கள் 41 விழுக்காடு மட்டுமே பெறுகின்றனர். இவர்களுக்கு ரூ.2 இலட்சம் வரையில்தான் கடன் தரப்படுகிறது. மீதி கடன் தொகையைப் பெருநிலவுடைமையாளர்களும், வேளாண் கருவிகளை உற்பத்தி செய்யும் பெருமுதலாளிகளும் பெறுகின்றனர். வேளாண் கடன் தொகை அதிகரிப்பால் உழவர்கள் தற்கொலை தடுக்கப்படவில்லை. கடந்த இருபது ஆண்டுகளில் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட உழவர்கள் கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்டனர்.

20-2-2018 அன்று புதுதில்லியில் "வேளாண் வருமானத்தை 2022ஆம் ஆண்டிற்குள் இரண்டு மடங்காக உயர்த்துவது" என்கிற கருத்தரங்கை பிரதமர் மோடி தொடக்கி வைத்து உரையாற்றினார். 2018-2019ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் உழவர்களின் வருவாயை இரட்டிப்பாக்குவதற்காக என்ற பெயரில் அறிவிக்கப்பட்டுள்ள ஏமாற்றுத் திட்டங்களை உழவர்களிடம்-மக்களிடம் கூவி விற்கத் தொடங்கி விட்டார் நரேந்திர மோடி. 2014 தேர்தல் அறிக்கையில் சொன்னதையே 2019 தேர்தலிலும் கூறி தேர்தல் சந்தையில் வாக்கு வணிகம் செய்ய மோடி அரசு அணியமாகிறது. இந்த மோசடியை உழவர்களுக்கும் மக்களுக்கும் புரிய வைப்பது நமது கடமையாகும்.

# ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை...

- வாலாசா வல்லவன்

**சை**வத்தைப் பரப்புவதற்குப் பாடுபட்டவர்கள் நாயன் மார்கள். இவர்கள் 63 பேர். வைணவத்தைப் பரப்பு வதற்காகப் பாடுபட்டவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் 12 பேர். இதில் ஆண்டாள் என்பவரும் ஒருவராவார்.

ஆண்டாள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாக வரலாற்றில் எழுதியுள்ளனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்பது தமிழகத்தில் களப்பிரர்களை அழித்துவிட்டுப் பல்லவர்கள் கேலோச்சிய காலம். அதாவது சமணத் தையும், பௌத்தத்தையும் அழித்து சைவ, வைணவ சமயங்களைப் புதுப்பிக்கத் தொடங்கிய காலம்.

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பார்ப்பனர்களுக்கு இருந்த உரிமைகள் நீக்கப்பட்டன. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நிலங்கள் பறிக்கப்பட்டு உழு குடிகளுக்குக் கொடுக்கப்பட்டன. எனவே வரலாற்றில் அதை இருண்ட காலம் என்று எழுதிவிட்டனர். குப்தர்கள் ஆட்சி பொற்காலம் என்று படிக்கிறோம். என்ன காரணம்? பார்ப்பனர்களுக்குப் பணமும், பொருளும் வாரிவாரி மன்னரால் வழங்கப்பட்டன. இதிகாசங்களில் இடம் பெற்றிருந்த பெயர்களெல்லாம் ஊர்ப் பெயர்களாக மாற்றப்பட்டன. ஆகவே அது பொற்காலம் என அழைக் கப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால், பார்ப்பனர்கள் சுகமாக இருந்தால் அது பொற்காலம். பார்ப்பனர் களுக்கு தொல்லைகள் இருந்தால் அது இருண்ட காலம் என்று எழுதிவிடுகிறார்கள்.

களப்பிரர் ஆட்சியில் தமிழகம் என்ற நூலை மயிலை சீனி. வேங்கடசாமி சான்றுகளுடன் எழுதி யுள்ளார். நல்ல நீதி நூல்களெல்லாம் அந்தக் காலத் தில்தான் எழுதப்பட்டுள்ளன.

ஆண்டாளுக்கு முந்தைய நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வார் என்பவர், நாகப்பட்டினத்தில் இருந்த பொன்னால் செய்யப்பட்டிருந்த மிகப் பெரிய புத்தர் சிலையைத் திருடி வந்து அதை விற்று, அதனால் கிடைத்த பணத்தால் திருவரங்கம் கோயிலுக்குக் கோபுரம் கட்டினார் என்று அவருடைய வரலாறு கூறுகிறது. (டாக்டர் மா. இராச மாணிக்கனார் - பல்லவர் வரலாறு - பக்கம். 294)

ஆண்டாள் ஒரு துளசிச் செடியின் அடியில் அநாதைக் குழந்தையாகக் கிடந்தவள் என்றும், திருவில்லிப்புத் தூரில் வாழ்ந்து வந்த பெரியாழ்வார் என்னும் வைணவப் பார்ப்பனர், அந்தக் குழந்தையை எடுத்து வளர்த்து வந்தார் என்றும் அவருடைய வரலாற்றில் கூறப்பட் டுள்ளது.

ஆண்டாள் சிறு வயது முதலே கண்ணனையே காதலனாக ஏற்றுக்கொண்டு கோயிலில் எந்த நேரமும்



வழிபாடு செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. ஆண்டாள் எழுதியது திருப்பாவை : முப்பது பாடல்கள். இப்பாடல்கள் இன்றும் மார்கழி மாதத்தில் பசனைப் பாடல்களாகப் பாடப்படுகின்றன. இவர் எழுதிய மற்றுமொரு தொகுப்பு நாச்சியார் திருவாய்மொழி ஆகும். இது 143 பாடல்கள்; கண்ணன் மீது காதல் இரசம் சொட்டச் சொட்ட பாடப்பட்ட பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் முதல் ஆயிரம் பாடல்களில் சேர்க்கப் பட்டுள்ளன. இவருடைய கொள்கையை திருப்பாவை இரண்டாவது பாடலிலேயே விளக்கியுள்ளார். அதாவது, "தீக்குறளை சென்றோதோம்" என்பதாகும். திருக்குறளை முதன்முதலாகத் தீக்குறளாகக் கூறியவர் ஆண்டாள் தான். (அப்படித்தான் செத்துப் போன பெரிய சங்கராச் சாரி பொருள் கூறினார்)

இவர் 15 வயது அடைந்தவுடன் பெரியாழ்வாரின் கனவில் கண்ணன் தோன்றி ஆண்டாளை திருவில்லிப் புத்தூரிலிருந்து அழைத்து வந்து திருவரங்கக் கோயிலில் விடும்படி கூறினாராம். மணமகள் கோலத்துடன் திருவரங்கம் கோயிலுக்குள் அனுப்பப்பட்டவள் வெளியில் வரவே இல்லை; இறைவனோடு அய்க்கியமாகிவிட்டாள் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் என்ற நூலில் கே.கே. பிள்ளையும் இதை உறுதி செய்திருக்கிறார்.

ஆண்டாள் நாச்சியார் இளம் வயதிலேயே திருவரங் கத்துக் கண்ணன் மேல் ஆறாதக் காதல் கொண்டு பல

அகத்துறைப் பாடல்கள் பாடியுள்ளார். அக்காதல் முதிர்ந்து திருவரங்கம் கோயில் கருவறைக்குள் மணப் பெண் கோலத்துடன் நுழைந்து கண்ண பெருமானுடன் கலந்துவிட்டாள் எனக் கூறுவர். (தமிழக மக்கள் வரலாறும் பண்பாடும், டாக்டர் கே.கே.பிள்ளை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (பக்.234).

நந்தனாருக்கு ஏற்பட்ட கதிதான், வள்ளலாருக்கு ஏற்பட்ட கதிதான் ஆண்டாளுக்கும் ஏற்பட்டுள்ளது என்பது தெரிகிறது. நந்தனார் ஆதிதிராவிட விவசாயக் கூலி; ஒரு பார்ப்பானிடம் கூலி வேலை செய்து வந்தார். அவர் சிதம்பரம் சென்று நடராசனைப் பார்க்க ஆசைப்பட்டார். அவர் சிதம்பரம் நகர எல்லைக்குச் சென்று சுற்றிச் சுற்றி வருகிறார். இராசவீதிகளில் ஆதி திராவிடர்கள் செல்ல முடியாத காலம் அது. நடராசன் நந்தன் முன்தோன்றி, தீ வேள்வியில் புகுந்து இவ்வுடலைத் துறந்து பொன்மேனி பெற்று என்னை அடைவாய் என்று கூறினாராம்.

தீமூட்டி அதில் புகுந்த நந்தன் என்ன ஆகியிருப்பார் என்பது அனைவருக்கும் தெரியும். அந்தணக் கோலம் பூண்டு இறைவனடி சேர்ந்தார் என எழுதப்பட்டுள்ளது.

சிவன் கோயிலில் நுழைய தீண்டப்படாத சாதியினர்– ஆதித்திராவிடர்கள் ஆசைப்படக் கூடாது. அப்படி மீறி ஆசைப்பட்டால் எரித்து விடுவோம் என்ற எச்சரிக்கை தான் நந்தனார் கதை. அதை உடைத்தவர்கள் சுயமரியாதை இயக்கத்தினரும், நீதி கட்சியினரும்தான். 1930இல் நந்தன் விழா என்ற பெயரில் சிதம்பரம் இராச வீதிகளில் ஆதித்திராவிடர்களை அழைத்துச் சென்றனர்.

5.4.1929இல் குத்தூசி குருசாமி, ஈரோடு ஈஸ்வரன் கோயிலுக்குள் ஆதித்திராவிடத் தோழர்கள் நால்வரை அழைத்துச் சென்றார். அதற்காக வழக்குத் தொடுக்கப் பட்டு ஈரோட்டில் ஓர் ஆண்டு நடைபெற்றது. அப்போது ஆகமம் தெரிந்தவரை அழைத்து வரச் சென்னார் நீதிபதி. அவ்வாறே அழைத்து வரப்பட்டார். அவர் ஆகமத்தைப் படித்து நீதிபதிக்குக் கூறினார். ஆகமப்படி ஆதித்திரா விடர்கள் சிவன் கோவிலின் உச்சி கோபுர கலசத்தைப் பார்த்து கும்பிட்டாலே மூலவரைப் பார்த்து கும்பிட்டதற்குச் சமம். அவர்கள் கோயிலுக்குள் வரக்கூடாது என்று கூறி னார். கீழமை நீதிமன்றம் 6 மாத தண்டனை விதித்தது. உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

வைரமுத்து முழுக்க முழுக்க ஆண்டாளைப் புகழ்ந்துதான் பேசினார். அவர் ஆண்டாள், தேவதாசி சமூகப் பெண்ணாக இருக்கலாம் என்று அமெரிக்காவில் உள்ள இண்டியானா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரின் ஆய்வை மேற்கோள் காட்டிப் பேசியுள்ளார். பா.ஜ.க.வின் எச்.ராசா இதைப் பிரச்சினை ஆக்கினார். ஏதாவது ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அதை வைத்துக் கொண்டு மதக் கலவரத்தைத் தூண்டி இந்துத்துவா உணர்வையூட்டி ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்பதே



பா.ஜ.க.வின் கனவு. இதற்கு வைரமுத்து பலியாக்கப் பட்டார்.

தேவதாசி முறையை உருவாக்கியவர்கள் யார்? அவர்களுக்குக் காலங்காலமாக ஆதரவாக இருந்தவர் கள் யார்? என்ற வரலாற்றை மறந்துவிட்டு அவர்கள் பேசுகிறார்கள்.

தமிழ்ச் சமூகத்தில் பரத்தையர் ஆதிகாலந்தொட்டே இருந்துள்ளனர். பரத்தை என்கிற சொல் தொல்காப்பி யத்தில் எட்டு நூற்பாக்களில் இடம் பெற்று இருப்பதையும் கற்பு ஆணுக்கு வலியுறுத்தப்படாமல் பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டுள்ளதையும் முனைவர் நர்மதா, தம்முடைய தமிழகத்தில் ''தேவரடியார்–மரபு பன்முகநோக்கு'' என்ற ஆய்வு நூலில் பக்கம் 3இல் கூறியுள்ளார்.

பரத்தையர் என்பது வேறு; தேவதாசி என்பது வேறு. முன்னவர், பணத்திற்காக ஆண்களுடன் கூடுபவர்கள் பின்னவர்கள், கோயில் பணியைச் செய்பவர்கள். சங்க காலத்தில் தேவதாசி முறை நடைமுறையில் இல்லை. ஏன் என்றால் அப்போது பெருங்கோயில்கள் தோன்ற வில்லை.

பல்லவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் தமிழகத்தில் கற்கோயில்கள், பெருங்கோயில்கள் தோன்றின. அப்போதே தேவரடியார் முறையும் தோன்றியுள்ளதை

பல்லவர் வரலாற்றை எழுதிய டாக்டர் மா. இராசமாணிக் கனார் சான்றுகளுடன் எழுதியுள்ளார்.

பல்லவர் காலத்துக் கோயில்களில் இசையும் நடனமும் வளர்க்கப்பட்டன. இவை இரண்டும் சமயத்தின் உறுப்புகளாகக் கருதப்பட்டன. பல கோயில்களில் இவ்விரண்டையும் வளர்க்கப் பெண்கள் இருந்தனர். அவர்கள் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர் முதலிய பெயர்களால் குறிக்கப் பெற்றனர். முத்தீச்சரா கோயிலில் மட்டும் 42 அடிகள்மார் இருந்தனர். திருவொற்றியூர்க் கோயிலிலும் குடந்தை முதலிய பல இடங்களிலும் அடிகள்மார் பலர் இருந்தனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகக் கேயில்களில் அடிகள்மார் இருந்து, இசையையும், கலையையும் வளர்த்துள்ளனர் என்பதைப் பல்லவர் வரலாறு நூலில் பக்கம் 305இல் சான்றுகளுடன் குறித்துள்ளார். (தமிழ் குடிஅரசுப் பதிப்பக வெளியீடு)

பல்லவர்கள் காலம் முதலே தமிழகத்தில் ஆரியப் பார்ப்பனர்கள் வேகமாகப் பரவி உள்ளனர். அரசர்களை ஆட்டி வைத்துள்ளனர். அசுவமேதயாகம் அப்பொழுதே தமிழகத்தில் நடைபெற்றுள்ளது. முற்காலப் பல்லவ மன்னன் சிவஸ்கந்த வர்மன் தன்னை, அக்நிஷ்டோம–வாஜபேய–அஸ்வமேத ராஜ் என்று பட்டயத்தில் குறித்துக் கொண்டுள்ளான். (டாக்டர் மா.இராச மாணிக்கனார் பல்லவர் வரலாறு, பக்.238)

**பார்ப்பனர்களுக்கு தேவதானம் என்ற பெயரில் பெருமளவு நிலங்கள் அப்போது வழங்கப்பட்டுள்ளன. பாரதக் கதை ஊர் ஊராக நடத்தப்பட்டுள்ளது. ஆரியக் கூத்து என்ற பெயரில் நடத்த நிலங்கள் மானியமாக விடப்பட்டுள்ளன.**

புத்தர் திருமாலின் அவதாரம் என்று பல்லவர் காலத் தில்தான் புனையப்பட்டுள்ளது. இறுதியாக பௌத்த சமயம் தேய்ந்து மறைந்தே போயிற்று. புத்தரும் திருமாலின் அவதாரங்கள் பத்தினுள் ஒன்றாகச் சேர்க்கப் பட்டார். (டாக்டர் கே.கே.பிள்ளை, பக்.221)

பல்லவர் காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட சோழர் ஆட்சிக் காலத்தில் பார்ப்பனர் ஆதிக்கம் மிகவும் அதிகரித்தது.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருத்தொண்டுக் காக இராசராசன் நானூறு தேவரடியார்களை அமர்த்தி னான் என்றும், அவர்கள் அனைவருக்கும் தனித் தனி வீதிகள் வகுத்து, அவற்றில் வரிசை வரிசையாக வீடுகள் அமைத்துக் கொடுத்தான் என்றும் தஞ்சாவூர் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. (தமிழக வரலாறு, மக்களும் பண்பாடும் என்ற நூலில் கல்வெட்டு ஆதாரங்களுடன் கே.கே.பிள்ளை சுட்டிக்காட்டி உள்ளார். பக்.336)

கோயில்களில் மார்கழி தோறும் திருவெம்பாவை ஓதப்பட்டு வந்தது. அதற்கெனவே தேவரடியார்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். வைணவத் திருப்பாடல்களாக திருப்பள்ளியெழுச்சியும் திருவாய்மொழியும் பாராயணம் செய்யப்பட்டன. தேவாரத் திருப்பதிகங்கள் ஓதுவதற்குப் பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தன. (மேற்கண்ட நூல் பக்.338)

உண்மை இவ்வாறு இருக்க வைரமுத்து மீது பாய்வது ஏன்?

சோழர்கள் காலத்தில் தேவரடியார்களுக்கு அவர் கள் உடலில் சூலம் பொறிக்கும் வழக்கம் இருந்ததை ஆய்வாளர் நர்மதா கல்வெட்டுச் சான்றுகளுடன் எழுதியுள்ளார்.

தேவரடியார்களுக்கு அவர்கள் திருக்கோயிலைச் சார்ந்தவர்கள் என்பதற்கு அடையாளமாகச் சூலம் இலாஞ்சனையை (இலச்சினை) அவர்கள் உடலில் பொறிக்கும் வழக்கம் இருந்தது. திருவல்லம் உடையார் திருப்பாதத்திலே உதகம் பண்ணித் திரிசூலம் சாட்டித் தேவரடியாக ஆகிவிட்டேன் என்ற செய்தி திருவல்லம் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. (முனைவர் நர்மதா தமிழகத்தில் தேவரடியார் மரபு நூல், பக்.72-73)

பெண்களைக் கோயிலுக்கு பொட்டுக் கட்டும் வழக்கம் மதுரை நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் நடை முறையில் இருந்ததை முனைவர் நர்மதா தன் ஆய்வில் கூறியுள்ளார். (மேற்கண்ட நூல் பக்.75)

சோழ மன்னர்கள் கோயில்களுக்குத் தேவதானம் அளிக்குங்கால், சில சமயங்களில் அவ்வூரிலுள்ள குடிகளையும் அவர்களுக்குரிய பழைய உரிமையோடு அக்கோயிலுக்குக் கொடுத்து விடுவதும் உண்டு. அத் தகைய தேவதானம் அக்காலத்தில் குடி நீங்கா தேவதானம் என்று வழங்கி வந்தது. அதாவது குடிமக்களோடு சேர்த்து கோயிலில் இருக்கும் பார்ப்பனர்களுக்கும் தானமாக வழங்கிவிடுவது. (தி.வை. சதாசிவ பண்டாரத்தார் - பிற்காலச் சோழர் வரலாறு, பக்.528-529, தமிழ்க் குடிஅரசுப் பதிப்பக வெளியீடு)

சோழர் ஆட்சிக் காலங்களில் மக்கள் தங்களை அடிமைகளாக விற்றுக் கொள்ளும் வழக்கம் இருந் துள்ளது.

அக்காலத்தில் ஆண் மக்களும் பெண் மக்களும் செல்வர்களிடத்தும், கோயில்களிலும், மடங்களிலும் தம்மை விற்றுக் கொண்டு அடிமைகளாயிருந்து தொண்டாற்றி வந்தனர் என்பது பல கல்வெட்டுகளால் நன்கறியக் கிடக்கின்றது. கொடிய பஞ்சம் தோன்றி நாட்டு மக்களை வருத்திய காலத்தில் அவர்கள் தம்மையும் தம் குடும்பத்தினரையும் பாதுகாக்க இயலாமல் தங்களை விற்றுக் கொண்டு அடிமைகளாக உயிர் வாழும்படி நேர்ந்தது என்பதைச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுதல் காணலாம். அன்றியும், வழிவழியாக அடிமைகளாக

வாழ்ந்து வந்த குடும்பத்தினரும் உண்டு என்பது சில கல்வெட்டுகளால் புலப்படுகிறது. (பிற்காலச் சோழர் வரலாறு தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், பக்.547)

சோழர்கள் ஆட்சிக் காலத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கமும் இருந்துள்ளது.

பெரும் புகழ் படைத்த முதல் இராசராச சோழனுடைய அருமைத் தாயார் வானவன் மாதேவியார், தம் ஆருயிரனைய கணவனார் சுந்தர சோழனார், காஞ்சி மாநகரில் பொன் மாளிகையில் இறந்த ஞான்று அவ்வரசர் பெருமானைப் பிரிந்து உயிர் வாழ விரும்பாமல் உடன்கட்டையேறி ஒருங்கே மாய்ந்த வரலாறு, திருக்கோவிலூரில் முதல் இராசராசன் ஆட்சிக் காலத்தில் ஆசிரியப்பாவில் வரையப் பெற்ற கீழ்க்கண்ட கல்வெட்டொன்றில் படிப்போர் உள்ளம் உருகக் கூறப்பட்டுள்ளது. (மேற்கண்ட நூல், பக்.544)

மேலும் சில சோழ அரசிகள் உடன் கட்டை ஏறி உள்ளனர். ஆரியப் பார்ப்பனர்களின் பழக்கவழக்கங் களைத் தமிழகத்தில் திணித்தவர்கள் சோழ அரசர்களே. இவர்களைத் தான் புதிய தமிழ்த் தேசியர்கள் புகழ்ந்து வருகின்றனர்.

சங்கராச்சாரியார்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

சங்கரமடங்கள் என்றாலே வர்ண தருமத்தைக் காப்பவர்கள்தான். பௌத்த, சமண மதங்களை அழித்து, இந்து தர்மத்தை நிலை நாட்டவே ஆதிசங்கரன் தோற்றுவித்த சங்கர மடங்களில், காஞ்சி மடம் இல்லை என்பது வரலாறு.

பாரதியார் பகவத்கீதைக்கு உரையெழுதினார். அதன் முன்னுரையில் யாகங்களை அழிக்க வந்த பௌத்த, சமண சமயங்களை சங்காரம் செய்ய சிவபெருமானே ஆதி சங்கரனாக அவதாரமெடுத்தார் என்று எழுதியுள்ளார்.



சங்கராச்சாரிக்குத் தமிழில் பேசினால் தீட்டு ஒட்டிக் கொள்ளுமாம். உடனே குளிக்க வேண்டுமாம். இந்து மதம் எங்கே போகிறது? என்கிற நூலில் அக்னிஹோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரியார்-சங்கராச்சாரியாருடன் நெருக்கமான தொடர்பில் இருந்தவர் அவர், சங்கராச்சாரி யாரைப் பற்றிப்பல செய்திகளைக் கூறியுள்ளார்.

.... இதே பாரும் தாத்தாச்சாரி அவரைப் பார்க்கறதுக்கு நோக்கு ஒண்ணுமில்லை. பார்த்தால் ஏதாவது கேட்பார். பதிலுக்கு நான் தமிழ் பேச வேண்டி வரும். நோக்குதான் தெரியுமே... தமிழ் பேசினால் எனக்குத் தீட்டு, மறுபடியும் ஸ்நானம் பண்ணனும். பூஜைக்கு நேரமாயிடுத்துல்யே... அதனால் நான் மௌனம் அனுஷ்டிக்கிறேன்னு சொல்லி அனுப்பிச் சிடுங்கே'' என்று கூறியுள்ளார். (பக்.102)

தமிழ் பேசினால் தீட்டு எனக் கூறும் சங்கராச்சாரி, தமிழ்நாட்டில் மடத்தை வைத்துக் கொண்டிருக்கலாமா?

தமிழில் பூசை செய்யவும், தமிழன் பூசை செய்வ தையும் சங்கராச்சாரி ஏற்க மறுத்தார் என இராமானுஜ தாத்தாச்சாரியார் கூறியுள்ளார்.

மதுரை ஆதினம் தமிழில் பூசை செய்யவும், தமிழன் பூசை செய்யவும் வேண்டும் என ஒரு கோரிக்கையை சங்கராச்சாரியிடம் முன் வைத்தார்.

சூத்ராள் பூசை பண்றது, அதுவும் தமிழ்ல பண்றது ஏத்துக்க முடியாது என்றார் மகா பெரியவர். (இந்துமதம் எங்கே பேகிறது நூல் பக்.119)

பெண்களுக்கு சொத்தில் பங்கு கொடுக்கக் கூடாது என்ற கொள்கை உடையவர்கள் சங்கராச்சாரியார்கள்.

இதப் பார்த்தீரா... ஸ்தீரிகளுக்கு சொத்துல பாத்யம் கொடுக்கப் போறாளாம். அவாளுக்கு சொத்துல பங்கு கொடுத்தா என்ன ஆகும் தெரியுமா? இஷ்டபட்டவாகூட ஸ்திரீகள் ஓடிப் போய்டுவா. அபாண்டமா, அபச்சாரமா போயிடும் என அந்தப் பேப்பரைக் காட்டியபடி வியாக்யானம் செய்து கெண்டிருந்தார் மகா பெரியவர். (இந்துமதம் எங்கே பேகிறது பக்.110)

சங்கராச்சாரி தமிழை தமிழினப் பெண்களை எப்போதும் மதிப்பதே இல்லை.

தமிழ்த்தாய் வாழ்த்துக்கு, குட்டி சங்கராச்சாரி எழுந்து நிற்காத காரணம் இப்பேது புரிகிறதா?

ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை தமிழ் இனத்தின் பகைவர்களே!

(சென்னையில் 30.1.2018 திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் வாலாசா வல்லவன் நிகழ்த்திய உரையின் சுருக்கம்)

நன்றி : நிமிர்வோம் இதழ் - பிப்ரவரி 2018

# நிதிக்குழுவா?
# ஒன்றிய அரசின் கொத்தடிமையா?

குட்டுவன்

2014இல் பிரதமர் மோடி தலைமையில் பாஜக ஆட்சி அமைந்த பிறகு சொல்வது ஒன்று செய்வது ஒன்று, என்ற வஞ்சகச்செயல் தொடர்கிறது. பிரதமர் மோடி கூட்டுறவுக் கூட்டாட்சியியலைப்(Co-operative Federalism) பின்பற்றுவேன் என்று உறுதி அளித்தார். ஆனால் தன்னிச்சையான பாசிசம்தான் (Unilateral Fascism) ஆட்சியியலில்பின்பற்றப்படுகிறது. மாநிலங் களுடைய உரிமைகளை முடக்கும் செயல் எப்போதும் இல்லாத அளவிற்குத் தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும்போது ஒன்றிய-மாநில நிதி அதிகாரங்களைப் பொறுத்தவரை, எவ்வித மாற்றமும் இல்லாமல் பிரித்தானியா ஆட்சியின் 1935ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்ட அதே பிரிவுகளை 1950ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்திலும் ஏற்றுக்கொண்டார்கள்.இந்த ஆபத்தான போக்கினைப் பல வல்லுநர்கள் எதிர்த்தார்கள். குறிப்பாக அரசமைப்புச்சட்ட அவையில் இடம் பெற்றிருந்த கே.சந்தானம் டி.டி.கிருஷ்ணமாச்சாரி போன்றவர்கள் இந்தப் போக்கினைத் தடுத்து மாநிலங்களுக்கு நிதியைப் பிரித்தளிக்கும் ஓர் அமைப்புத் தேவை என வாதிட்டனர்.

1935ஆம் ஆண்டு சட்டத்தில் உள்ள ஒன்றிய-மாநில நிதிஅதிகாரங்களை அப்படியே தொடர்ந்தால் ஒவ்வொரு மாநிலமும் தில்லி அரசின் கதவைத் தட்டும் பிச்சைக்காரர்களாக மாறும் சூழல் ஏற்படும் என்றனர். மாநிலங்களுக்குக் குறைந்த வருவாயைத் தருகின்ற வரிகளையும் மக்களுக்கு அதிக பணிகளைச் செய்கின்ற பொறுப்பையும், ஒன்றிய அரசிற்கு அதிக வருவாயை ஈட்டுகின்ற வரிகளையும் குறைந்த மக்கள் பணி செய்கின்ற பொறுப்பையும் அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொண்டதால் ஒவ்வொரு மாநிலமும் ஆண்டுதோறும் தங்கள் நிதிநிலை அறிக்கையில் நிதிப்பற்றாக் குறையைச் சந்திக்க நேரிடும் என எச்சரித்தனர்.

இதன் பிறகு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 280 என்ற ஒரு புதிய பிரிவை இணைத்தனர். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை இப்பிரிவின்படி ஒரு நிதிக்குழுவைக் குடியரசுத் தலைவர் அமைப்பார். அக்குழுமாநிலங்களின் நிதிப் பற்றாக்குறையையும் வருவாய் தேவையையும் ஆய்வு செய்யும் நிலை உருவானது. 1950 லிருந்து இதுவரை 14 நிதிக்குழுக்கள் அமைக்கப்பட்டன. 2017 நவம்பர் 27ஆம் நாள் 15வது நிதிக்குழுவை ஒன்றிய அரசு நியமித்தது.

இதுவரை 14 நிதிக்குழுக்கள் பரிந்துரைகள் அளித்த பின்பும் மாநிலங்கள் தொடர்ந்து நிதிச்சிக்கல்களையே சந்தித்து வருகின்றன. இதற்கு முதன்மையான காரணம் மாநிலங்களின் உரிமைகள் படிப்படியாகக் குறைக்கப் படுவதுதான் என்று பல ஆய்வுகளின் புள்ளிவிவரங்கள் சான்று பகர்கின்றன. மேலும் நிதிக்குழுவின் அதிகார எல்லையையும் ஒன்றிய அரசுப் பறித்து வருகிறது. ஒன்றிய அரசிற்கு வரும் வரி வருவாயிலிருந்தும் இரயில்வே கட்டணங்களிலிருந்தும் மானியத் தொகை வழங்குவதற்கு14 நிதிக்குழுக்கள் முயற்சி செய்தாலும் மாநிலத்தின் நிதித்தேவைகள் பெருகிவருகின்றன. மாநிலத்தின் கடனளவும் உயர்ந்து வருகிறது.

மக்கள்தொகையில் 80 முதல் 90 விழுக்காடுகள் என்ற அடிப்படையில் நிதிப்பகிர்வை முதல் மூன்று நிதிக்குழுக்கள் மேற்கொண்டன. சிறந்த முறையில் நிதிதிரட்டும் மாநிலங்களுக்கும் அதன் பங்களிப்பிற்கு ஏற்ப 10 அல்லது 20 விழுக்காட்டு நிதியை இந்த முதல் மூன்று நிதிக்குழுக்கள் அளித்தன. நான்காவது நிதிக்குழுவிலிருந்து நிதிப்பகிர்வு முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. குறிப்பாக மக்கள்தொகை விழுக்காட்டைக் குறைத்து மாநிலங்களின் கடன்சுமை பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை ஆகிய புதிய குறியீடுகளும் இணைக்கப்பட்டன.

இம்மாற்றங்களால் 29 மாநிலங்களில் தமிழ்நாடு உட்பட 6 மாநிலங்கள் தொடர் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றன. குறிப்பாக தமிழ்நாடு மேற்கு வங்கம் மகாராட்டிரா போன்ற மாநிலங்கள் ஒன்றிய அரசிற்கு அளிக்கும் வரி வருவாயின் பங்கு அதிகளவில் உள்ளது. ஆனால் உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார், ஓரிசா போன்ற வட மாநிலங்களில் அந்தந்த மாநிலங்கள் திரட்டும் வரி வருவாய் குறைவாகவேஇருந்து வருகிறது. ஒன்றிய அரசிற்கு வருமான வரி, நிறுவன வருமான வரி, ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி, கலால் வரி ஆகிய வரிகளின் அதிக வரி வருவாயை மகாராட்டிரா, பஞ்சாப், மேற்குவங்கம், தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, குஜராத் போன்ற மாநிலங்கள் ஈட்டித் தருகின்றன. இதன் காரணமாகத்தான் ''பின்தங்கிய என்ற அளவுகோலைப்'' (Backwardness Criteria) பயன்படுத்தி வட மாநிலங்களுக்குத் தொடர்ந்து நிதிக்குழு அதிக வரிவருவாயைப் பங்கிட்டு அளித்து வருகிறது. சான்றாக ஏழாவது நிதிக்குழு, ஜனதா அரசின் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாயால் நீதிபதி சீலாட் என்பவரின் தலைமையில் நியமனம் செய்யப்பட்டது. இந்நிதிக்குழுதான் தனது

சுயாட்சித் தன்மையை உறுதிப்படுத்தியது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டிற்கு நிதிக்குழுவின் பரிந்துரை வழியாக வழங்கப்பட்ட வரிவருவாயின் அளவு சற்று அதிகரித்தது. மொத்த ஒன்றிய அரசின் வரிவருவாயில் 7 விழுக்காடு தமிழகத்திற்கு அளித்தது. மீதம் 93 விழுக்காட்டை மற்ற மாநிலங்களுக்குப் பிரித்து அளித்தது. ஆனால் எட்டாம் நிதிக்குழுவிலிருந்து இந்நிதிப்பகிர்வு தமிழ்நாட்டிற்குப் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது. 14ஆம் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஒன்றிய அரசின் மொத்த வரிவருவாயில் 3.9 விழுக்காடு அளவிற்குத்தான் நிதி ஒதுக்கீடு தமிழகத்திற்குக் கிடைத்தது. சிறப்பான முறையில் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்த மாநிலங்கள் தங்களுக்குள் விதிக்கும் வரிவருவாயைப் பெருக்கிச் சிறந்த நிதி மேலாண்மையைச் செய்த மாநிலங்கள் தொடர்ந்து தண்டிக்கப்பட்டு வருகின்றன.

புதுப்புது அணுகுமுறை என்ற பெயரிலும் புதிய அளவுகோல்களின்படியும் பொருளாதார-சமூகத் தளங்களில் சாதனைகள் படைத்துவரும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் 1990க்குப் பிறகு நடைமுறைப்படுத்தப்பட்ட தனியார்மயம், தாராளமயம், உலகமயம் திட்டங்களால் மோசமான பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு வருகின்றன. இக்கட்டான இச்சூழலிலும் தனியார் முதலீட்டை எந்தெந்த மாநிலங்கள் சிறப்பாக ஈர்த்து வளர்ச்சிப்பாதையில் சென்றதோ அம்மாநிலங்கள் நிதிக்குழுக்களால் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றன. மேலும் பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் மானுட மேம்பாட்டில் முடிவு அடைய வேண்டும் என்பதை உலக அளவில் பல பொருளாதார ஆய்வாளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இதன் அடிப்படையில்தான் ஐக்கிய நாடுகள் மன்றத்தால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் மானுட மேம்பாட்டு அறிக்கைகளில் பல மானுட வளர்ச்சிக் குறியீடுகள் சுட்டப்படுகின்றன. மானுட மேம்பாட்டு அறிக்கைகளின் அடிப்படையில் இந்திய அரசின் திட்டக்குழு 2001இல் ஒரு மானுட மேம்பாட்டு அறிக்கையையும்ஒன்றிய அரசு 2011இல் ஒரு மானுட மேம்பாட்டு அறிக்கையையும் வெளியிட்டன.

இவ்வறிக்கைகளின் குறியீடுகளின்படியும் ஐக்கிய நாடுகள் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளின்படியும் வறுமை ஒழிப்பிலும் கல்வி, பொதுச்சுகாரத்தை அனைத்துப் பிரிவினருக்கு அளிப்பதிலும் தாய்-சேய் பாதுகாப்பை அளிப்பதிலும் குழந்தைகளின் இறப்பு விழுக்காட்டைக் குறைப்பதிலும் ஊட்டச்சத்தினைப் பள்ளிச் சிறார்களுக்கு வழங்குவதிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதிலும் சாலை மேம்பாடு, மின் இணைப்பு உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை அளிக்கும் நாடுகள் மாநிலங்கள் இனம் கண்டு தரவரிசைப் பட்டியல் உருவாக்கப்படுகின்றன. மாநிலங்களுக்கான தர வரிசையில் 1980க்குப் பிறகு இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு முதல் மூன்று இடங்களுக்குள் தொடர்ந்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் மனித மேம்பாட்டு அறிக்கைகளின்படி இந்தியா 188 நாடுகளின் தர வரிசைப்பட்டியலில் 134 இடத்தைப் பெற்றுள்ளது.

**இத்தகைய பொருளாதார, சமூக மேம்பாட்டுக் குறியீடுகளைப்புறக்கணித்து மீண்டும் மீண்டும் இந்தி பேசும் வட மாநிலங்களுக்குத் தொடர்ந்து அதிக நிதிப்பகிர்வினைச் செய்து தென்னக மாநிலங்களுக்குத் தொடர் வஞ்சனையை ஒன்றிய அரசு இழைக்கிறது.**

15ஆம் நிதிக்குழுவை அமைத்த விதமே கண்டனத்துக்குரியது. கடந்த 14 நிதிக்குழுக்களின் தலைவர்கள் பெரும்பாலும் அரசியலில் பங்கேற்ற முன்னாள் மாநில முதல்வர்களாகவும், நிதியியல் வல்லுநர்களாகவும், நீதிபதிகளாகவும் இருந்து செயல்பட்டுள்ளனர். ஆனால் தற்போது அமைக்கப்பட்டுள்ள 15ஆம் நிதிக்குழுவிற்கு ஒன்றிய அரசின் பணியிலிருந்து ஓய்வுப்பெற்ற கே.என்.சிங் தலைவராகவும், திரு.சக்திகாந்ததாஸ் முழுநேர உறுப்பினராகவும் ஒன்றிய அரசின் முன்னாள் பொருளாதார ஆலோசகர் அசோக் லகரியும் நிதிஆயோக் அமைப்பின் உறுப்பினர் ரமேஷ் சந்த் பகுதி நேர உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக நடைமுறையில் பெரும் தோல்வியைத் தழுவி நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவிற்கு வித்திட்ட உயர்பண மதிப்பு நீக்க நடவடிக்கையின் போது கண்மூடித்தனமாக இத்தோல்வியுற்ற செயலை விழுந்து விழுந்து ஆதரித்தவர் திரு.சக்திகாந்ததாஸ் ஆவார். தற்போது அரசமைப்புச் சட்டப்பிரிவின்படி இயங்குகிற நிதிக்குழு-ஒன்றிய அரசின் நிர்வாகப் பணியாளர்களின் ஆணையமாக (From Quasi Judicial Body to Full-Fledged Bureaucratic Body) மாற்றப்பட்டுவிட்டது. இதைவிடக் கொடுமை என்னவென்றால் நிதிக்குழு எந்தெந்தப் பரிந்துரைகளை வழங்கும் என்பதை நிர்ணயம் செய்யும் ஆய்வு வரையறையை (Terms of Reference) ஒன்றிய அரசின் நிதித்துறையே முடிவு செய்து அறிவித்துவிட்டது. ஒன்றிய-மாநில உறவுகளை ஆய்வு செய்த நீதிபதி சர்க்காரியா குழுவும் நீதிபதி இராஜமன்னார் குழுவும் ஒன்றிய மாநில உறவுகளைப் பாதிக்கும் எல்லாவித முதன்மையான பிரச்சினைகள் குறித்து மாநிலங்களுக்கிடையேயான மன்றம்தான் (Inter-StateCouncil-Article 263) முடிவு செய்ய வேண்டும் என்ற பரிந்துரையை வலியுறுத்தின. பிரதமரும் மாநில முதல்வர்களும் ஒன்றிய அரசின் நிதி அமைச்சரும் இக்குழுவில் இடம் பெறுவதால் நிதிக்குழு அமைக்கப்படுவதற்கு முன்பே மாநிலங்களின் நிதிப்பிரச்சினைகளை அறிந்து, அதற்கேற்ப தீர்வு காணக்கூடிய ஓர் ஆய்வு வரையறையை முடிவு செய்ய வேண்டும் என்று பல நிதியியல் வல்லுநர்கள் தொடர்ந்து குறிப்பிட்டு வருகின்றனர். இதையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு சர்வாதிகார

அரசு செயல்படுவதுபோல் ஓர் அரசமைப்புச் சட்டத்தின் கீழ், இயங்கும் நிதிக்குழுவைத் தற்போது மோடி அரசு சிறுமைப்படுத்தி இருக்கிறது.

**15வது நிதிக்குழுத் தனது ஆய்வு வரையறையில் 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையில்தான் நிதிப்பகிர்வு மேற்கொள்ளப்படும் என்று கூறியிருப்பது மக்கள்தொகை கட்டுப்பாடு திட்டத்தைச் சிறப்பாகக் கடைப்பிடித்துவரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் மீது விழுந்த பேரிடியாகும். 1971ஆம் ஆண்டு புள்ளி விவர அடிப்படையில்தான் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் நிதிப் பகிர்வை யும் செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட சட்டத்திருத்தத்திற்கு எதிராகவும் இம்முடிவு அமைந்துள்ளது.**

2011ஆம் ஆண்டின் மக்கள்தொகை புள்ளி விவரங்களை எடுத்துக்கொண்டால் பத்தாண்டுகளின் சராசரி மக்கள்தொகை வளர்ச்சி உத்திரப்பிரதேசத்தில் 20.1, ம.பி. 20.3, ராஜஸ்தானில் 20.4, ஜார்கண்டில் 22.3, சத்திஸ்கரில் 22.6, பீகார் 25.1 வளர்ச்சி விகிதம் அமைந்துள்ளன. ஆனால் ஆந்திராவில் 11.1 பஞ்சாப் 13.7 மேற்கு வங்கம் 13.9 ஒரிசா 14 தமிழ்நாடு 15.6 கர்நாடகா 15.7 எனப்பத்தாண்டுகளில் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் மிகக் குறைவாக உள்ளன. மேற்கூறிய மக்கள் தொகை அடிப்படையில் நிதிப்பகிர்வு செய்யப்படு மானால் 6 மாநிலங்கள் பெருமளவில் நிதிக்குழுவின் பரிந்துரைகளால் பாதிக்கப்படும்.

சரக்கு-சேவை வரிவிதிப்பு நடைமுறைக்கு வந்த பிறகு, ஜுலை 2017 தொடங்கி நவம்பர் 2017 வரை ஒன்றிய அரசு விதிக்கும் சரக்கு-சேவை வரி வருவாயில் தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும் மகாராஷ்டிரா முதல் இடத்திலும் இருந்தன. மாநிலங்கள் விதிக்கும் சரக்கு-சேவை வரி வருவாயில் மகாராஷ்டிரா முதல் இடத்திலும் தமிழகம் இரண்டாம் இடத்திலும் உள்ளன. குஜராத் சட்டமன்றத் தேர்தல் வந்தபோது 120 பொருட்களின் மீது திடீரென்று அரசியல் நோக்கோடு நான்கு அடுக்கு வரிமுறைகளான 5, 12, 18, 28 விழுக்காட்டின் வரி அளவைக் குறைத்ததன் காரணமாக 2017 டிசம்பர் மாதத்திற்குப் பிறகு தமிழ்நாடு உட்பட மாநிலங்களின் வருவாய் சரிந்து வருகின்றன. இது போன்ற முதன்மையான வரி வருவாயில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை உரிய முறையில் ஒன்றிய அரசிற்கு எடுத்துச் சொல்ல வல்லுநர்கள் என்று சொல்பவர்கள் தயங்குகின்றனர். ஊடகங்கள் நடுநிலையாக இயங்கி இவ்வுண்மைகளை மோடி அரசுக்கு எடுத்துரைக்க அஞ்சுகின்றன.

மாநிலங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட வரிகளைத் தாங்களே விதித்து தங்கள் வரி வருவாயின் அளவை முன்பே தெரிந்து கொண்டால்தான் சரியான முறையில் வரிவருவாயை ஆய்வுசெய்து, மக்கள் நலத்திட்டங்களை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்க முடியும், செயல் படுத்தமுடியும். மேலும்மாநிலங்கள் விதிக்கின்ற வரிகளை ஒவ்வொன்றாக ஒன்றிய அரசு எடுத்துக்கொண்டு தேர்தல் அரசியல் கண்ணோட்டத்தோடு வரி விகிதங்களை மாற்றி அமைப்பது மாநிலங்களை நிதித்துறையில் தள்ளாட வைக்கும் தீய செயலாகும். கூட்டாட்சி இயலுக்கும் ஜனநாயகத்திற்கும் முழுமையாக உலை வைக்கும் செயலாகும்.

இதுவரை மோடிக்கு அடிமையாகயிருந்த துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஒன்றிய அரசின் நிதியமைச்சகக் கூட்டத்தில் நிதிக்குழுவால் தமிழக அரசிற்குக் கிடைக்கும் நிதியின் அளவு மிக மோசமான அளவிற்குக்குறைந்து வருகிறது என்றும், 13ஆவது 14ஆவது நிதிக்குழுக்கள் பரிந்துரைகளின்படி தமிழ் நாட்டிற்கு வரவேண்டிய நிதி இன்னும் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஒன்றிய அரசுத் துறைகளால் அறிவிக்கப்படும் திட்டங்கள் வழியாக அளிக்கும் தொகையின் அளவும் குறைந்து வருவதால் இதை ஈடுசெய்வதற்குத் தற்காலிக சிறப்பு மானியத்தை அளிக்க வேண்டும் என்றும் பன்னீர் செல்வம் வலியுறுத்தியுள்ளார். தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட வேண்டிய ஒன்றிய அரசின் திட்டங்களுக்குத் தொகையையும் தமிழகத்திற்கு வர வேண்டிய மானியத்தையும் உடனடியாக அளிக்க வேண்டும் என்று ஒப்பாரி வைக்கிறார். ஒன்றிய அரசால் தமிழ்நாடு பெருமளவு பாதித்துள்ளது என்பதைத்தமிழகத் துணை முதல்வரின் அறிக்கைகள் உறுதி செய்கின்றன.

2018ஜனவரி 19 அன்று கூடிய சரக்கு-சேவை வரி குழுக் கூட்டத்தில் 29 பொருட்களின் வரியையும், 59 சேவைகளுக்கான வரியையும் குறைத்துள்ளார்கள். இந்த வரிக்குறைப்பு தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களையோ வழங்கும் சேவைகளையோ கணக்கில் எடுத்துக்கொண்டு குறைக்கப்பட்டதாகக் கருத முடியாது. இது போன்ற ஒன்றிய அரசின் தன்னிச்சையான செயல்களை அடுக்கிக்கொண்டே போகலாம். தமிழ்நாடு எல்லாத்துறைகளிலும் எல்லா வகைகளிலும் வஞ்சிக்கப்படுகிறது. இந்திய ஒன்றியத்தின் கீழ்த் தமிழ்நாடு இயங்குகிறதா? அல்லது பாகிஸ்தான் (மோடி மொழியில்) அரசின்கீழ்த் தமிழ்நாடு இயங்குகிறதா? என்ற கேள்வியும் எழுகிறது.

தமிழ்நாடு அரசு தனது மோடி இயக்கத்திலிருந்து தெளிந்துதென் மாநிலங்கள் அல்லது பாதிப்புக்குள்ளாகிற மாநிலங்களின் முதல்வர்கள் இணைந்து ஒரு பொதுவான அணுகுமுறையை 15ஆவது நிதிக்குழுத் தனது பரிந்துரைகளை வழங்குவதற்கு முன்பு பின்பற்ற வேண்டும். காவிரியின் நீர் அளவு குறைக்கப்பட்டது போல தமிழ்நாட்டு நிதியாதாரமும் சிதைக்கப்பட்டால் இந்தியாவில் தமிழ்நாடு தன்மானமற்றுத்தொடர வேண்டுமா?

# பார்ப்பன ஆதிக்க சமற்கிருதத்தை விரட்டியடிப்போம்

- க.முகிலன்

சென்னையில் உள்ள இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் (ஐ.ஐ.டி) தன்னுடைய பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநாட்டும் தன்மையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டத்தின் மாணவர்கள் ஐ.ஐ.டி. வளாக அரங்கில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி மறுத்தது. இந்திய அளவில் இதற்கு எதிர்ப்பு ஏற்பட்ட பிறகே ஐ.ஐ.டி. நிர்வாகம் அனுமதி அளித்தது. கடந்த ஆண்டில் ஐ.ஐ.டி.யில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மாட்டுக்கறி விருந்து நடத்திய போது இந்துத்துவ மாணவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இந்த இந்துத்துவ மாணவர்கள் மீது ஐ.ஐ.டி. நிருவாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

26.2.2018 அன்று சென்னை ஐ.ஐ.டி.யில் நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் நிதின் கட்காரி “சகார் மாலா” திட்டத்தின் ஒரு பகுதியாகத் தேசிய தொழில்நுட்ப மய்யம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டிய விழாவில் சமற்கிருத மொழியில் “மகா கணபதி” எனும் இறை வணக்கப் பாடல் பாடப்பட்டது. ஐ.ஐ.டி.யில் படிக்கும் சில மாணவர்கள் இதைப் பாடினர். இந்த விழாவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த நடுவண் அரசின் இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணனும் கலந்து கொண்டார்.

தமிழ்நாட்டில் நடைபெறும் அரசு விழாக்களில் தொடக்கத்தில் “நீராடும் கடலுடுத்த” எனும் தமிழ்த் தாய் வாழ்த்தும் இறுதியில் தேசிய கீதமும் இசைக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு 1970இல் பிறப்பித்த ஆணையே பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதைப் புறக்கணிக்கும் நோக்கத்துடனேயே சமற்கிருதத்தில் மகாகணபதி எனும் இந்துமதம் சார்ந்த பாடல் பாடப்பட்டுள்ளது. 2018 சனவரியில் சென்னையில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடிய போது காஞ்சி சங்கரமடத்தின் விஜயேந்திர சங்கராச்சாரி தமிழ் மொழியை அவமதிக்கும் வகையில் அமர்ந்து கொண்டிருந்தார். இதற்கான எதிர்ப்பு ஓய்வதற்குள் சென்னை ஐ.ஐ.டி.யில் தமிழைப் புறக்கணித்து சமற்கிருத ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் நிகழ்ச்சி நடந்துள்ளது.

சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் பாஸ்கர் இராமமூர்த்தி, “மாணவர்களாக முன்வந்து சமற்கிருதத்தில் மகாகணபதி பாடலைப் பாடினார்கள். இதைப் பிரச்சனையாக்க வேண்டாம்” என்று அறிக்கை வெளியிட்டுள்ளார். இந்திய அரசமைப்புச் சட்டம் மதச்சார்ப்பற்றது என்று உச்சநீதிமன்றத்தில் பல்வேறு தீர்ப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் படிக்கும் கல்வி நிறுவனத்தில் இந்துமதக் கடவுள் வாழ்த்தைப் பாடலாமா? ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி என்ற கொள்கையைக் கொண்ட இந்துத்துவத்தைப் பரப்புவதுதான் உயர்கல்வி நிறுவனத்தின் குறிக்கோளா?




*பார்ப்பன ஆதிக்க சமற்கிருத்தை சென்னை ஐ.ஐ.டி. நிருவாகம் அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்துக்குத் தடை விதித்தைக் கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்*

ஐ.ஐ.டி. இந்திய அரசின் நிறுவனம் என்றும், தமிழ் மாணவர்கள் 32 பேர் மட்டுமே உள்ளனர் என்றும் அதனால் தமிழ்வாழ்த்துப் பாடவேண்டியதில்லை என்றும் இந்துத்துவ வாதிகள் வாதிடுகின்றனர். இந்திய அரசின் கல்வி நிறுவன மாயினும் தமிழ்நாட்டில் இருப்பதால், ஏழரைக் கோடித் தமிழர்களின் உணர்வை மதிக்கும் வகையில் தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடவேண்டும் என்பதே சனநாயக நெறியாகும்.

இந்திய அளவில் சில ஆயிரம் பேர் மட்டுமே சமற்கிருதத்தைத் தங்கள் தாய்மொழியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பதிவு செய்துள்ளனர். ஆனால் 2016இல் நடுவண் அரசு அறிவித்துள்ள தேசியக் கல்விக் கொள்கை பள்ளிகள்



ஐ.ஐ.டி.யில் பாட்டுக்கறி விருந்து நடத்தியற்காக இந்துத்துவ வெறியர்களால் தாக்கப்பட்ட மாணவர்

முதல் பல்கலைக் கழகங்கள் வரை சமற்கிருத மொழியைக் கற்பிக்கச் செய்யவேண்டும் என்று கூறுகிறது. இந்திய ஆட்சி என்பது பார்ப்பன மேலாதிக்க ஆட்சியாகும். பார்ப்பன ஆதிக்கத்திற்கான வலிமையான ஆயுதம் சமற்கிருத மொழியில் மதச் சடங்குகளை நடத்துவதாகும். எனவே பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்திட சோதிபா புலே-அம்பேத்கர்-பெரியார் காட்டிய வழியில் சமற்கிருத புரோகிதச் சடங்குகளை விட்டொழிக்க வேண்டும்.

# ஆங்கில மருத்துவமும் முதலாளித்துவ உற்பத்தி முறையும்

- இராமியா

ஆங்கில மருத்துவ (அலோபதி) முறையின் "கொடூர" இயல்பைப் பற்றி முகநூலிலும், செய்திப் புலனத்திலும் நம் அறிவு ஜீவிகள் பரபரப்பான விவாதங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களின் விவாதங்களைக் கேட்டால் இந்த ஆங்கில மருத்துவ முறை மனித குலத்தின் வளர்ச்சியைக் கெடுப்பதற்கு என்றே வளர்த்து எடுக்கப்பட்டதோ என்று தோன்றும். இது உண்மையா? ஒரு சிறு விபத்து நடந்தால் இந்த அறிவு ஜீவிகள் ஆங்கில மருத்துவ முறையை நாடாமல் இருக்க முடியுமா? அப்படியானால் உண்மையான பிரச்சினை என்ன? இந்த அறிவு ஜீவிகளைப் புலம்ப வைக்கும் உண்மையான காரணம் என்ன?

உண்மையில் ஆங்கில மருத்துவ முறையில் எந்த விதமான தவறும் இல்லை என்பது மட்டும் அல்ல; மற்ற எல்லா மருத்துவ முறைகளைக் காட்டிலும் ஆங்கில மருத்துவ முறை தான் பரந்த அளவில் மனித குலத்திற்குப் பயன் தரக் கூடியது. அது மக்களின் வெறுப்புக்கு உள்ளாகக் காரணம் நோய்க்கு ஏற்பச் சிகிச்சை செய்யாமல், ஒருவனின் செலவழிக்கும் வலுவிற்கு ஏற்பச் சிகிச்சை செய்யத் தூண்டும் முதலாளித்துவ உற்பத்தி முறையே.

தொழிற்புரட்சியின் வெற்றியில் முதலாளித்துவ சமூகம் அமைந்த பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது உழைக்கும் மக்கள், எந்திரங்கள் தான் எதிரிகள் என நினைத்து அவற்றை எல்லாம் உடைத்தார்களாம். ஆனால் அவற்றைப் பழுது பார்த்து அல்லது மீண்டும் உற்பத்தி செய்து சமூக இயக்கம் தொடர்ந்தது. கார்ல் மார்க்ஸ், எந்திரங்கள் பிரச்சினை அல்ல; அவற்றை முதலாளித்துவ உற்பத்தி முறையில் கையாளுவது தான் பிரச்சினை என்று கூறினார். பல சோசலிசவாதிகள் தாங்கள் புதிய சமூகத்தை அமைக்கும் போது எந்திரங்களை ஒழித்து விடுவோம் என்று கூறினர். ஆனால் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினோ எந்திரங்களை ஒழிக்க முடியாது / கூடாது என்றும், அவற்றை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினர்.

அதுபோல் தான் ஆங்கில மருத்துவத்தையும் நோக்க வேண்டும். இம்மருத்துவ முறை பழக்கத்திற்கு வந்த பின் தான் மனிதனின் ஆயுள் வரம்பு அதிகரித்து உள்ளது. சராசரி ஆயுள் காலமும் அதிகரித்து உள்ளது. மேலும் இரண்டு தலைமுறைகளுக்கு முன் அறுபது வயதானவர்கள் என்றால் பழுத்த கிழவர்களாகத் தெரிவார்கள். ஆனால் இப்பொழுது அப்படி இல்லை. இதற்கு முக்கிய காரணம் ஆங்கில மருத்துவ முறை தான். இன்று கியூபா மருத்துவத் துறையில் அனைத்து நாடுகளுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது என்றால் அது ஆயுர் வேத, சித்த, நாட்டு வைத்திய முறையினால் அல்ல., ஆங்கில மருத்துவ முறையினால் தான். அங்கு முதலாளித்துவ முறையில் செயல்படாமல், மக்கள் நலனுக்காகச் செயல்படுவதால், அந்நாட்டு மக்கள் மட்டும் அன்றி, உலக மக்கள் அனைவராலும் போற்றப்படுகிறது.

நம் உடலியக்கம் அறிவியலுக்கு அப்பாற்பட்டது என்று இந்த அறிவு ஜீவிகள் கூறுகிறார்கள்.

இது ஏற்புடையது அல்ல. மனிதன் அறிவியலின் மூலம் அனைத்தையும் தெரிந்து கொண்டு விட்டான் என்று கூற முடியாது தான். ஆனால் தொடர்ந்து மேலும் மேலும் தெரிந்து கொள்ள முயன்று கொண்டே இருக்கிறான். அவன் தெரிந்து கொள்ளும் செய்திகளும் மேலும் மேலும் செம்மையாகிக் கொண்டே வருகின்றன. ஆகவே உடலியக்கம் அறிவிலுக்கு அப்பாற்பட்டது என்பது ஏற்புடையது அல்ல.

நம் உடல் இயற்கை விதிகளின்படி இயங்குகிறது. ஒவ்வொருவரின் உடலியக்கமும் ஒவ்வொரு மாதிரி இயங்கு கிறது. உலகில் எந்த இருவரின் உடலியக்கமும் ஒன்றுபோல் இருக்காது. இதை ஆங்கில மருத்துவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்வது இல்லை என்று இந்த அறிவு ஜீவிகள் கூறுகிறார்கள்.

ஒவ்வொருவருடைய உடலியக்கத்திலும் வேறுபாடு உள்ளது என்பதை ஆங்கில மருத்துவர்கள் கூறவே செய் கின்றனர். அவர்களுள் உள்ள நல்ல (அதாவது முதலாளித்து வத்தின் கோரப் பிடியில் மோசமாகச் சிக்கியிராத) மருத்துவர்கள் இதைக் கூறவே செய்கின்றனர். அதற்காக அதைப் பற்றித் தெரிந்து கொள்ளவே முடியாது என்று கூறுவதும், இதை ஆங்கில மருத்துவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்வது இல்லை என்று கூறுவதும் ஏற்புடையது அல்ல.

உலகின் ஒவ்வொரு மூலையில் உள்ள மனிதனும், வெவ்வேறு தட்பவெப்ப நிலை, வெவ்வேறு உணவுப் பழக்கம், வெவ்வேறு உணவு உண்ணும் முறை, வெவ்வேறு கலாச்சாரம், வெவ்வேறு மரபணுக் கட்டமைப்பில் இருக்கிறான். இது உண்மையானால் ஒவ்வொரு மனிதனின் உடலியக்கமும் தனித் தன்மையுடையதாகத் தானே இருக்கும் என்று இந்த அறிவு ஜீவிகள் கூறுகிறார்கள்.

இது உண்மை தான். கொடியவர்கள் இதைக் கணக்கில் கொண்டு கொடிய நச்சு ஆயுதங்களையும் உற்பத்தி செய் கிறார்கள். பிரச்சினை ஆங்கில மருத்துவத்தில் அல்ல. அதை முதலாளித்துவ உற்பத்தி முறையில் கையாளும் போதுதான்.

இன்னும் இது போல் எத்தனையோ எடுத்துக்காட்டுக்களை இந்த அறிவு ஜீவிகள் காட்டுகின்றனர். அவை அனைத்தையும் பகுப்பாய்வு செய்து பார்த்தால், பிரச்சினை ஆங்கில மருத்துவ முறையில் அல்ல; அது முதலாளித்துவ உற்பத்தி முறையில் செயல்படுவதால் தான் என்று தெரிய வரும்.

ஆகவே நாம் முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழித்துக் கட்டப் போராடுவது தான் சரியாக இருக்கும். அப்படி அல்லாமல் ஆங்கில மருத்துவத்திற்கு எதிராகப் போராடினால், அதில் உள்ள நல்ல கூறுகளை எடுத்துக் காட்டி, நாம் சொல்வது தவறு என மக்களை நம்ப வைக்க முதலாளித்துவ அறிஞர் களுக்கு இடம் கொடுக்கும் தவறைச் செய்தவர்கள் ஆவோம்.

# 10 ஆயிரத்துக்கும் குறைவான மக்களால் பேசப்படும் தனித்தனி 42 இந்திய மொழிகள், விரைவில் அழியக்கூடும்

**- வே.ஆனைமுத்து**

பத்தாயிரத்துக்கும் குறைவான மக்களால் பேசப்படுகிற 42 இந்தியத் தனித்தனி மொழிகள் விரைவில் மறையக் கூடும்.

இந்திய அரசியல் சட்டப்படி, அண்மையில் எடுத்த மக்கள் தொகைக் கணக்குப்படி இந்தியாவில் அட்டவணைப்படுத் தப்பட்ட மொழிகள் 22 ஆகும். அட்டவணைப்படுத்தப்படாத மொழிகள் 100க்கும் மேல் உள்ளன.

இந்த அட்டவணைப்படுத்தப்படாத 100 தனித்தனி மொழியையும்-ஒரு இலட்சம் பேர் அல்லது ஒரு இலட் சத்துக்கும் சற்றுக்கூடுதலான எண்ணிக்கையுள்ள பேர்களே பேசுகிறார்கள்.

இவற்றுள், 42 தனித்தனி மொழியையும் 10 ஆயிரத் துக்கும் குறைவான மக்களே பேசுகின்றனர். அப்படிப் பேசப்படும் 42 இந்திய மொழிகளும் விரைவில் வழக் கொழிந்துபோகும் ஆபத்து உள்ளதாக, இந்திய உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் அறிவித்து இருக்கிறார். ஐக்கிய நாடுகள் கல்வி பண்பாட்டுக் கழகம் (UNESCO) இந்த 42 இந்திய மொழிகள் அல்லது மொழிப் பிரிவுகள் (Dialects) விரைவில் மறையக் கூடும் என்றும் ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது.

அந்தப் பட்டியலில் கண்டுள்ளபடி, அந்தமான் நிக்கோபர் தீவுகளில் பேசப்படும் - பெரிய அந்தமனீஸ், ஜரவா, லமங்சே, லூரோ, லூமூவட், ஓங்கே, பூ, சனேன்யோ, செட்டிலீஸ், ஷாம்பென், தக்கஹானி லேங் ஆகிய 11 மொழிகளும்; மணிப்பூர் மாநிலத்தில் பேசப்படும் ஐமோல், ஆகா, கொய்ரென், லம்காங், லங்ராங், புரம், தாரோ ஆகிய 7 மொழிகளும்; இமாச் சலப்பிரதேசத்தில் பேசப்படும் பாகதி, ஹந்துரி, பங்வலி, சிர்மௌதி ஆகிய 4 மொழிகளும் அழியக்கூடும்.

அழியக்கூடிய மொழிகள் பட்டியலில் ஒடிசா மாநிலத் தில் மண்டா, பர்ஜி, பெங்கோ ஆகிய மொழிகளும்; கர்நாடகா மாநிலத்தில் கொரகா, குருபா ஆகிய மொழிகளும்; ஆந்திரப் பிரதேசத்தில் கடபா, நைகி ஆகிய மொழிகளும்; தமிழ்நாட்டில் கோடா, தோடா ஆகிய மொழிகளும், அருணாசலப் பிரதே சத்தில் மரா, நா ஆகிய மொழிகளும்; அசாம் மாநிலத்தில் தைநோரா. தைராங் ஆகிய மொழிகளும்; உத்தரகாண்ட் மாநிலத்தில் பங்கனி மொழியும், ஜார்கண்ட் மாநிலத்தில் பிர்ஹோர் மொழியும், மகாராட்டிரா மாநிலத்தில் நிஹாலி மொழியும், மேகாலயா மாநிலத்தில் ருகா மொழியும், மேற்குவங்க மாநிலத்தில் டோடோ மொழியும் மறையும் நிலையில் உள்ளன.

மேலே கண்ட 42 தனித்தனி இந்திய மொழி களும் வழக்கொழிந்து போகாமல் காப்பாற்றுவதற்கு, கர்நாடகத்தில் மைசூரில் செயல்பட்டுவரும் ''இந்திய மொழிகளுக்கான மய்ய அரசு மய்யம்'' நடவடிக்கை எடுத்து வருகிறது; இதற்கான திட்டங்களும் தீட்டப்பட் டுள்ளன என்று மைசூர் மய்ய நிறுவன்த்தின் அலுவலர் ஒருவர் குறிப்பிட்டார் (The Hindu, 19.2.2018, பக்கம் 7).

**இம்மொழிகள் விரைவில் வழக்கொழிந்து அழியப் போவதைத் தடுக்க விரைந்து செயல்படாமல், இன் றைய இந்திய அரசு, ஒரே மொழி - ஒரே தேசம் - ஒரே பண்பாடு என்று முழங்கி இந்தியையும், சமஸ்கிருதத்தையும் வலுக் கட்டாயமாகப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் பாடத்திட்டங் களிலும் அரசு அலுவலகங்களிலும் திணித்து வருவது கண்டிக்கத்தக்கது.**

**அழிவை நோக்கி உள்ள 42 இந்திய மொழிகளின் எழுத்துகளை முதலில் மய்ய அரசு காப்பாற்ற வேண்டும்; அடுத்து அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் தங்கள் மொழியில் பேசவும் பள்ளியில் பாடம் படிக்கவும் மய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்; மாநில அரசுகளும் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.**

## நெல்லையில் த.ஒ.வியின் வழக்குரைஞர் செம்மணி காவல் துறையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து பத்திரியாளர் சந்திப்பு




நெல்லையில் செயல்பட்டு வரும் த.ஒ.வி.யின் வழக்குரைஞரும் மனித உரிமை ஆர்வலருமான செம்மணி அவர்களைக் காவல்துறையினர் நள்ளிர வில் வீடுபுகுந்து கடுமையாகத் தாக்கி உள்ளனர். கைகால்கள் முறியுமளவுக்கு தாக்குதல் நடைபெற் றுள்ளது. இதைக் கண்டித்து நெல்லை மாவட்ட வழக்குரைஞர்கள் வேலைநிறுத்தம் உட்பட பலப் போராட்டங்கள் நடத்திய பின்பும் தாக்குதல் நடத்திய நெல்லை காவல் துறையினர் மீது எவ்வித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை. நெல்லை காவல்துறை யினர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பல அமைப்புகளின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்ட பத்திரிகையாளர் சந்திப்பு 23.2.2018 மாலை 4 மணிக்கு பொழிலன் தலைமையில் சேப்பாக்கம் பத்திரிக்கையாளர் சங்க அரங்கில் நடைபெற்றது. த.வேல்முருகன், தியாகு, அரங்க குணசேகரன், வாலாசா வல்லவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இந்துத்துவச் சூழலில் பெரியாரின் இன்றைய தேவை

மு.ப. சதாசிவம், சேலம்

சுற்றும் குதிரைகள் குளம்படி
சுற்றிலும் கேட்கிறது – அதில்
பற்றும் நெருப்புப் பொறியினிலே
ஓர் பாதை தெரிகிறது.

**வி**டுதலை பெற்ற இந்தியாவில் சாதியமும் பண நாயகமும், சனநாயகமாகிப் போன காலம். தற்போது நாட்டை ஆண்ட பேராயக் கட்சி (காங்கிரசு) மதவாத நெருப்பை அணைக்கவில்லையானலும் மதச்சார்பு அற்ற கொள்கை கொண்டிருப்பதாய்ப் பறைசாற்றியது.

காந்தியப் படுகொலைக்குப் பிறகு பல்வேறு வடி வெடுத்த மதவாதம், படிப்படியாய் ஏற்றம் கண்டு பாசிசப் பெருவடிவாய் மத்தியில் கோலோச்சுகிறது. கலப்புப் பொருளாதாரமென தொடங்கிய நேரு ஆட்சி, பின்னர் சோனியா காலத்தில் தனியார் மயம், தாராள மயம், உலக மயம் என உருக்கொண்டது. முகவரை மாற்றும் மக்களாட்சியில், ‘‘பொருள் உங்களுக்கு இந்துத்துவம் எங்களுக்கு’’ எனும் பெருமுதலைகளின் பேரத்தில், ‘மோடி’ முகவராய் அடையாளம், பெற்றார். ஒரே நாடு, ஒரே மதம், ஒரே சட்டம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே அடையாளம் என்ற முழக்கத்தோடு இலட்சிய பாசிசம் நீட்டும் நச்சுக்கரங்களில் பட்டும் படாமல் தமிழ் நாட்டு (நடைமுறை) அரசியல் அமைப்புகள் நல்லுறவு பேணுகின்றன.

தமிழ், தமிழர், தமிழ்ப் பண்பாடு, சமூக நீதி என்பவை கொலைக் களத்திற்குக் காத்திருக்கின்றன. உலகமயம், அனைத்திற்கும் தீர்வல்ல. பன்முக சமு தாயத்தின் வேர்களைக் கெல்லியெறியும் கோடரி என்று பெரும்பான்மை தமிழ்ச் சமூகம் உணரும் நிலை யில் இல்லை. ஒரு சமுதாயம் பட்டினி கிடப்பினும் உயர்ந்த விழுமியங்களைக் கொண்டிருப்பின் அதனை அடிமைப்படுத்த முடியாது. எனவே, விழுமியங்களை விழுங்கும் பாசிச மதவாதம், தமிழ் மண்ணில் வேரூன்ற, கிளை பரப்ப அனுமதித்தலாகாது என்று உணரச் செய்ய வேண்டும். இதனை யார் செய்ய வல்லவர் எனில், மார்க்சியப் பெரியாரியக் கோட்பாட்டாளர்களே என்று தெளிவுற முடியும்.

**பெரியார் ஒரு கலகக்காரர்**

அறிவு உயர்வு தரும் என அனைவருக்கும் கல்வி வேண்டினோம். பின் கல்வி கடைச்சரக்கு ஆயிற்று. வாங்கிய பொருளை விற்க முடியாத சிறு வியாபாரி போல, படித்த படிப்புக்கு வேலை கிடைக்காத இளை ஞர்க்கு உலகமயம் வழிகாட்டும் என்றனர். தேசம் துறந்த - மக்களை மறந்த - மானுடமற்ற எந்திர வாழ்வு கிட்டியோர் போக, எஞ்சியோர் எட்டாத உயரத்து கிட்டாத வேலைக்கு ஆளாய்ப்பறந்து பொழைக்கத் தெரியாத பசங்களாய்ப் பரிதவிக்கும் மண்ணிதில், கண்ணீர்த் துளிகளும் காட்டாத சமத்துவத்தை, காணப் பெரியாரியம் வழிகாட்டும்,

ஆர்க்கின்ற முரசங்கள், விம்முகின்ற தாரைகள், கொம்பு, குழல், மத்தளங்கள் இசையெழுப்ப, காவித் தோரணங்கள் கருப்பு, சிவப்பு பதாகைகளோடு உயரப் பார்க்கின்றன. தன்னையே நோக்கியப் பார்வையை திருப்ப வேண்டிய தமிழரினம், வடவருக்கு வால் பிடிக் கும் காலமிது. கிளர்ச்சிப் பெரியார், கலகப் பெரியார், கருத்துப் பெரியார், களம் கண்ட பெரியார், முன்னெப் போதைக் காட்டிலும், இப்போது தேவைப்படுகிறார்.

**அம்பேத்கரியப் பெரியார்**

பெரியாரியச் சிந்தனைகளை. அம்பேத்கரியத்தைப் பின்பற்றும் சிந்தனையாளர்களும் மற்றும் இயக்கங் களும் ஏற்றுக்கொள்வதில் இன்னமும் தயக்கமிருப்பி னும், அம்பேத்கரது பங்களிப்பை அவர் தம் கருத்து களைப் பெரியார் காலந்தொட்டே திராவிடர் கழகம் ஏற்றும் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. ‘இரட்டை வாக்குரிமையை’க் கைவிடக் கோரி காந்தி நடத்திய உண்ணாநோன்புக்காக, பெற்ற உரிமையை இழக்க வேண்டாம் என அம்பேத்கருக்கு துணிவுடன் சொன்ன வர் தந்தை பெரியார் என்ற உண்மையிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடையூறு அற்ற சம வாய்ப்பு வேண்டும் என்ற நிலைப்பாட்டில் முனைப்புக் காட்டிய வர் என்பதை யாரும் மறக்க இயலாது.

பெரியாரது இரஷிய நாட்டுப் பயணமும் அதற்கென அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும் அங்கிருந்த தொழிற்சாலைகளையும், தொழிலாளர் உணவுக் கூடங்களையும் நேரில் பார்த்தறிந்த அவர், 1932 ‘மே தின’ விழாவில் சிறப்புப் பார்வையாளராகப் பங்கேற்று நாடு திரும்பினார். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையையும் வெளியிட்டார். பின்னாளில் ‘பகத் சிங்கின்’ நான் ஏன் நாத்திகனானேன் எனும் கட்டுரையையும் வெளியிட் டார். இவற்றினின்று அவருக்கிருந்த பொதுவுடைமை அமைப்புப் பார்வை வெளிப்படுகிறது. பெரியாரின் மறைவுக்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து பொது வுடைமைக் கட்சியினர் பெரியார் ஒரு ‘கலகக்காரர்’ எனப் பெயர் சூட்டி ஏற்றுக் கொண்டனர்.

காங்கிரசு பல பிரிவுகளான போதும் பெரியாரின் பங்களிப்பை யாரும் மறுப்பது இல்லை. சங்கப் பரிவார் அமைப்புகளைத் தவிர்த்த அனைத்துத் தமிழ்நாட்டுக் கட்சிகளும், தன்னாட்சிக் கோரும் தமிழ்த்தேசிய இயக் கங்களும் பெரியாரை ஏற்கின்றன; பாராட்டுகின்றன; ஆனால், பெரியாரின் சாதி ஒழிப்பு, சமற்கிருத எதிர்ப்பு, பெண் விடுதலை இவற்றை முன்னெடுத்துச் செல்வதில், நடைமுறை அரசியல் பார்வை கொண்டிருப்பதால் தயங்கித் தவிர்த்து விடுகின்றனர். இருபெரும் திராவிடக் கட்சிகள், அண்ணாவை மேற்கோள் காட்டவே தயங்கு கிற சூழலில், கலைஞருக்குப் பிறகு பெரியார் எனும் கருத்துப் பிம்பம் காப்பாற்றப்பட வேண்டிய வரலாற்றுக் கடமை பெரியாரிய இயக்கங்களை நம்பியிருக்கிறது.

**பெரியாரின் பெரும் பற்றாளர்**

ஆனால் பெரியாரிய இயக்கங்கள் கருத்தளவில் ஒன்றுபட்டாலும், செயலளவில் வேறுபட்டிருக்கின்றன. தந்தை பெரியாரது திராவிடர் கழகத்தை வழிநடத்தும் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் 80 அகவைகளைக் கடந்தவர். வாய்ப்பும் வசதிகளும் பெற்ற அமைப்பின் முன்னோடியான அவர் மற்றவர்களை அழைக்க வேண்டிய அவசியமில்லாமிருக்கலாம்.

பெரியாரது மிகச்சிறந்த தோழர் சிந்தனையாளர் அய்யா வே. ஆனைமுத்து அவர்கள், சமூக நீதிச் சுடரை வடபுலத்து மாநிலங்களில் ஏற்றி வைத்து மண்டலை நடைமுறைப்படுத்தி, கமண்டலத்தைக் கதறச் செய்தவர். அகவை 93-ஐத்தாண்டி இன்றும் அயராது பணியாற்றுபவர். சிறியதொரு அறக்கட்டளை வழி பெரியாரியல் கல்வி வகுப்புகளை நடத்தி, இளையோரிடம் பெரியார் பற்றிய புரிதலையும், பற்று தலையும் உருவாக்கி வருபவர். மார்க்சிய, அம்பேத் கரியப் புரிதலோடு, பெரியாரது சிந்தனைகளுக்கு வலுவூட்டுபவர்.

பல்வேறு இடர்ப்பாடுகள், தளைப்பாடுகள் இருப்பினும், தமிழ், தமிழர், பெரியார் எனும் பேராண்மையோடு தனித்து இயக்கம் கண்டவர் பெரியாரியத் தொண்டர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள். விடுதலைப் புலிகள் பெயரை உச்சரிக்க அஞ்சிய காலத்தில் அவர் களுக்கு உற்ற துணையாய் நின்று, "தடா" சட்டம் கண்டு மீண்டவர். இளைஞாகள் ஏற்கும் தோழராய் இன்றும் வலம் வரும் இவரை எல்லாக் கட்சியினரும் அடையாளங்கண்டு அங்கீகரிக்கின்றனர்.

செயல்பாட்டு வடிவில் தன்னுணர்வோடு, நினைத் ததை நடத்திக் காட்டும் திறம் படைத்த அரசியல் செயல் வீரர் தோழர் கோ. இராமகிருஷ்ணன், மக்கள் விரோத நடவடிக்கையினை மற்றவர்கள் அறிக்கை வழியே கண்டிக்கும் வேளையில், உடனடிப் போராட்டத்தின் வழியே தமது இயக்க எதிர்ப்பை உணர்த்திடும் தடுமாற்றமில்லாச் சிந்தனையாளர்.

**விடுதலைக் களம்**

இவர்களது அனைவரது களமும், பெரியாரியப் போராட்டச் சிந்தனை களம். எது வரினும் அஞ்சாத விழுமியங் கொண்ட பெரியார் வீழ்ந்து விடவில்லை. தமிழ்க் களப் போராட்டத்தில் உயிர் வாழ்கிறார் என ஒவ்வொருவரும் உணர்த்தும் உயிர்ப் பொருள் என லாம். இவர்களது களங்கள் வெவ்வேறாயினும், எண் ணிக்கை எத்தனையானாலும் தமிழர் நலம், அறிவியல் சார்ந்த அணுகுமுறை, வீழ்த்த முடியாத விவேகம், இவற்றால் இவர்கள் தாம் இன்று பெரியாரின் வழித் தோன்றல்கள். இவர்களை ஒட்டித்தான் பெரியாரியம் இம்மண்ணில் உயிர்த்திருக்க முடியும். முத்துக்குமாரும், செங்கொடியும் இன்னும் பல இளங்குருத்துகளும் ஈகம் செய்த இம்மண்ணில் இன்றைய சூழலில் பெரியாரி யமே வலிமை மிக்க ஆயுதம். மாறிய சூழலில் அது கூர்மைப்படுத்தப்பட வேண்டும்; பல்கிப் பெருக வேண்டும்.

**வரலாற்றுக் கடமை**

காலம் உங்களிடம் ஒன்றைக்கோரும் போது அதனை தட்டிக்கழித்துப் புறக்கணித்துவிட முடியாது. மகத்தான மனிதர்கள் மகத்தான கனவுகள் கொண்டி ருந்தால் மட்டும் போதாது. மகத்தான காரியங்களை நிகழ்த்திக் காட்டி, வரலாற்றில் பதிவு பெற வேண்டும். பெரியார் எனும் மகத்தான ஆளுமையின்றி, இரு பதாம் நூற்றாண்டு தமிழ்நாட்டு சரித்திரம் அமையாது. இருபத்தி ஓராம் நூற்றாண்டு கூட, பெரியாரது கருத்தா ளுமையைக் கோருகிறது. பெரியார் வழித்தோன்றல் களும் அவர்களது செயல்பாட்டு ஒற்றுமையின்றியும் அக்கோரிக்கை நிறைவுறாது. எனவே, பெரியாரிய இயக்கங்கள் மன வேறுபாடுகளை மறந்து, ஒருங்கி ணைந்திடல் காலத்தின் கட்டாயம். எல்லா இயக்கங் களும் இணைந்து ஓரியக்கமாக, உரத்தக் குரலில் இக்காலத்திற்கேற்ற, மதவாத, பாசிச அமைப்புகளுக்கு முடிவு கட்டவும், நடைமுறை அரசியலாளர் நடை திருத்தவும், தமிழகத்து மண்ணில் நாட்டோர் நலம் காக்கும் நல்லரசியலுக்கு மட்டுமே இடமுண்டு எனும் புதிய பிரகடனம் ஒன்றை வெளியிட வேண்டும். அந்த நாள் நாட்டை பீடித்திருக்கும், நச்சுக்கிருமிகளுக்கு முடிவு கட்டும் முதல் நபராய் இருக்க வேண்டும். அதற்கு மார்க்சியப் பெரியாரிய இயக்கத்தார் நால்வரும் மற்றும் பெரியார் பெருந்தொண்டர்களும் இதற்கான கருத்தொரு மித்தலைத் திட்டமிடுங்கள் என, பெரியாரின் பெயரால் தலைதாழ்த்தி வேண்டுகிறேன்.

எனவே பெரியாரியச் சிந்தனையாளரின் பார்வை யும் பரிசீலனையும் வேண்டி இந்த வேண்டுகோளை விடுக்க விழைகின்றேன்.

# புரட்சியாளர் அம்பேத்கர்

மரு.க.சோமாஸ்கந்தன்

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

**பூனா ஒப்பந்தம்:-**

வட்டமேசை மாநாடு முடிவுற்றதும் காந்தி 1931 டிசம்பர் 28 அன்று இந்தியாவிற்குப் புறப்பட்டார். ஆனால் அம்பேத்கர், தான் கல்வியில் உயரம் தொடக்காரணமாக யிருந்தப் பேராசிரியர்களை நன்றியுடன் கண்டு உரை யாடிட 1931, டிசம்பர் 5 ஆம் நாள் நியுயார்க் சென்றார். பின் 1932 சனவரி 4 ஆம் நாள் லண்டன் திரும்பினார் சனவரி 15 அன்று டாக்டர் அம்பேத்கரும் முஸ்லீம் தலைவர் மௌலானா ஷவுகத் அலியும் லண்டனிலிருந்து கிளம்பி சனவரி 29 அன்று பம்பாய் வந்தடைந்தனர்.

பரேலில் அம்பேத்கருக்கு வரவேற்பு கூட்டம் அதில். அம்பேத்கர் உரையாற்றினார். ஒரு கொள்கையின் வெற்றிக்கும் தோல்விக்கும் அதன் தலைவர் மட்டும் காரணமாக இருப்பதில்லை.; தொண்டர்களின் பேரா தரவும் ஒத்துழைப்பும் காரணமாகும், என்றார். மேலும், நான் காந்தியை எதிர்க்கின்றேன். அதற்காகவே என்னைத் துரோகி என்றழைக்கிறார்கள் காங்கிரஸ் கட்சியினர். இது ஆதாரமற்றது. உங்களுடைய அடிமைத் தளைகளை அகற்றுவதற்குக் காந்தியே மிகக் கடுமை யாக எதிர்ப்பைக் காட்டியிருப்பதை அறிந்து உலகமே அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறது. என்று கூறினார்.

அம்பேத்கர் லண்டனிலிருந்தபோது காந்தியை 4, 5 முறை சந்தித்தார்., காந்தி தன் கையில் புனித குரான் நூலை எடுத்துக்கொண்டு இரகசியமாக ஆகாகான் இருப்பிடத்திற்குச் சென்றார்; அந்த முஸ்லீம் தலைவரைத் தீண்டப்படாத மக்களுக்கு அளித்து வரும் ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி னார் காந்தி.. அதற்கு ஆகாகான் இணங்க மறுத்து விட்டார் என்ற செய்தியை அம்பேத்கர் வெளிப்படுத்தினார். காந்தியைத் தெய்வாம்சம் உள்ளவராகக் கருதாதீர்கள்; மனிதனைத் தெய்வாம்சமாகக் கருதுவதை எதிர்ப்பவன் நான் என்று அம்பேத்கர் கூறினார். இதுவரை அம்பேத் கரின் எண்ணங்களுக்கும் முயற்சிகளுக்கும் செயல்களுக் கும் உறுதுணையாக நின்ற தீண்டப்படாத இனத் தலைவர் எம்.சி. இராஜா, இந்துமகாசபைத் தலைவர் டாக்டர் மூஞ்சேயுடன் இணைந்து, தனி ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதி வேண்டும் என்ற கோரிக்கையினைத் தந்தி மூலம் பிரிட்டிஷ் பிரதமருக்குத் தெரிவித்தார். இது அம்பேத்கரை இக்கட்டான நிலைக்குத் தள்ளியது.

இதனால் அம்பேத்கர் 1932 மே 26 அன்று லண்ட னுக்குப் புறப்பட்டுச் சென்றார். சூன் 7 அன்று லண்டன் சென்றடைந்தார், வகுப்புச் சிக்கல் பற்றிய அரசின் முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் பிரிட்டிஷ் பிரதமரையும், மற்ற அமைச்சர்களையும் சந்தித்துத் தன் கோரிக்கை களை அவர்களிடம் விளக்கினார். அதன்பின் ஆகஸ்டு 17ஆம் நாள் பம்பாய் வந்தடைந்தார்.

1932 ஆகஸ்டு 20 அன்று பிரிட்டிஷ் பிரதமர் இந்தியாவின் வகுப்புப் பிரச்சினைக்கான தீர்ப்பினை வழங்கினார். அத்தீர்ப்பின் படி, தீண்டப்படாத மக்களுக்கு மாநிலச் சட்ட சபைகளில் தனி இட ஒதுக்கீடும், தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்குரிமையும், பொதுத்தொகுதியில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க மற்றொரு வாக்குரிமையும், ஆக 2 வாக்குரிமைகள் வழங்கப்பட்டிருந்தன.

காந்தி இந்தியாவுக்குத் திரும்பியதும் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். 1932 சனவரி 4ஆம் நாள் கைது செய்யப்பட்டார். 1932 மார்ச் தொடக்கத்தில் காந்தி எரவாடா சிறையிலிருந்து, தீண்டப்படாத மக்களையும் சாதி இந்துக்களையும் பிரிக்கின்ற எந்தவொரு முயற்சி யையும் என் உயிரைக்கொடுத்தேனும் தடுப்பேன் என்று பிரிட்டிஷ் அமைச்சரவைக்குத் தெரிவித்திருந்தார்.

வகுப்புவாரித் தீர்ப்பில் தீண்டப்படாத மக்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி வழங்கப்பட்டிருந்தது. ஆகவே அதனை எதிர்த்து காந்தி உண்ணா நோன்பினை அறிவித்து விட்டார். ஆனால் வகுப்புவாரி அடிப்படையில், கிறித்தவர்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள தனித் தொகுதி பற்றிக் காந்தி எதிர்ப்புக் காட்டவில்லை. எனவே காந்தியின் உண்ணாவிரதம் நேர்மையற்றது. மேலும் இலண்டனில் சிறுபான்மை யினர் குழுவின் கடைசிக் கூட்டத்தில் வகுப்புவாரிச் சிக்கலில் இறுதி முடிவு எடுக்கும் தனி அதிகாரத்தைப் பிரிட்டிஷ் பிரதமருக்கு அளிக்கும் உறுதிமொழிப் பத்திரத் தில் காந்தியும் கையெழுத்திட்டிருந்தார். ஆகவே காந்தியும் பிரிட்டிஷ் பிரதமரின் வகுப்பு வாரித் தீர்ப்பிற்குக் கட்டுப் பட்டவரே. ஆகவே காந்தியார் நேர்மையின்றி உண்ணா நிலையை மேற்கொண்டார்..காந்தியார் சுதந்திரம் வேண்டியோ, தீண்டாமை ஒழிப்பிற்கோ உண்ணா நிலையை மேற்கொள்ளவில்லை.

சிக்கலுக்குத் தீர்வுகாணவும், காந்தியைக் காப்பாற்றிட வும் வேண்டி செப்டம்பர் 19 ஆம் நாள் பம்பாயில் இந்துத் தலைவர்கள் கூடி அம்பேத்கருடன் பலசுற்றுகள் உரை யாடியும், காந்தியுடன் பலமுறை கலந்து பேசியும் ஒரு முடிவுக்கு வந்தனர். கலந்துரையாடலில் கலந்து கொண்ட

வர்கள் டாக்டர் மதன்மோகன் மாளவியா, டாக்டர் சோலங்கி, சர் தேஜ்பகதூர் சாப்ரு, ஜெயகர், இராஜாஜி, டாக்டர் ராஜேந்திரபிரசாத் முதலானோர்.

பூனா ஒப்பந்தம் கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தது. மாநில சட்டசபைகளில் 148 இடங்களைத் தீண்டப்படாத மக்களுக்கு ஒதுக்கப்பட்டது. மத்திய சட்ட சபையில் பிரிட்டிஷ் இந்தியாவில் இந்துக்களுக்கென உள்ள மொத்த இடங்களில் 10 விழுக்காட்டைத் தீண்டப்படாத மக்களுக்கு ஒதுக்குவது என்று முடிவானது. கருத்துக் கணிப்பு கட்டாயம் இருக்கவேண்டும். ஆனால் அது 5 ஆண்டு களானதும் நடத்தப்படவேண்டும் என்று காந்தி கூறினார். 5 ஆண்டுகள் அல்லது என் உயிர். இதுவே என் முடிவு என்று உறுதியுடன் காந்தி கூறினார். ஆனால் அம்பேத்கர் கருத்துக்கணிப்பு எடுக்கும் காலம் குறைந்தது 10 ஆண்டுகளாவது இருக்கவேண்டும் என்றார். இறுதியாக, கருத்துக்கணிப்பு எப்போது நடத்துவது என்ற காலவரை யறையைக் குறிப்பிடாமல் ஒப்பந்தம் செய்து கொள்வது என்பதை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டனர். இந்த முடிவினை இராஜாஜி காந்தியிடம் கூறினார். காந்தி அந்த முடிவினை ஏற்றுக்கொண்டார். 1932 செப்டம்பர் 24 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஒப்பந்தம் கையெழுத் தானது. தீண்டப்படாதார் சார்பில் அம்பேத்கரும் இந்துக் கள் சார்பில் மதன்மோகன் மாளவியாவும் கையெழுத் திட்டனர். பூனா ஒபந்தத்திற்கு பிரிட்டிஷ் அரசு ஒப்புதல் அளிக்குமாறு பாராளுமன்றத்திற்கும் பரிந்துரைக்கப் போவதாக செப்டம்பர் 26, 1932 இல் பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. அன்று மாலை ஐந்தரை மணிக்கு எரவாடா சிறையில் கஸ்தூரிபாய் ஆரஞ்சு சாறினைக் காந்திக்குக் கொடுத்து உண்ணா நோன்பினை முடித்து வைத்தார்.

வெளி நாட்டுச் சுற்றுப் பயணத்திலிருந்த தந்தை பெரியார் காந்தியார்-அம்பேத்கர் பிரச்சினையை அறிந்ததும் அம்பேத்கருக்குத் தந்தி கொடுத்தார்: கோடிக்கணக்கான தீண்டப்படாத மக்களின் உரிமையை விட ஒரு தனி நபர் முக்கியமில்லை. உங்கள் உறுதி யான நிலையிலிருந்து பின் வாங்க வேண்டாம், என்று! இருந்தும் அம்பேத்கர் சம்மதித்துவிட்டார்.

டாக்டர் அம்பேத்கர் போன்று எந்த ஒரு மனிதனும் இக்கட்டான நிலைக்கு ஆளானதில்லை. ஒரு புறம் மகாத்மா காந்தியின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை; மறுபுறம் தீண்டத்தகாத மக்களின் நலன் களைக் காத்திட வேண்டிய நிலைமை என இருவேறுபட்ட பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியக் கட்டாயத்தில் அம்பேத்கர் சூழ்நிலைக் கைதியாக இருந்தார். இறுதியில் காந்தி, இராஜாஜி, சாப்ரு ஆகியோரின் ஒத்துழைப்போடு ஒப்பந்தம் நிறைவேறியது.

இதன் பின் மூன்றாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 1932 நவம்பர் 7ஆம் நாள் அம்பேத்கர் இங்கிலாந்திற்குப் பயணமானார். அப் பயணத்தின்போது தீண்டாமை எதிர்ப்புக்கழகத்தின் பொதுச் செயலாளர் தாக்கருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதில், சட்டத்தினாலோ அல்லது தேர்தல் சட்டத்திருத் தத்தின் மூலமோ தீண்டப்படாதவர்களையும் உயர் சாதி இந்துக்களையும் ஒன்றுபடுத்திவிட முடியாது. தீண்டப்படா தவர்களின் மனித உரிமைகளை ஏற்கும் மனமாற்றம் சாதி இந்துக்களுக்கு ஏற்படவேண்டும் என்று குறிப்பிட்டி ருந்தார். நவம்பர் 17 ஆம் நாள் மூன்றாவது வட்டமேஜை மாநாடு தொடங்கி நடைபெற்றது. போரினால் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவினால் பிரிட்டிஷ் மக்கள் உற்சாக மின்றி பங்கேற்றனர் இந்திய உறுப்பினர்களிடையே ஒருங்கிணைப்பில்லை. எந்தவொரு முடிவுமின்றி மா நாடு 24-12-1932 அன்று முடிவடைந்தது.

1933 இல் பாம்பேயில் வாழ்வதற்கு அம்பேத்கர் தன் மேற்பார்வையில் ஒரு வீடுகட்டி முடித்தார். அவ்வில் லத்திற்கு இராஜகிரகா என்று பெயரிட்டார். அங்கே தனது செந்த நூலகத்தை நிறுவினார். அந்த நூலகத்தி.ல் 50,000 க்கும் அதிகமான புத்தகங்களை வைத்திருந்தார்.

அவரது மனைவி ரமாபாய் நீண்ட கால உடல் நலிவிற்குப் பிறகு 27-5-1935அன்று மண்ணுலகை நீத்தார். மனைவியின் மறைவால் ஆறாத்துயருற்ற நிலையில். பொது வாழ்க்கையிலிருந்தே. முழுவதுமாக விலகிடலாமா என்று எண்ணினார்.

1-6-1935 இல் பம்பாயில் அமைந்திருந்த அரசு சட்டக் கல்லூரியின் தலைவராகப் பணியில் அமர்த்தப்பட்டார். இந்தப் பதவியில் அவர் இரண்டு ஆண்டுகளே பணியில் இருந்தார்.

**மதம் மாறும் நோக்கம்:-**

நாசிக்கில், இயோலா நகராட்சி, 13-10-1935 அன்று முற்பகலில் அம்பேத்கருக்கு வரவேற்பளித்தது. அதன் பின் அன்று நடைபெற்ற இயோலா மாநாட்டில் அம்பேத் கர், தான் இந்து மதத்தைவிட்டு வேறு மதத்தைத் தழுவ இருக்கின்ற தனது எண்ணத்தை அறிவித்தார். இந்து மதத்திலுள்ள சமத்துவமின்மை தான் என் முடிவிற்குக் காரணம். நான் சிலை வணக்கத்தை எதிர்ப்பவன். மூட நம்பிக்கைகளை எதிர்த்து வருபவன். இந்துவாகப் பிறந்தது என் தவறல்ல; அது கெட்டவாய்ப்பு; தடுக்கவிய லாதது. அதனால் மனித அபிமானமற்ற அந்த மதத்தில் வாழ மறுப்பது என் முடிவில் தான் இருக்கிறது. ஆகவே நான் இந்துவாகச் சாகமாட்டேன் என்றார்.

இந்த அறிவிப்பிற்குப் பின் சீக்கிய, இஸ்லாமிய, கிறித்துவ மதத் தலைவர்கள் அம்பேத்கரைக் கண்டு தங்கள் மதத்தில் சேரும்படி வேண்டினர். அதன் பின்னர் பம்பாயில் அம்பேத்கர் தங்கியிருந்த ஓரிரு நாள்களில் இந்து மிஷனரித் தலைவர் மாதர்க்கா மகராஜ் என்பவர்

அம்பேத்கரைச் சந்தித்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்தை விட்டு விலகிவிட்டால் இந்து மதம் அழிந்து விடுமே என்று வருத்தப்பட்டார், அதற்கு நான் என்ன செய்யமுடியும்? என்று அம்பேத்கர் கேட்டார். நீங்கள் தான் வழி சொல்லவேண்டும், என்றார் மகராஜ். 'குறிப்பிட்ட காலத்திற்குள் தீண்டாமையை ஒழிப்பதாக இந்து மதத் தலைவர்கள் உறுதி கொடுக்கட்டும்' என்றார் அம்பேத்கர். அது எளிதல்ல, இருந்தாலும் நீங்கள் முடிவைத் தள்ளி வைத்து அறிவியுங்கள், என்றார் மகராஜ் இந்துக்கள் மனம் மாறுவதானால் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் கூடக் காத்திருக்கத் தயார். ஆனால் இந்துமதத் தலைவர் நல்லெண்ணத்தைக் காட்ட, மிகவும் நல்லவர் என்று கருதப்பட்ட கே. கே. சகத் என்ற தாழ்த்தப்பட்டவரை மராட்டிய உயர் சாதியினர் சங்கராச்சாரி பீடத்துக்கு ஓராண்டுக்கு மட்டும் அனுமதித்து தங்கள் மனமாற்றத்தைக் காட்டவும் சமவாய்ப்பை ஏற்கவும் அந்தத் தாழ்த்தப்பட்ட சங்கராச் சாரியாரின் காலில் விழிந்து வணங்குவார்களா? என்று அம்பேத்கர் கேட்டார்..மகராஜ் பதில் ஏதும் கூறவில்லை.

மதமாற்ற அறிவிப்பினை அம்பேத்கர் வெளியிட்ட சில நாள்களில், மைசூர் அரசு தசராப் பண்டிகையில் தீண்டப்படாதவர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கியது. திருவிதாங்கூர் அரசு, தீண்டப்படாதவர்கள் அரசின் ஆளுகைக்குட்பட்ட 1600 கோயில்களில் சென்று வழிபட லாம் என்று அறிவித்தது.

லாகூரில் ஜாட்பட் தோடக் மண்டலத்தார் (சாதி ஒழிப்பு சங்கத்தார்) நடத்தவுள்ள மா நாட்டிற்குத் தலைமை ஏற்க 12-12-1935 இல் அழைத்தனர். அம்பேத்கர் தலைமை யேற்பதை சனாதனிகள் எதிர்த்தனர். ஆகவே மாநாட்டைத் தள்ளிவைத்தனர். அம்பேத்கர் பேசத் தயாரித்த உரை யில் சில வாசகங்களை மாற்றும்படிக் கேட்டனர். அதற்கு அம்பேத்கர் மறுத்துவிட்டார். அந்த மாநாடும் ரத்து செய்யப் பட்டது. ஆனால் அம்பேத்கர் தன் தலைமை உரையை ''சாதி ஒழிப்பு'' என்று தலைப்பிட்டு நூலாக 15-5-1936 இல் வெளியிட்டார். இந்த நூலை பெரியார் தமிழில் மொழி பெயர்க்கச் செய்து வெளியிட்டுப் பெருமை சேர்த்தார். இந்து மதத்தைச் சேர்ந்த மதத் தலைவர்களையும், பொதுவாக சாதியத்தையும் கடுமையாக விமர்சித்தார், இந்த விஷயத்தில் காந்தியையயும் கண்டித்துள்ளார். பின்னர், 1955 பிபிசி பேட்டி ஒன்றில், குஜராத்தி மொழி இதழ்களில் சாதியத்தை ஆதரித்தும், ஆங்கில மொழி இதழ்களில் சாதி முறையை எதிர்த்தும் காந்தி எழுதி யுள்ளார் என்று அம்பேத்கர் குற்றம் சாட்டினார்

**சுதந்தரத் தொழிற்கட்சி:-**

15-8-1936 இல், அம்பேத்கர் சுதந்தர தெழிலாளர் கட்சியை நிறுவினார், நிலமற்றவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், குத்தகைதாரர்கள் ஆகியோருடைய உடனடித் தேவைகளை நிறைவேற்ற செயல்படுதல் அதன் குறிக்கோளாகும். சமுதாய மாற்றத்திற்காகவும். மூட நம்பிக்கை ஒழிப்பிற்காகவும், கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுவதும் அதன் நோக்கங்களாகும். 1937 பிப்ரவரி 17 ஆம் நாள் பம்பாய் சட்டமன்றத் தேர்தலில் அக்கட்சி 15 இட ஒதுக்கீட்டு இடங்களுக்கும், 4 பொது இடங்களுக்கும் போட்டியிட்டு 17 இடங்களில் வெற்றியடைந்தது. காங்கிரஸ் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றது என்றாலும் ஆட்சியமைக்கத் தயக்கம் கொண்டது. எனினும். 1937 ஜுலை 19ஆம் நாள் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். அன்று மாலை சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கள் பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசமாக இருப்பதாக உறுதி மொழி கூறிப் பதவியேற்றனர். அம்பேத்கர் பகவத்கீதையின் பெயரால் உறுதி மொழி கூற மறுத்துவிட்டுக் கண்ணியமான முறையில் உறுதிமொழியை ஏற்றார்.

1937 இல் அம்பேத்கர் தலைமையில் விவசாயிகள் பேரணி சட்டசபை நோக்கிச் சென்றது. விக்டோரியா டெர்மினஸ் அருகில் இருந்த எஸ்பிளனேடு திடலை அடைந்தது. 20 பேர் ஒரு குழுவாகச் சென்று பம்பாய் மாநில முதல்வரைச் சந்தித்துக் கோரிக்கையைக் கொடுத்தனர், விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை அமல்படுத்த வேண்டும் என்றும், நிலவரிப் பாக்கியை வசூலிப்பதைத் தள்ளி வைத்திருப்பது போல் குத்தகைப் பாக்கியையும் தள்ளிவைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர். கோட்டி நிலஉரிமையையும், இனாம்தார் முறையையும் ஒழித்திட சட்டம் கொண்டு வரவேண்டும் என்றும் நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கோரினர். சிறு நில உரிமையாளர் களுக்கு நீர்ப்பாசனத் தீர்வையைப் பாதியாகக் குறைக்கவேண்டும் என்றும் கோரினர். பம்பாய் பிரதமர் (முதலவர்) ஆவன செய்வதாகக் கூறினார்.

1938 பிப்ரவரி 12,13 தேதிகளில் தீண்டப்படாத இரயில்வே தொழிலாளர்கள் மாநாட்டில் உரையாற்றினார். நம் நாட்டில் உழைக்கும் வர்க்கத்தினருக்கு எதிராக இரண்டு சக்திகள் உள்ளன. ஒன்று பார்ப்பனீயம் மற் றொன்று முதலாளித்துவம். பார்ப்பனீயம் என்று கூறும் போது, பார்ப்பனர்களின், குலம் அதிகாரம் சலுகைகள், அவர்களின் நலன்களைப் பற்றி அம்பேத்கர் குறிப்பிட வில்லை. சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளை எதிர்க்கும் பண்பினைத்தான் பார்ப் பனியம் என்று அம்பேத்கர் குறிப்பிடுகின்றார். பார்ப் பனியம் எல்லாச் சமூகத்திலும் சாதியக் கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டு தீண்டப்படாதவர்களுக்குச் செய்யும் கொடுமையைப் பற்றிக் குறிப்பிட்டார்.

**1941 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் அம்பேத்கர் வைஸ்ராயின் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில்**

**உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார். பின்னர் 1942 ஜுன் மாதத்தில், வைஸ்ராய் நிர்வாகக் குழுவிலும் சேர்க் கப்பட்டார். அம்பேத்கர் நாகபுரியிலிருந்தபோது தந்தி மூலம் 20-7-1942 இல் தொழிலாளர் நல அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். தீண்டப்படாதவர் சமுதாயத் திலிருந்து ஒருவர் வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றது பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில் இது தான் முதல் தடவையாகும்.**

அம்பேத்கர் வைஸ்ராய் நிர்வாகக் குழுவில் சேர்க் கப்படுதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர், பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி பதவியைப் பெறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றிருந்தார். ஆனால் அவர் அப்பதவியை ஏற்றிட மறுத்துவிட்டார். தீண்டப்படாதோர் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காகத் தொண்டாற்றுவதையே பெரிதும் விரும்பினார்.; அதற்குத் தடையாக இப்பதவி அமைந்துவிடும் என்று கருதியே பதவியேற்க மறுத்தார்.

**பொன்விழா:-**

1942 ஏப்ரல் 14 ஆம் நாள் அம்பேத்கரின் ஐம்பதாவது பிறந்த நாள். சுதந்திரத் தொழிற்கட்சியினர், பம்பாயிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் 9 நாள்கள் அவரின் பொன்விழாவைச் சிறப்புடன் கொண்டாடினர்.

பொன்விழாவின் கடைசிக் கூட்டம் பம்பாயில் பரேலில் கம்கார் (தொழிலாளர்) திடலில் நடைபெற்றது. அதில் விழா நாயகர் உரை நிகழ்த்தினார். அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதைக் கைவிடுமாறு கூறினார். எந்த ஒரு சமூகத்திலும்-தனியொரு மனிதன் அளவுக்கு மீறி மதிக்கப்பட்டு வணங்கப்படத் தக்கவனாகவும் கடவுளுக்குச் சமமானவனாகவும் உயர்த்தப்படுகி றானோ, அப்போதே அந்தச் சமூகம் அழிவுப்பாதையில் போய்க் கொண்டிருக் கிறது என்று அறிந்து கொள்ளலாம். எந்தவொரு மனிதனும் மனித சக்திக்கு மீறிய ஆற்றல்களையும் தெய்வத்தன்மைகளையும் பெற்றிருப்பதில்லை. ஒரு வருடைய உயர்வுக்கும் தாழ்விற்கும் அவரவருடைய செயல்களே காரணம், என்றார். மேலும், சாதி இந்துக்கள் எங்களைச் சமத்துவமாக நடத்தவேண்டும் என்பதற் காகவே மகத்திலும், நாசிக்கிலும் போராட்டங்கள் நடத்தினோம். ஆனால் எதிர்பார்த்த அளவிற்குப் பயன் விளையவில்லை. எங்களின் நியாயமான விழைவு களையும் உரிமைகளையும் கொண்டிராத எந்தவொரு திட்டத்தையும் எதிர்ப்போம் என்று அரசிற்கு எச்சரிக்கை செய்கிறோம். இந்துமக்கள் சமத்துவத்துடன் எங்களை நடத்தினால் அவர்களுடன் தோளொடு தோள் நின்று போரிடத் தயாரக உள்ளோம், என்று எழுச்சியுடன் கூறினார்.

**- தொடரும்**

## திருச்சி சிந்தனையாளர் கழகத் தலைவர் பொறிஞர் கு.ம. சுப்ரமணியன் அவர்களுக்கு "தமிழ் வளர் தகவர்" விருது



திருச்சிராப்பள்ளி பாவாணர் தமிழியக்கம் சார்பில், திருச்சி தூய பவுல் இறையியல் கல்லூரியில் 18.2.18 அன்று, தமிழ்ச் சான்றோர் பதின்மருக்கு முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்களால் விருது வழங்கப் பட்டது.

பொறிஞர் கு.ம.சுப்ரமணியன் அவர்கள் (மருத நாடன்) தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் தலை மைப் பொறியாளராகப் பணியாற்றியவர். தந்தை பெரியார் அவர்களிடம் நெருங்கிப் பழகியவர். திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவர், அறிஞர் ஆனைமுத்து அவர்களுடன் இணைந்து 'பெரியார் ஈ.வெ.ரா.' சிந்தனைகள், திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் மூலம் முதல் பதிப்பு 1-7-1974இல் வெளியிடக் காரணமாக இருந்தவர். கடந்த அய்ம்பது ஆண்டு களாகப் பல்வேறு சமூக விழிப்புணர்வு இதழ்களில் கவிதைகள் எழுதி வருபவர். சேதுக் கால்வாய் எழுச்சி இயக்கம், திருச்சி ஊழல் எதிர்ப்பு இயக்கங் களின் தலைவராக உள்ளார். காஞ்சி சங்கராச்சாரி யார் கொலையைப் பற்றி "சங்கராயணம்" என்ற கவிதை நூலை வெளியிட்டவர். தமிழ்மொழி வளர்ச் சிக்கும், தந்தை பெரியார் கொள்கை பரவுவதற்கும், தன் வாழ்நாள் முழுவதும், இதற்காக வாழ்பவர். இவரின் தமிழாய்வுப் பணிகளைப் பாராட்டித் திருச்சி பாவாணர் தமிழியக்கம் "**தமிழ் வளர் தகவர்**" என்ற விருது வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தது.

செய்தி : திருச்சி **ந. கருணாகரன்**

கட்டுரைத் தொடர்-58

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்



1940 ஆகஸ்டு 24, 25 தேதிகளில் திருவாரூரில் நடைபெற்ற நீதிக்கட்சியின் 15ஆவது மாநாடு திராவிடர் இயக்க வரலாற்றில் ஒரு திருப்புமுனை மாநாடாகும்.

1938இல் தொடங்கி 1939 வரை நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகு நடைபெற்ற மிகப்பெரிய மாநாடு இது.

இம்மாநாட்டில் திராவிட நாடு பிரிவினைக்கான தீர்மானமும் திராவிட நாடு அடைவதற்கான வழிவகைகளைக் கண்டறிய ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

இன்று தமிழ்த் தேசியர்களால் தூக்கிப் பிடிக்கப்படும் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள்தான் அந்த மாநாட்டின் போது நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார்.

தமிழ்த் தேசியர்களால் தூக்கி நிறுத்தப்படும் அண்ணல் தங்கோவும் நீதிக்கட்சியில் தான் தீவிரமாகப் பணியாற்றினார். அப்போது மொழிவழி மாநிலம் பிரியவில்லை. நான்கு மொழிகளையும் பேசக்கூடிய மக்கள் அடங்கிய பகுதிகளை ஒருங்கிணைத்து ஆங்கிலேய அரசு சென்னை மாகாணம் என்ற நிர்வாக அமைப்பை அமைத்திருந்தது. அந்த சென்னை மாகாணத்தைதான் நீதிக்கட்சி ‘திராவிட நாடு’ என்று பொருள் கொண்டு செயல்பட்டது.

இம்மாநாட்டில் பல முக்கியத் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. அதில் முதன்மையான தீர்மானம் ‘திராவிட நாடு’ பிரிவினை கோரிக்கை தொடர்பான தீர்மானமாகும்.

### திராவிட நாடு பிரிக்கப்பட வேண்டும்

திராவிடர்களுடைய கலை, நாகரிகம், பொருளாதாரம் ஆகியவைகள் முன்னேற்றமடைவதற்கு - பாதுகாப்பதற்கு திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம் இங்கிலாந்தின் நேரடி பார்வையின்கீழ் இது ஒரு தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது (குடிஅரசு 1.9.1940, பக்கம் 12-13).

இந்தத் தீர்மானங்கள் தொடர்பாக “திருவாரூர் தீர்மானமும் நமது கடமையும்” என்ற தலைப்பில் 1.9.1940 குடிஅரசு ஏட்டில் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது.

திராவிட மக்கள், தங்கள் நிலையையும் தங்கள் எதிரிகளின் சூழ்ச்சிகளையும் உணர்ந்துகொண்டு விட்டனர் என்பதற்கு மிகக் குறுகிய காலத்தில் கூட்டப்பட்ட திருவாரூர் 15ஆவது ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டிற்குப் பல ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டு வந்து காட்சி அளித்ததே போதுமான அறிகுறியாகும்.

மரக்கலம் எவ்வளவு பலம் பொருந்தியதாக இருந்த போதிலும், எவ்வளவு சக்தி வாய்ந்திருந்தபோதிலும், அதனைச் செலுத்தும் மாலுமியைப் பொறுத்தே அதன் வேகமும் அதன் உபயோகமும் இருந்துவருவது போல, ஒரு கட்சி எத்தகைய திட்டங்களைக் கொண்டதாயிருந்த போதிலும் அது உண்மையிலே பயனுள்ளதாயிருக்க வேண்டுமானால், அதன் தலைவரின் திறமையைப் பொறுத்தேயிருக்கிறதென்பதை உணர்ந்த திராவிடர், ஏகமனதாக மீண்டும் பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்களையே ஜஸ்டிஸ் கட்சிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றே கருத வேண்டியிருக்கிறது. அத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானங்களைப் படிப்போருக்கு விளங்கும்; திராவிட மக்கள் சுயமதிப்பைப் பெற, தங்களுக்குள்ள இழிவைப் போக்க, இழந்த அரசுரிமையை அடைய என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள உறுதி கொண்டிருக்கிறார்கள் என்பது.

தனித்தொகுதி தேர்தல் முறையைக் குறித்து மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம் எதிர்காலத்தில் திராவிடர்களை ஒரு தனி வர்க்கமாக - நேஷனாக விளக்கச் செய்வதற்கு ஓர் சிறந்த வழிகாட்டியென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஒரு வர்க்கம் முன்னேற வேண்டுமானால், அவ்வர்க்கத்தினர் அரசியலைக் கைப்பற்றியாக வேண்டும். அரசியலைக் கைப்பற்றுவதற்குக் கூட்டுத் தொகுதி தேர்தல் முறையினால் கோரிய பலன் கிட்டாதென்பதையும் தனித் தொகுதி முறையினால்தான் கிட்டுமென்பதையும் உலக நிகழ்ச்சிகளும், நம் நாட்டு அனுபவமும் நன்கு விளக்கும். எனவே, திராவிடர் முன்னேறுவதற்குத் தனித் தொகுதி தேர்தல் - முறையை அவர்கள் எப்பாடுபட்டும் பெற்றே தீரவேண்டும். அதற்காக இன்று முதலே திராவிடர் ஆங்காங்கு தீர்மானங்கள் நிறைவேற்றி, சர்க்கார், இந்திய சட்டத்தில் செய்யும் சீர்திருத்தத்தில் இதற்கான திருத்தத்தைச் செய்யும்படி வற்புறுத்த வேண்டும்.

அடுத்தாற் போல், திராவிடர்கள் தனி வர்க்கத்தார் என்று விளக்கிக் காட்டுவதற்கும் ஒரு சந்தர்ப்ப மிருக்கிறதென்பதையும் அச்சந்தர்ப்பத்தை தவறவிடா மல் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதையும் அடுத்து நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் நன்கு விளக்கும். அதாவது, ``அடுத்தாற்போல் வரும் மக்கள் எண்ணிக்கை கணக்கு எடுக்கும் 'சென்ஸஸ்' என்பதில் திராவிட மக்கள் தங்களைத் திராவிடர்கள் என்று சொல் லியே பதிவு செய்து கொள்ள வேண்டும்'' என்பதாகும். இதையும் ஒவ்வொரு திராவிட மகனும், திராவிட மகளும் மனதிலிறுத்தி நடந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம் என்று இத்தகைய கட்டுப்பாடு நம்மவர் களிடையே என்று ஏற்படுகிறதோ அன்றுதான் நாம் முன்னேற முடியும். எதுவரை நம்மை நாம் இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டு வருகிறோமோ அதுவரை நாம் அடிமை வாழ்வை விரும்புகிறோமென்பதுதான் பொருள்படும். எனவே அடிமைத்தளையிலிருந்து விடுபட முதற்படி, தன்னை திராவிடன் என்று சொல்லிக் கொள்வதேயாகும். இதனைச் செய்ய எவரும் நம்மை மறந்தும் தவறிவிடமாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.

மூன்றாவதாக திராவிட நாடு பிரிக்கப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்து அது கைகூடும்வரை அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமாய் வணக்கத்துடன் கேட்டுக் கொள் கின்றோம்.

திராவிட நாடு பிரிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் குறித்து நாம் பல தடவை விளக்கியிருப்பதால் அதன் அவசியத்தை மக்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள் என்றே நம்புகின்றோம்.

அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய துறை களில் ஒரு வர்க்கத்தாரே ஏகபோக மிராசு செலுத்து வதும், மற்றொரு வர்க்கத்தார் மிக தாழ்வான நிலை யிலிருந்து வருவதும் ஆனகாரியம் இந்நாட்டைத் தவிர வேறு எங்கும் பார்க்கமுடியாது. இந்நிலை மாறவேண்டுமானால், பெரியார் தமது தலைமை உரையில் குறிப்பிட்டிருப்பதுபோல் திராவிட மக்கள் ஆரியப் பிணைப்பிலிருந்து விடுபட வேண்டும். ஆரியப் பிணைப்பிலிருந்து விடுபடுவதற்கு அறிகுறியாக திராவிட மக்களுக்கு இந்துலா' சட்டம் என்ற ஆரிய தர்ம சட்டத்தின்படி நீதி வழங்கப்படுவதை ஒழித்தாக வேண்டும். அது சம்பந்தமாக மாநாட்டில் ஒரு தீர் மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இவைபோக கல்வி சம்பந்தமாகவும், காங்கிரஸ் புகுத்திய புதுப்புது வரிகள் சம்பந்தமாகவும், பப்ளிக் சர்வீசஸ் சம்பந்தமாகவும், ``ஸ்ரீ'' என்ற பதத்தைப் பெயர்களுக்கு முன்னால் போடுவதைக் கண்டித்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

### துறைமங்கலம்
## எஸ். தர்மலிங்கம் மறைந்தார்



பெரம்பலூர், துறைமங்கலம் மாரி யம்மன் கோவில் தெருவில் வசித்த வரும் வடக்கலூர் (திருச்சி) ந.கருணா கரன் மாமனாரும், க. ஜெயக்கொடி-கருணாகரன் தந்தையுமான எஸ்.தர்ம லிங்கம் அவர் கள் 27.1.2018 அன்று காலை உடல்நலக்குறைவால் மறை வுற்றார். இவர் நல்ல தமிழ்ப்பற்றாளர். தன் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் வைத்தவர். முற் போக்குச் சிந்தனையாளரும், அம்பேத்கர், பெரியார் கொள்கையில் பற்று கொண்டவர்.

மறைந்த எஸ். தர்மலிங்கம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி 11.2.2018 அன்று நடைபெற்றது. தி.மு.கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளரும், முன்னாள் மத்திய அமைச்சரும் ஆன ஆ.இராசா மற்றும் பெரம்பலூர் நகர திராவிடர் கழகத் தலைவர் அக்ரி. ந.ஆறுமுகம், வழக் குரைஞர், நோட்டரி பப்ளிக் கி. வள்ளவன் நம்பி, பெரம் பலூர் மாவட்ட முன்னாள் மருத்துவ அதிகாரி, மருத்துவர் கு. குணகோமதி, வழக்குரைஞர் இரா.ஸ்டாலின் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் கலந்துகொண்டனர்.

இவரை இழந்து வருந்தும் மனைவி த.ராஜலட்சுமி, மகள்கள் செல்லம் இராஜகுமாரன், ஜெயக்கொடி கருணாகரன், செவ்வந்தி செந்தில், குமார், செந்தாமரை, சுரேஷ்குமார் ஆகியோர்க்கு சிந்தனையாளன் ஆசிரியர் குழு சார்பாகவும், மா.பெ.பொ.க. சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## உலகத்தாய் மொழிநாள் பேரணி



உலகத்தாய் மொழிநாள் பேரணி 21.2.2018 அன்று சென்னை மயிலாப்பூரில் தமிழ்நாடு கல்வி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பொழிலன் தலைமையில் நடை பெற்றது. இப்பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தில் இரா.நல்லக் கண்ணு, இயக்குநர் பாரதிராசா, பிரின்ஸ் கஜேந்திரபாபு, இயக்குநர் அமீர், இயக்குநர் களஞ்சியம், இயக்குநர் காட்டூர்கோபி, திருமுருகன் காந்தி, செல்வப் பெருந்தகை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இவ்வமைப்பு தமிழக மெங்கும் உலகத்தாய் மொழிநாள் பேரணியை நடத்தியது.

# 2018 சிந்தனையாளன் பொங்கல் மலர் ஒரு மதிப்பீடு

- முனைவர் அ. ஆறுமுகம்


தந்தை பெரியாரின் கொள்கையைப் பின்பற்றி, கடந்த நாற்பத்து மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவரும் திங்களிதழ்-வே.ஆனைமுத்து அவர்களை ஆசிரியராகக் கொண்டுவரும் சிந்தனையாளன். மார்க் சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி ஏடாகவும் திகழ்கிறது. தம் பதிப்புத் துறைப் பட்டறிவால் ஏ4 அளவில், நாற்பத்தி நான்கு பக்கங்களில் பதினைந்து உரூபா விலையில் வெளிவரும் கருத்துச் சுரங்க இதழ் சிந்தனையாளன். ஒவ்வோராண்டும் நூற்றுக்கு மேற்பட்ட கட்சித் தொண்டர்களின் ஒத்துழைப்புடன் பொங்கல் மலரைத் தவறாமல் வெளியிட்டு வருகிறது. 2018இல் வெளிவந்த மலரின் ஒரு மதிப்பீடாக இக் கட்டுரை அமைகிறது.

ஆசிரியர் தம் முதற்கட்டுரையில் "இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழி என்பதை மாற்றுவதற்கும், இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி ஏற்படுத்துவ தற்கும் இந்தியா முழுவதும் சென்று பணியாற்ற வேண்டும் என்பதன் தேவையை எல்லாத் தமிழ் மக்களும் உணரவேண்டும்" என்பதை வரலாற்றாய் வுக் கண்ணோட்டத்தில் வலியுறுத்துகிறார். 69 ஆண்டு கட்குமுன் தந்தை பெரியார் தந்த பொங்கல் வாழ்த்தில் "தமிழர்கள் யாவரும் ஒன்றுபட்டு, தமிழுக்கு இன்றுள்ள இழிவுகளும் குறைபாடுகளும் நீங்கி மனிதப் பண்பு பெற்று மானமுள்ள மக்களாக வாழவேண்டும் என்பது தான் என் வாழ்த்து" எனக் குறிப்பிட்டுள்ளார். பாவேந் தரின் பொங்கலோ பொங்கல் என்ற கவிதையும் இடம் பெற்றுள்ளது. இவ்வாண்டு பெற்ற கட்டுரைகள், கவி தைகள் தொடர்ந்து மலரில் இடம்பெற்றுள்ளன.

தமிழாய் வாழும் தவ முனைவர் இளங்குமர னாரின் பொங்கலோ பொங்கல் கட்டுரையில் உணவுப் பொங்கலாம் அமுத சுரபியின் துணையால் மணிமேகலை இறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிச் செயலில் காட்டினார். இன்று அப்புத்தம் சிங்கள வெறியரிடம் கொலைவெறிக் கோட்டமாக மாற்றியதையும், இந்தியமும் அவ்வெறிச் சிங்களத்துக்குக் குறைவில்லாமல் ஆடிய ஆட்டத்தையும் தெளிவுபடுத்தி, இலக்கியத்தில் பொங்கிப் பொலிந்த வாழ்த்துகளைக் காட்டி நிறைவாக,

"பொய்ப்பொங்கல் அல்லதே புத்துணவுப் பொங்கலாம்
தைப்பொங்கற் கெம்முடைய வாழ்த்து"

எனக் குறள் நெறி இமயம் குறள் வெண்பாவால் வாழ்த்துகிறார். தெளிதமிழ் ஆசிரியர் மூதறிஞர் இலெனின் தங்கப்பா வேதமதத்திலிருந்து வேறுபடும் சங்க இலக் கியம் பற்றி எடுத்துரைக்கிறார்.




நீதி அரசர் அரி பரந்தாமன் அவர்கள் மதச்சார்பற்ற அரசு என்பதற்கு மாறாக உச்சநீதிமன்றமே மதச்சார் பற்ற நிலையிலும், மதச்சார்புள்ள நிலையிலும் தீர்ப்பு கள் வழங்கியிருப்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு கிறார். இக்கட்டுரையை ஆழ்ந்து படித்து உள்வாங்கிக் கொண்டு சிந்தித்தால் மதச்சார்பற்ற அரசு என்பது ஏட்டில் மட்டுமே எனத் தெளியலாம்.

உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ. நெடுமாறன் "இந்தியாவை ஒரே நாடாக வைத்திருப் பதிலும், பாரதப் பண்பாடு என்ற பெயரில் பார்ப்பனப் பண்பாட்டை நிலைநிறுத்துவதிலும், இந்தியா முழுமை யும் தங்கள் வேட்டைக் காடாக்கிக் கொள்வதிலும் பார்ப்பனரும் பனியாக்களும் இணைந்து செயல்படு கின்றனர். இந்த நோக்கத்திற்குக் காங்கிரசையும், பா.ச.க.வையும் மாறி மாறிப் பயன்படுத்திக் கொள்கின் றனர்" என்ற கருத்தை முன்னிறுத்துகிறார். "உருவா காத, உருவாக்க முடியாத இந்தியத் தேசியம் என்பது ஒரு கற்பிதம். ஒருபோதும் நடைமுறைக்கு ஒவ்வாதது. இந்த மாயையை அடியோடு தகர்த்தெறிந்தாலொழிய மொழி வழித் தேசிய இனங்களுக்கு வாழ்வும் இல்லை; எதிர்காலமும் இல்லை" என எச்சரிக்கிறார்.

தமிழக அரசின் மேனாள் திட்டக்குழுத் தலைவர் முனைவர் மு.நாகநாதன் வஞ்சிக்கப்பட்ட வரலாற்றை விளக்கி, ‘‘1950களிலிருந்து இன்றுவரை இந்தியைத் திணிப்பதிலும் 356ஆவது விதியை எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப் பெற்று, கூட்டாட்சி இயலைக் குழிதோண்டிப் புதைக்கும் செயல்கள் தொடர்கின்றன’’ என்பதை விளக்குகிறார். இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ள கருத்தோவியத்தை மீண்டும் ஒருமுறை பார்த்து நன்கு சிந்தியுங்கள்.

பெரியாரின் குறிக்கோள் என்ன என்பதை சிந்தனையாளன் ஆசிரியர் வே.ஆனைமுத்து 1952இலிருந்து 1973 வரை பெரியாருடன் பேசிப் பழகி, உடன் உரையாற்றி, அவருக்கு உறுதுணையாகச் செயல்பட்டு, தன்னிலை விளக்கம் தந்த நிலையில் உண்மைக்கு மாறாக, உண்மை இதழில் எழுதி களங்கப்படுத்துவதைச் செய்கிறார்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் நிறுத்துவார்களா என்பதைக் காலந்தான் சொல்ல வேண்டும்.

சூலூர் பாவேந்தர் பேரவைப் புலவர் செந்தலை கவுதமன் ‘‘பெரியார் காட்டிய தமிழ் மூவர் தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார், வே. ஆனைமுத்து, முனைவர் பொற்கோ’’ ஆகியோர் என்பதை விளக்கி, தற்போது பேராசிரியர் பொற்கோவும், ஆனைமுத்து மட்டுமே நம்மிடையே இருப்பவர்கள். பெரியார் அடையாளங்காட்டியவர்களைப் பின்பற்றும் நடைமுறை பின்பற்றப்பட்டால் நல்லது என வழி காட்டுகிறார்.

**மிகச்சிறந்த கல்வியாளராகத் திகழும் முனைவர் இராசகோபாலன் அரசுப் பள்ளிகளை விழுங்கும் தனியார்ப் பள்ளிகள் எப்படி வளர்ந்தன என்ற வரலாற்றைத் தெளிவுபடுத்துகிறார். எழுபது அகவைக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இதனைத் தங்கள் பட்டறிவின் வழி நன்கு உணரலாம்.**

தமிழ்வழிப் போராளர் தோழர் தியாகு, மார்க்சின் மூல முதல் நூலைப் பற்றிக் குறிப்பிட்டு, ‘‘மூலமுதல் நூலைப் பயில்வதும் அதன் முடிவுகளை நாம் வாழும் சமூகத்துடன் பொருத்திப் பார்ப்பதும் நம் நாட்டுப் பாட்டாளியம், முதலாளியத்துக்குப் பிணக்குழி தோண்டும் நிலை நோக்கி முன்னேற உதவும்’’ என்பதை வலியுறுத்துகிறார். ஆய்வாளர்கள் மேற்கொண்டு செயல்படலாம்.

பாவலர் இரணியன் தம் ‘‘கீழடி காட்டும் தமிழர் வாழ்வியல்’’ கட்டுரையில் ஆங்கிலேயர்களின் அகழாய்வுப் பணி தமிழர் மூத்த குடிமக்கள் என்பதையும், தொல்லியல் ஆய்வுகள் அனைத்தும், தமிழ் நாகரிகம் மதச்சாராப் பண்பாட்டு நாகரிகம் என்பதைக் கீழடி ஆய்வில் கிடைத்தவற்றைக் கொண்டு தெளியலாம் என்பதுடன் அயோத்தி இராமர் கோயிலுக்கு நூறு கோடி ஒதுக்கும் அரசு கீழடி ஆய்வுக்கும் போதுமான நிதி ஒதுக்காமல் செயல்படுவதையும் எடுத்துக்காட்டுகிறார். தமிழ் மக்கள் விழிப்போடிருந்து கீழடி ஆய்வைத் தொடரச் செய்ய வேண்டும் என்தை வலியுறுத்துகிறார்.

தமிழ் மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் பொழிலன் இந்தியச் சிறையில் இருந்து எப்போது, எப்படி விடுதலை பெற வேண்டும் என்பதற்கு வழி காட்டுகிறார். சிந்தனையாளன் ஆசிரியரின் உடலை நலம்பெறச் செய்த மருத்துவர் மகுடமுடி இதயங்காக்கும் வழியைத் தெளிவுபடுத்துகிறார்.

ஓவியா, கருத்துரிமையின் ‘‘கல்லறையே இந்து மதம்’’ என்பதை ‘‘காந்தியைக் கொலை செய்து தொடங்கிய இவர்களின் கணக்கு இன்றும் தொடர்வதை வெளிப்படுத்துகிறார்.’’

விடுதலை இராசேந்திரன் முடங்கிக்கிடக்கும் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டைப் பெற, ‘‘தமிழகம் தனக்கான சமூக நீதித் தத்துவத்தோடு ஓரணியாகி, சாதிய உணர்வுகளைத் தூக்கி எறிந்து, கரம் கோர்த்துக் களமாட வேண்டும்’’ என வழிகாட்டுகிறார்.

யோகம் என்னும் இசைவிருக்கையை இந்துத்துவப் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டிய வழிகளை மா. தசரதன் தெளிவுபடுத்துகிறார்.

திருமுருகன் காந்தி அரசியல், பொருளியல், பண்பாட்டியல், இறையாண்மை இவற்றை வரலாற்றடிப் படையில் வென்றெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

எழுத்தாளர் செயராணி ‘‘உங்கள் குழந்தை ஆக்க ஆற்றலாக வேண்டுமெனில் அறிவின் பக்கம் நில்லுங்கள். அறிவியல் ஆற்றலை வளர்த்தெடுங்கள். இதுவே மண்ணும் மனிதமும் பயனடையும் வழி’’ என வளர்ப்பு நிலையைத் தெளிவுபடுத்துகிறார்.

எழுத்தாளர் இரா. உமா திருநங்கை எனும் திருநர்கள் பற்றி ‘‘பொதுப் புத்தியில், சமூகத்தின் பார்வையில், அரசின் அணுகுமுறையில் மாற்றம் வந்தால் ஒழிய நம்முடைய சக மனிதர்களான திருநர்கள் கண்ணியமான வாழ்க்கைக்கு வழிபிறக்காது எனக் கூறி அவர்கள் வாழ்விலும் வழியமைத்து நாகரிக சமூகம் நாம்’’ என்பதை மெய்ப்பிக்க வேண்டுகிறார்.

காஞ்சி அமுதன் தன்னுரிமைத் தமிழ்நாடு அமைக்க ஓரணியாய் திரளவேண்டுகிறார். மார்க்சியச் சிந்த னையாளர் பேராசிரியர் கோச்சடை சோவியத் புரட்சி யின் நூற்றாண்டை நினைவுறுத்தி, சோவியத் போன்று முதலாளியத்துக்குத் திரும்பாமல் இந்தியப் புரட்சியா ளர்கள் உழைப்பாளர் பக்கம் செயல்பட வேண்டும் என வலியுறுத்துகிறார்.

கோவை மணிமுத்து, என் மகள் ஏன் தமிழ் படிக்க வேண்டும் என்பதற்காகப் பல விடைகளைக் கூறி நிறைவாக, என் மகள் மெய்ப்பொருள் காணும் அறிவைப் பெறத் தமிழ் படிக்க வேண்டும் என நிறை விக்கிறார்.

எழுத்தாளர் புதிய மாதவி, மகார் இராணுவமும் ஒடுக்கப்பட்டோர் எழுச்சியும் தலித்திய வரலாற்றின் முன்னுரையாக அமைந்ததை வரலாறாக்குகிறார். சிந்தனையாளன் ஆசிரியர் குழுவில் ஒருவரான வாலாசா வல்லவன் தமிழகத்தில் நடைபெற்ற கோயில் நுழைவுப் போராட்டங்களை வரலாற்றுடன் தெளிவு படுத்தி கருவறை நுழைவுப் போராட்டத்தையும் வென் றெடுக்க வேண்டும் என விளம்புகிறார். மருத்துவர் சா.மா. அன்புமணி, மருத்துவப் பார்வையில் தொடரும் காய்ச்சல் மரணங்களின் நிலைகளைத் தெளிவுபடுத்திக் காய்ச்சல் வந்தவுடன் மருத்துவக் கண்காணிப்புக்கு உட்பட வேண்டுகிறார்.

தமிழ்ப் போராளர் முதுபெரும் புலவர் கி.த. பச்சையப்பன் பாவேந்தரின் தமிழ்த் தேசியப் பார்வை யைத் தொகுத்துக் காட்டுகிறார்.

எழுத்தாளர் வே. மதிமாறன் பெண்ணியவாதி களின் பெரியார் எதிர்ப்பு பற்றிக் கூறும் போது, ''சாதி எதிர்ப்பு, பெண் விடுதலை குறித்துப் பேசுபவர்களின் அடிப்படை அரசியல் பார்ப்பன எதிர்ப்பு. அதிலிருந்து தொடங்குவதுதான் சரியானது; நியாயமானது. அதைத் தான் டாக்டர் அம்பேத்கரும் தந்தை பெரியாரும் செய்தார்கள்'' என விளக்கந் தருகிறார்.

தொல்லியல் ஆய்வர் முனைவர் ப. வெங்கடேசன் பண்டைத் தமிழகத்தில் இடம்பெற்ற வரிவகைகளைப் பற்றிச் சான்றுகளுடன் விளக்கமளிக்கிறார். ம.தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆ. வந்தியத்தேவன் மாநில சுயாட்சிக் கொள்கை எதிர்கொள்ளும் நேர்ச்சிகளை விழிப்புடன் கண்டறிந்து அவைகளை நிர்மூலமாக்கும் பணிகளில் முழுவீச்சில் முனைப்புடன் நாடெங்கும் ஈடுபட வேண்டும். இதன்வழிதான் உண்மையான கூட்டாட்சி அரசு இயங்கே அமையும் என விளக்க மளிக்கிறார்.

ஆழி செந்தில்நாதன் குறளாயத்தில் பங்குபெற்ற கு.ச. ஆனந்தன் அவர்கள் 'மலர்க மாநில சுயாட்சி' என்ற நூலின் கருத்துகளை நினைவூட்டுகிறார். வேளாண் வித்தகர் ந.ப.அன்பழகன் அரசுகளின் பொறுப்பின் மையால் உருவாகும் வேளாண்மையின் வீழ்ச்சியை முன்வைக்கிறார்.

பொதுவுடைமைச் சிந்தனையர் இராமியா, இலெனின் தேசிய இன விடுதலைக் கொள்கைகளை இந்தியச் சூழலுடன் ஒப்பிட்டு வர்க்கப் போராட்டத்துடன் பங்கீட்டுப் போராட்டத்தையும் முன்னெடுக்க வேண்டுகிறார்.

அண்மையில் புகழுடம்படைந்த கொள்கை மறவர் அரங்க. சானகிராமன் அவர்களின் தொண்டுகளைக் காஞ்சிச் செயலர் நடராசன் தொகுத்தளிக்கிறார். திண் ணை புகழ் மாம்பலம் சந்திரசேகர் 'உழவர்கள் கைம் மடங்கி அமர்ந்துவிட்டால் துறவர் கூட வாழ இயலாது' என்ற வள்ளுவத்தை வலியுறுத்தி உழவர் நாட்டின் காவியம் எனப் பொங்கவிடுகிறார்.

தமிழ் மறவர் வை. பொன்னம்பலனாரின் மகள் செந்தமிழ்க்கொற்றி சிவப்பிரகாசம் தம் தந்தையாரின் கொள்கைகளைச் சுவைபடச் சொல்கிறார். இயக்கத்தின் பொதுச் செயலாளர், தில்லைவனத்தின் செல்வர் துரை. சித்தார்த்தன் சமூகநீதிக் காவலராகவும், பொதுவுடை மைக் கொள்கையராகவும் திகழ்ந்த தந்தை பெரி யாரின் வழிநடத்தவே மார்க்சியப் பெரியாரியம் என வரையறை செய்கிறார்.

சாதியை ஒழித்த தமிழ்த்தேசியம் அமையும் வழி வகைகளை, தங்க. செங்கதிர் வலியுறுத்துகிறார். பேரா சிரியர் கோ. இரவீந்திரன், தந்தை பெரியாருடன் செர் மனி தத்துவவியலை நீட்சேவை ஒப்பிட்டுப் பார்க்கிறார்.

பெரியார் தொண்டர் தி.ச. குணசேகரன் வளர்ந்து வரும் புதிய மூடநம்பிக்கைகளைக் குறிப்பிட்டுக் காட்டு கிறார்.

மாந்தநேயத்தை மறந்த இந்துமத வெறி பற்றி கோ.மு. கருப்பய்யா குறிப்பிடுகிறார்.

இயற்கை வேளாண் வல்லுநர் கோ. கோதண்ட ராமன் தம் பட்டறிவின்வழி இரசாயனமற்ற விவசாயத் தை மேற்கொள்ள வழிகாட்டுகிறார்.

பெரியார் தன்னைச் சிந்திக்க வைத்த நிலையை திருச்சி ந. கருணாகரன் எடுத்துரைக்கிறார்.

'மீட்சி' ஆசிரியர் குறிஞ்சிக் கபிலன் திராவிடர் இயக்கம் செய்தவைகளையும் செய்திருக்க வேண்டிய வை களையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

வேலூர் மு. சாமிநாதன் அமெரிக்காவில் ஆறு மாதம் இருந்த பட்டறிவு பற்றி விளக்கமளிக்கிறார். கட்சியில் தன் பங்கு பற்றி தீ.கோபாலகிருட்டிணன் குறிப்பிடுகிறார். அனைவரும் நலமாக வாழ மருத்துவர் இரஞ்சித்குமார் வழிகாட்டுகிறார்.

காந்தியமும் பெரியாரியமும் காலத்தின் தேவை என்பதை முனைவர் ந. தினகரன் முன்வைத்து விரைவாக முன்னேற வேண்டுகிறார். 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் மா.பெ.பொ.க.யும் ஒடுக்கப்பட்டோர் பேரவையும் இணைந்து பெற்றது இமாலய வெற்றி என உழவர் மகன் வடிவேலு உறுதி செய்கிறார். வள்ளுவத்தின் வரலாறும் வாழ்வியலும் பற்றிப் பன்னீர் செல்வம் பகிர்ந்தளிக்கிறார். சிந்தனையாளன் ஆசிரியர் ‘வெகுமக்களின் எதிரிகளான இந்துத்துவ வாதிகள் தங்களின் இலக்கை மிகச் சரியாகவே புரிந்திருக்கிறார்கள். வெகு மக்களின் விடுதலையைக் கோரும் நாமும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்’ என வலியுறுத்துகிறார். தானும் தன் குடும்ப உறவுகளும் இயக்கப் பணியில் இணைந்து பணியாற்றும் நிலையை மு. செயப்பிரகாசு தொகுத்தளிக்கிறார். எழுத்தாளர் முத்து கிருட்டிணன் புத்தாண்டு வாழ்த்துரைக்கிறார்.

கவிதைகளாக நிகழ்வும் நிழலும் என்ற தலைப்பில் குமணனின் புறநானூற்றுப் பாடலைக் குமணன் வாழி என்ற தலைப்பில் மூன்று அறுசீர் விருத்தங்களைப் புரட்சிப் பாவலர் தமிழேந்தி படைத்தளிக்கிறார். தன்னினம் மீட்க வாரீர் எனக் கவியன்பனும், பொங்கல் திருநாள் வாழ்க என மீ. டில்லிபாபுவும், பார் போற்றும் பெரியார் எனப் பாவலர் இனியன் அவர்களும் தமிழில் கல்வி கொடு எனப் பாவலர் எழில்நிலவன் அவர்களும், புட்டிப் பாலுக்கு சுவையுற பயலுக எனப் பாவலர் வையவன் அவர்களும் கவிதை படைத்துள்ளனர்.

ஆண்டுக்கொருமுறை மலர்வது பொங்கல் மலர். இதழின் அகவையைப் போன்றே மலரின் கருத்து வளமும் வளர்ந்துகொண்டே செல்கின்றது. ஆண்டு முழுவதும் பொதுமையாகப் படித்தறிய வேண்டிய பகுத்தறிவுப் பொன்மலர். மலரைப் பெற்றோர் அனைவரும் பாதுகாத்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் படித்து சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டுகிறேன். பதிப்புச் செம்மல் வே. ஆனைமுத்து அவர்கட்கும், மலர்க்குழுவினர் அனைவருக்கும் பங்கேற்ற படைப்பாளர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த பாராட்டுகள். மேலும் மேலும் சிந்தனையாளன் வளர்ச்சிக்குத் துணை செய்யுங்கள் என வேண்டுகிறேன். வளர்க சிந்தனையாளன்! வாழ்க ஆசிரியர் குழு!

# நாகர்கோவில் வித்துவான் கேசவ சுப்பையா மறைவு

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் வித்துவான் கேசவ சுப்பையா அவர்களைக் கடந்த 25 ஆண்டுகளாக நான் அறிவேன். அப்பெருமகனார் ஆழ்ந்த தமிழ்ப்புலமை நிரம்பியவர். தம் ஆசிரியர் பணியில் நாட்டம் கொண்டிருந்த அதே வேளையில் தான் சார்ந்த இந்துமதம் - சைவ சமயம் இவற்றின் கொள்கைகள் பரப்பப்பட ஒரு கருவியாகப் பல ஆண்டுகள் இயங்கியவர். அதேபோல் ஒத்த கருத்துள்ள தமிழ் அறிஞர்களுடன் சேர்ந்து திருக்குறள் ஆய்வுப் பணியை அகலமாகவும் ஆழமாகவும் மேற் கொண்டவர்; தம் கருத்துகளை வலியுறுத்திச் சொல்வதில் தயங்காத அஞ்சா நெஞ்சினர். என்னையும் நம் தோழர்கள் கலசம், இரா.பச்சமலை, கவிஞர் தமிழேந்தி, வழக்குரைஞர் கோவிராமலிங்கம் அகியோரை வெவ்வேறு காலங்களில் நாகல்கோவிலுக்கு அழைத்து கூட்டங்கள் நடத்தி இடப்பங்கீட்டுக் கோரிக்கைக்கு வலுசேர்த்தார்.

இவற்றுடன் கூட தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுள் மிகப் பெரிய எண்ணிக்கையினராகவும் அரசியலில் செல்வாக்குப் பெற முடியாதவர்களாகவும் இந்திய உயர் கல்வியிலும் தமிழ்நாட்டு உயர் கல்வியிலும் போதிய இடங்களைப் பெற முடியாதவராகவும் இந்திய ஆட்சிப் பணி, தமிழக ஆட்சிப் பணி ஆகியவற்றில் எந்த மட்டத்திலும் பெயரளவுக்குக்கூட தங்கள் தங்கள் வகுப்பைப் சேர்ந்தவர்களும் உரிய இடப்பங்கீடு கிடைக்காமல் இருப்பதைக் கண்டு அப்படிப்பட்ட உள்சாதிகளான யாதவர், முத்தரையர், விசுவகர்மா, வண்ணார், மருத்துவர், குயவர், மீனவர், குறும்பர், போயர், அம்பலக்காரார், வலையர் முதலான வகுப்புகளுக்கு கல்வி, ஆட்சிப் பதவிகள், உயர் கல்வியில் இடங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற அவைகளில் அமர்த்தம் மூலம் உறுப்பினர்கள் ஆகியவற்றைப் பெற்றிட இப்போதுள்ள இடஒதுக்கிட்டில் உள்ஒதுக்கிடு முறை வேண்டும் என்பதில் அசையா நம்பிக்கையுடன் பாடுபட்டு வந்தவர். ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலர் கேசவ சுப்பையா என்பதை நான் அவரோடு பணியாற்றியபோது உணர்ந்திருக்கிறேன். இத்துறைகளில் குறிப்பிடத்தக்க வெற்றி பெறும் வரை அப்பணிகளில் தம் வாழ்நாளில் அயராது பாடுபட்டு வந்த கேசவ சுப்பையா அவர்கள் 7.2.2018 ஆம் நாள் காலை 8.45 மணிக்கு உடல்நலக்குறைவால் தம் 86ஆம் அகவையில் மறைவுற்றார் என்பதை அறிந்து வருந்துகிறோம். துயரத்தில் ஆழ்ந்துள்ள அவர்தம் மக்கள், சமூகத்தினர், தமிழ் அன்பர்கள் ஆகியோருக்கு சிந்தனையாளன் சார்பில் நெஞ்சார்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- வே. ஆனைமுத்து**

# புரட்சியாளர் புலவர் கு. கலியபெருமாள் நினைவேந்தல் பற்றிய, 2018 மே 16இல் படங்கள் திறக்க முடிவு

புரட்சியாளர் புலவர் கு. கலியபெருமாள் நினைவேந்தல் குழுவின் இரண்டாவது கூட்டம் 17.02.2018 கங்கையம்மன் கோவில் தெரு, நெற்குன்றம், சென்னை-107இல் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் :

1. புலவர் நினைவிடத்தைச் செப்பனிடுதல்.

அ) புலவருக்கு வழிகாட்டிய அரசியல் தலைவர்களின் படங்களைப் பதிவு செய்தல்.

1) தோழர்கள் காரல் மார்க்சு, 2) ஏங்கெல்சு, 3) இலெனின், 4) ஸ்டாலின், 5) மாவோ, 6) பெரியார், 7) அம்பேத்கர் ஆகியோரின் கல்வெட்டுருவப் படங்களைப் பதிவு செய்தல்.

ஆ) புலவருடன் பயணித்த பெண்ணிடம் மாநாட்டில் பங்கேற்ற தோழர் தமிழரசன், பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேராசிரியர் சாலை இளந்திரையன் போன்றோரின் படங்களோடு தோழர் சுந்தரம் அவர்களின் படத்தையும் பதிவு செய்தல்.

இ) புலவரின் மகன் வள்ளுவன், உடன் சிறையிலிருந்த அனந்தநாயகி அம்மாள், இராசமாணிக்கம் ஆகியோருடைய கல்வெட்டுருவப் படங்களைப் பதிவு செய்தல்.

2. ஆண்டுதோறும் இவ்வாறு புலவரோடு பயணித்த தோழர்கள், சனநாயகச் சக்திகள் கல்வெட்டுருவப் படங்களையும் நினைவிடத்தில் தொடர்ந்து பதிவு செய்தல்.

**3. இதற்காக நிதி திரட்டுதல், ஆதரவுச் சக்திகளைக் கண்டறிதல்.**

4. பொருள் திரட்டலுக்கான செயல் திட்டங்களைத் தோழமை இயக்கங்களின் இதழ்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியிட்டு ஆதரவைத் திரட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பாக, ''தமிழ்நிலம்'', ''தொன்மொழி'', ''விடுதலை'', ''அறம்'', ''தமிழர் கண்ணோட்டம்'', ''தென்செய்தி'', ''சிந்தனையாளன்'', ''மே-17 குரல்'', ''உழைக்கும் மக்கள் தமிழகம்'', ''தொழிலாளர் ஒற்றுமைக் குரல்'', ''தமிழ்த்தேசம்'', ''எழுகதிர்'', ''மெய்ச்சுடர்'', ''மக்கள் விடுதலை'', ''தீப்பொறி'', ''பாட்டாளி சிந்தனை'' போன்ற பிற இதழ்களிலும் வெளியிடல்.

5. புலவர் கு. கலியபெருமாள் அறக்கட்டளை தொடங்குவது என முடிவு செய்யப்பட்டது.

6. பொருள் திரட்டல் குழு, பின்கண்ட தோழர்களைக் கொண்டு அமைக்கப்பட்டது!

தோழர்கள் அரங்க குணசேகரன், பாவேந்தன், சிவ. காளிதாசன், தமிழ்நேயன், கண.குறிஞ்சி, கொளத்தூர் மணி, இரத்தினவேலன், பெ. மணிரசன், வாலாசா வல்லவன், பிரவின்குமார், டைசன், சோழன் நம்பியார்

# காஞ்சி எஸ்.எ.சோதி மறைவு



திராவிடர் கழகத்தின் மூத்த உறுப்பினர் எஸ்.எ.கோபாலன் அவர்களின் இளைய சகோதரனும் மா.பெ.பொ.க. முன்னாள் வேளாண் அணிச் செயலாளர் அரங்க சானகிராமன் சம்பந்தியுமான எஸ்.எ.சோதி 81ஆம் அகவையில் பிப்ரவரி மாதம் 11.2.2018 காலை 7.00 மணியளவில் காஞ்சிபுரம் லிங்கப்பன் தெரு தம் இல்லத்தில் மறைவுற்றார். காஞ்சி நகர மா.பெ.பொ.க. தோழர்கள் சி.நடராசன், மு.செயப்பிரகாசு, இரா.நாராயண மூர்த்தி, குறளமிழ்தன், வ.வேதகிரி, முற்போக்குச் சமூகநீதிப் பேரவை நிறுவனர் டாக்டர் விமுனாமூர்த்தி, பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்க ஒருங் கிணைப்பாளர் காஞ்சி அமுதன் ஆகியோர் நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது மறைவுக்கு அவர்தம் மகன், மருமகள் மற்றும் இல்லத்தினர் அனைவருக்கும் காஞ்சி மார்க்கியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் உரித்தாக்குகிறோம்.

## வாழ்க்கை ஒப்பந்த விழா



### அ.அருள்செல்வி-ந.பிரதீப்குமார்



கடலூர் மாவட்டம் சுப்பிரமணியபுரம் கு.அழகிரி-ஆனந்த ஜெயந்தி இணையரின் மகள் அருள் செல்விக்கும் சென்னை பழைய வண்ணாரப்பேட்டை பா.நரசிம்மன்-மகாலட்சுமி இணையரின் மகன் ந.பிரதீப்குமாருக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் தலைமையில் 24.02.2018 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சென்னை இராயபுரம் பார்சி கிளப்பில் நடைபெற்றது.

பொறிஞர் பெல்.கு.இராஜன் வரவேற்புரையாற்றினார். கோவை கு.இராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். தி.வேல்முருகன், ஆ.வந்தியத்தேவன், பிரின்ஸ் கஜேந்திரபாபு, கொளத்தூர் தா.செ.மணி, வெ.குழந்தைவேலு, மருத்துவர் ந.எழிலன், பேரா.சிறி.அருட்செல்வன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சார்பில் சிந்தனையாளன் புரவலர் கட்டணமாக ரூ.5,000 வழங்கப்பட்டது.

### இரா.வெங்கடேஷ் (எ) பகுத்தறிவாளன் - பூ.செண்பகப்பிரியா



திருப்பத்தூர் இராயப்பன் - இரா.இலட்சுமி இணையரின் மகனும் ம.பெ.பொ.க. செயற்பாட்டாளருமான இரா.பகுத்தறிவாளன் அவர்களுக்கும் திருப்பூர் க.பூமாராஜ்-பூ.சந்திரமதி இணையரின் மகள் பூ.செண்பகப் பிரியா அவர்களுக்கும் 26.2.2018 திங்கள் காலை 7 மணிக்கு திருப்பூர் வட்டம் செங்கப்பள்ளி சீனிவாச திருமண மண்டபத்தில் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தவிழா சிறப்புடன் நடைபெற்றது. மா.பெ.பொ.க. சார்பில் க.முகிலன், கலை இணையர்களும், முத்தமிழ்ச் செல்வன், துரை சித்தார்த்தான், கலச இராமலிங்கம் ஆகியோர் நேரில் சென்று வாழ்த்தினர். மணமக்கள் சார்பில் ரூ.1000 சிந்தனையாளன் வளர்ச்சி நிதி வழங்கப் பட்டது.

## தன்னுரிமைக்காகத் தமிழகமே திரண்டெழு! ஆர்ப்பாட்டம்



ம.க.இ.க.வின் மாணவர் மற்றும் இளைஞர் அமைப்பான புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி சார்பில் நடுவண் அரசால் வஞ்சிக்கப்படும் தமிழகத்தின் உரிமைகளை மீட்டுடெடுக்கவும், பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்களில் தமிழைப் பயிற்று மொழியாக்கவும் அரசு வேலை வாய்ப்பில் தமிழில் படித்தவர்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், அலுவல் மொழியாக, நீதிமன்ற மொழியாகத் தமிழை இடம் பெறச் செய்ய வலியுறுத்தியும், தமிழகம் முழுவதும் மாவட்டங்கள் தோறும் 27-2-2018 அன்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியின் அமைப்பாளர் கணேசன் தலைமைத் தாங்கினார். பேரோசிரியர் பா.சிவக்குமார், வாலாசா வல்லவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ம.க.இ.க.வின் பாடல்களையும், முழக்கங்களையும் முழங்கினர் பகல் 1.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது.

## உலக மருத்துவத்தில் பெண்கள் நூல் வெளியீட்டு விழா

11-02-2018 ஞாயிறு மாலை 6 மணிக்கு புதுச்சேரி ACCORD ஓட்டல் அரங்கில் “உலக மருத்துவத்தில் பெண்கள்” என்ற தலைப்பில் இரா.அருண்மொழித் தேவன் எழுதிய நூலை முன்னாள் மத்திய அமைச்சர் சா.ஜெகத்ரட்சகன் தலைமையில் அனுசுயா ஜெகத்ரட்சகன் வெளியிட்டார். ஸ்ரீவித்யா வரவேற்புரையாற்றினார். சீனு.இராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். இரா.சம்பத் முதல்படியைப் பெற்றுக் கொண்டார். த.நிறைமதி, எஸ்.யசோதா, க.அ.அருள் செங்கோர், பூங்கொடி பராங்குசம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கோ.புவியரசு நூல் அறிமுகம் செய்தார். இரா.அருண்மொழித்தேவன் ஏற்புரையாற்றினார். வி.அமலோற்பவமேரி நிகழ்ச்சியைத் தொகுத்துரைத்தார். கு.அ.தமிழ்மொழி நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

## மலேசியத் தமிழ் இலக்கியக் கழகச் செயல்தலைவர் சிந்தனையாளன் ஏட்டின் மலேசிய முகவர் தோழர் **க. இராம மாணிக்கம்** மறைவுற்றார்



வே.ஆனைமுத்து ஆகிய நான் மலேசியத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் நிறுவனர்களுள் ஒரு வரான மு.மணிவெள்ளையன் அவர்களின் அழைப்பின் பேரில் 1996 சனவரியில் முதன்முதலாக மலேசியாவுக்குச் சென்றேன். அப்போது தொடர்ந்து 37 நாள்கள் கோலாலம்பூரில் மலேசியப் பண்பாட்டுக் கழகத்தில் தங்கியிருந்தேன்.

மணிவெள்ளையன் அவர்களும் க.இராம. மாணிக்கம் அவர்களும் நாள்தோறும் என்னை கோலாம்பூர் பண்பாட்டு மய்யத்தில் கண்டு அள வளாவினர், என்பால் அன்பு செலுத்தினர். 2005 ஆம் ஆண்டில் மலேசியத் தோழர் முனைவர் தமிழ் மணி அவர்களின் மகனுடைய திருமணத்திற்காக நான் மலேசியாவுக்கு அழைக்கப்பட்டேன். அப்போது மணிவெள்ளையன் மறைந்துவிட்டார். க.இராம. மாணிக்கம் மட்டும் அடிக்கடி வந்து சந்தித்துப் பேசினார்.

அப்போது முதல் தோழர் க.இராம.மாணிக்கம் மாதந்தோறும் சிந்தனையாளன் ஏட்டின் 10 இதழ் களை மலேசியாவுக்கு வரவழைத்து 10 தோழர் களுக்குத் தொடர்ந்து வழங்கி வந்தார். கடைசியாக மலேசியத் தோழர்கள் அ.பழநிபாரதி, கு.சு.இராமன், பெரியநாயகம், க.இராமமாணிக்கம், அ.இராமன், மா.கருப்பண்ணன் ஆகிய 6 பேரும் சிந்தனையாளன் ஏட்டின் வளர்ச்சி நிதியாக காசோலை வழியாக மிகப் பொறுப்புடன் ரூ.7200/- இந்திய மதிப்பிலான பணத்தை தோழர் மலேசிய க.இராம மாணிக்கம் 2017 சூலைத் திங்களில் விடுத்து வைத்தார். அது பற்றிய அறிவிப்பை சிந்தனையாளன் ஆகத்து இதழில் வெளியிட்டிருக்கிறோம்.

இப்போது சூலூர் புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்கள் மூலம் மலேசிய இராமமாணிக்கம் 2018 சனவரி 13ஆம் நாள் மறைந்துவிட்டதாக அறிந்து மிகவும் வருந்துகிறேன். அன்னாரின் இழப்புக்கு ஆளாகி மனம் தளர்ந்துள்ள இராமாணிக்கம் அவர் களின் துணைவியார், அவருடைய மக்கள், நண்பர் கள் மற்றும் கோலாம்பூர் மலேசியத் தமிழ்ப் பண் பாட்டுக் கழகத்தினர் ஆகியோருக்கு சிந்தனை யாளன் இதழ் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் உரித்தாக்குகிறேன்.

மலேசியத் தமிழகர்கள் தமிழில் தகுதி பெற விரும்பு கிறநேர்மையானவர்கள் ஆவார்கள். திருவள்ளு வரையும் தந்தை பெரியாரையும் போற்றுகிறவர்கள்.

வாழ்க மலேசிய க.இராம மாணிக்கம் புகழ்!

- **வே.ஆனைமுத்து**

## பொறியாளர் க.வீரமுத்து மறைவு



கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் ம.புடையூர் வை.கந்தசாமி-அழகம்மாள் இணையர்களின் மூத்தமகன் க.வீரமுத்து 24-3-1940இல் பிறந்தார். க.வீரமுத்து அவர்கள் சென்னை-79, கே.கே.நகர் (மே) நெசப்பாக்கம் அன்னை சத்தியா நகர் 2வது தெரு, எண்.80-ல் தன் சொந்த இல்லத்தில் வாழ்ந்து வந்தார். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி பொறியாளராக பணிசெய்து ஓய்வு பெற்ற வர். சுயமரியாதைக்காரர், பெரியார் தொண்டர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைக் கட்சியின் பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து அவர்களின் தீவிரப்பற்றாளர். சிந்தனையாளன் ஏட்டிற்கு வாய்ப்பு கிடைத்த பொழுதெல்லாம் நிதியுதவி யளித்தவர். இவருக்கு மனைவி காவிரி வீரமுத்து, மூத்த மகள் தேன்மொழி, கும்பகோணம், மூத்த மருமகன் தருமன் தேன்மொழி, மகன் கோக்கோதை செங் கல்பட்டு, மருமகள் பொறியாளர் கீதாலட்சுமி கோக் கோதை, இளைய மகள் பொறியாளர் பாரதி, சென்னை, இளைய மருமகன் பொறியாளர் இளையராஜா பாரதி, மென்பொறியாளர் மற்றும் பேரக்குழந்தை கள், உறவினர்கள் இவர்களுடன் வாழ்ந்த 78 வயதான பொறியாளர் க.வீரமுத்து அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக உடல் நலமின்றி இருந்து 23-02-2018 காலை 5.20 மணியளவில் வெள் ளிக்கிழமை மறைவுற்றார்,

மாலை 6 மணியளவில் நெசப்பாக்கம் இடுகாட் டில் சுயமரியாதை சுடர் க.வீரமுத்து உடல் எரியூட் டப்பட்டது. மா.பெ.பொ.க. சார்பில் சிந்தனையாளன் மேலாளர் ப.வடிவேலுவும், அனைந்திந்திய பிற் படுத்தப்பட்டோர் மதச்சிறுபான்மையினர் பேரவை சார்பில் தமிழ்நாடு பொதுச் செயலாளரும் மக்கள் நெஞ்சம் ஆசிரியருமான கலசராமலிங்கம் அகியோர் இறுதி மரியாதை செய்து குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினர்.

## சமூக நீதிக் கொள்கையாளர் நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் மறைந்தார்



இரத்தினவேல் பாண்டியன் திருநெல்வேலி மாவட்டம் திருப் புடைமருதூரில் 1929ஆம் ஆண்டில் பிறந்தவர். 1960களில் திருநெல் வேலி மாவட்டத்தின் தி.மு.க. மாவட்டச் செயலாளராக இருந் தார். திருநெல்வேலியில் வழக்கு ரைஞராகத் தொழில் செய்தார். 1974இல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றார்.

1988 முதல் 1994 வரை உச்சநீதிமன்ற நீதிபதி யாகப் பணியாற்றினார். அப்போது இரண்டு இன்றிய மையாத தீர்ப்புகளை வழங்கினார். வி.பி.சிங் பிரத மராக இருந்தபோது மண்டல்குழுவின் பரிந்துரை களை ஏற்று, நடுவண் அரசு வேலைகளில் பிற் படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கும் ஆணையை 13.8.1990 அன்று வெளியிட்டார். இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை உச்சநீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்தது. 1992இல் தீர்ப்பு வழங்கப் பட்டது. ஆறு நீதிபதிகள் மண்டல் குழுவின் வரை யறைகளின்படி சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு அளித்தது அரசமைப்புச் சட்டப்படி சரியே என்று தீர்ப்பளித்தனர். இந்த ஆறு நீதிபதிகளில் ஒருவரான இரத்தினவேல் பாண்டியன் “இந்து சமூகத்தில் சாதியைக் கணக்கில் கொள்ளாமல், சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கியவர்களை அடையாளம் காண முயல்வது சமூக யதார்த்தத்தை அறியாத குருட்டுப் பார்வையாகும்” என்று தன் தீர்ப்பில் ஆணி அறைந்தார் போல் எழுதினார்.

நடுவண் அரசு தன் விருப்பம் போல் அரச மைப்புச் சட்டவிதி 356-யைப் பயன்படுத்தி மாநில அரசுகளைக் கலைப்பது தொடர்பான எஸ்.ஆர். பொம்மை எதிர் இந்திய அரசு வழக்கிலும் ஒன்பது நீதிபதிகளில் ஒருவராக இருந்த இரத்தினவேல் பாண்டியன் ஒரு மாநில அரசைக் கலைக்க குடியரசுத் தலைவர் எடுக்கும் முடிவு சட்டத்துக்கு உட்பட்டதா என்று பார்ப்பதற்கு உச்சநீதிமன்றதிற்கு அதிகாரம் இருக்கிறது என்று தீர்ப்பளித்தார். 1994 இல் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஓய்வு பெற்றபின் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக இருந்தார். இரத்தின வேல் பாண்டியன் அவர்களின் மறைவு திராவிட இயக்கத்திற்கும் தமிழகத்திற்கும் பேரிழப்பாகும்.

## பகவத் கீதையே இந்துக்களின் புனித நூலாகக் கருதப்படுகிறது: அதன் 10 படிகள் விலை அரியானாவில் 3.8 இலட்சம் ரூபா!

பகவத் கீதை பாரதப் போர்க் களத்தில் எதிரி களோடு போராடத் தயங்கிய அர்சுனனுக்குத், துவார கையை ஆண்ட கிருஷ்ண பகவான் என்பவர் கூறிய அறிவுரையின் தொகுப்பு என்று கூறப்படு கிறது.

ஆனால், அதே பகவத் கீதையில், “நான்கு வரு ணங்களை நானே படைத்தேன்; நானே விரும்பி னாலும் அதை அழிக்க முடியாது (சாதுர் வர்ணம் மயாசிருஷ்டம்) என்று கூறியிருப்பதாக கொட்டை எழுத்துகளில் உள்ளது.

அரியானா மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும் பா.ச.க. அரசு, பகவத் கீதை பத்துப் படிகளை 3.8 இலட் சம் ரூபா விலையில் வாங்கியது. 2017 நவம்பர்-திசம்பரில் நடத்திய சர்வதேச கீதா மகோத் சவம் விழாவில் கலந்துகொண்ட இந்திய அரசு அமைச் சர்கள், ஆளுநர்களுக்கு அன்பளிப்புச் செய்யத்தான் மேலே கண்ட உயர்ந்த பதிப்பு கீதை நூலை வாங்கி யுள்ளது.

இந்த இரண்டு மாதங்களில் நடந்த விழாக்களில் மொத்தம் 15 கோடி ரூபாயை அரியானா மாநில அரசு செலவு செய்துள்ளது.

இப்படிப்பட்ட செயல்களை ஊக்குவிக்கும் இந்திய அரசு, மதச்சார்பற்ற அரசா?




**இலக்கியக் களம்**
காஞ்சிபுரம்

# பெரியார் விதைத்தவை நச்சு விதைகள் என்றால், பார்ப்பனர் விதைத்தவை என்ன விதைகள் ?



முள்மயிர் மூடிய முக்காட்டுத் தலையும்,
கொள்கோல் கமண்டலம் கொண்ட கைகளும்
நீறு மண்டிய நெற்றியும், பார்ப்பனத்
தூரு மண்டிய உள்ளமும் கொண்டு –
கரவுச் சிரிப்பொடு காவி உடையில்
துறவியாய் உலாவரும் பார்ப்பனத் தொழும்பு –
காஞ்சி காம கோடி மடத்தின் மூஞ்சி ஒன்று –
சின்ன பெரியவாள் என்னும் பெயருடன், இந்தியா வெங்கும்
மன்னிய சிற்றூர் பேரூர் எல்லாம்
கால்நடைச் செலவாய்ப் பாதயாத் திரை யாய் –
நீள்நடை யிட்டே ஆரிய நியம த்தை
நாள் தொறும் பரப்பிடும் நாடகம் அறிவோம் !

அந்த மூஞ்சி தான், அண்மையில் – துணிந்து –
வெந்ததும் வேகா ததுமாய்ஓர் – கருத்தைத் –
திருவாய் மலர்ந்து – திக்கி யுள்ளது!
பெரியார் அண்ணா ஆகியோர் நம்மிடம்
மூச்சுக் காற்றாய் முழங்கிச் சென்ற
பேச்சுகள் எழுத்துகள் நச்சு விதைகளாய் !
நாட்டில் அந்த நச்சுகள் பரவிக்
கேட்டைத் தந்தவாம் ! கெடுத்துவிட் டனவாம் !
சின்ன பெரியவாள் சிந்திய முத்து, இது !
பொன்னால் பொறித்த வேதப் பொழிவிது !
கேட்டுக் கொண்டுதான் உள்ளோம் ! கேட்ட்தும்
மாட்டிக் கொண்டு மடிந்திட வில்லை !

அல்லது, அத்தகு அன்புரை கூறிய
நல்ல பிறவி யின் நாக்கை அறுத்துத்
தங்கத் தட்டால் உறைசெய்து மாட்டிப்
பொங்கு பூசைகள் புகைத்திட வில்லை.
ஏன்தான் பிறந்தோம்? எதற்கு வாழ்கிறோம்?
வீணான பிறவிநாம்! விழல்களாய் இருக்கிறோம்!
கருகிப்போய்க் கிடந்தஇந் நாட்டிடை வந்தே
உருகி உருகி உயிரைத் தேய்த்தே
ஒளியைப் பரப்பிய ஊழியத் தலைவராம்
அளிசேர் எங்கள் அருமைப் பெரியார்
பேசிய பேச்சுகள் நச்சுகள் என்றால் –
ஊசிய கருத்தை உரைத்த புராணங்கள்,
வேத அழுக்குகள், பொய்ம்மை விளக்கங்கள் –
ஊதை உளுத்தைகள் நச்சிலா உரைகளா?

ஆரிய மாயையில் அழுந்திக் கிடந்த
வீரியம் குறைந்த திரவிடர் விலாவில்
செந்தமிழ் மறத்தைப் பாய்ச்சிட இராப்பகல்
அந்தமிழ் பேசிய – எழுதிய – அண்ணா
பரப்பிய கருத்துகள் நச்சுகள் என்றால் –
சுரப்புடைப் பார்ப்பனர் சொன்னவை எல்லாம்
நச்சிலா உரைகளா? நன்மைதந் தவையா?
கச்சி உருவம் கதைத்தது சரியா?
என்னஇக் கொடுமை? என்னஇக் கூற்று?
சின்ன பெரியவாள் செருக்குதான் என்ன?

சேற்றில் புழுக்களாய் – சிற்றுயிர் இனங்களாய் –
மாற்றிட இயலா மந்தை ஆடுகளாய் –
வழிவழிப் பார்ப்பனர் வந்து புகுத்திய
இழிவினை உணரா இழிபிற விகளாய்
ஆரியக் கொடுநச் சரவம் கொத்திச்
சீரிய மொழியையும், சிறந்தல் லறிவையும்,
ஆயிரம் ஆயிரம் அறிவுநூல் தொகையையும்,
ஏயுநல் லிலக்கிய இலக்கண இயல்பையும்,
நாகரி கத்தையும் நல்லபண் பாட்டையும்,
ஆகிய அரசையும் ஆட்சி நலத்தையும்,

ஒருங்கே அழித்துக் கொண்டஓர் இனத்தைப்
பெருங்கொள் கையினால் பிழைக்க வைத்த –
தன்மான ஊற்றினைத் தகைமைத் தலைவனை,
மண்மானங் காத்த மாபெரும் மீட்பனை,
அரியாருள் எல்லாம் அருஞ்செயல் ஆற்றிய
பெரியார் என்னும் பெரும்பே ராசானை –
இழிப்புரை சொல்வதா? சொல்லியிங் கிருப்பதா?
பழிப்புரை வந்துநம் செவிகளிற் பாய்வதா?
நச்சு விதைகளா, நயந்து அவர் சொன்னவை?
பச்சிலை மருந்தன்றோ, எமக்கவர் பகர்ந்தவை?
பார்ப்பனப் பதடிகள் எம்மைப் படுத்திய
ஆர்ப்பொலி அடங்கியது அவரினால் அன்றோ?

ஆரியக் குறும்பர்கள் ஆக்கிய கொடுமையின்
வேரினைத் தீய்த்தது அவர்வினை யன்றோ?
மக்களுள் மக்களை வேறுபிரித்துத்
தக்க அவர் அறிவுக் கண்களை அடைத்து

மடமைச் சகதியில் –மடிமை இருளினுள் –
கடமை தவிர்த்த கரவுச் சேற்றினுள்
புதைத்த பார்ப்பனர் புன்மையைத் தடுத்துச்
சிதைத்தவர் அல்லரோ ஈரோட்டுச் செம்மல்?

அவர்தம் முயற்சியை அடியொற்றி நடந்து
தவறிலாத் தமிழர் ஆளுமை தழைத்திட
உழைத்தவர் அல்லரோ அண்ணா உயர்மகன்?
இழைத்தஇவ் விருவரும் உரைத்தவை நஞ்சா?

இப்படி இங்கோர் எருமை சொன்னால்
எப்படித் தமிழர் இதனைப் பொறுப்பது?

வீரப் பன்கள் வேண்டு மானால்
மாறப்பன் களாகி மண்ணைக் கவ்வலாம்!

யாரப்பன் என்று தெரியாதா பிறர்க்கு?
சேரப்பன் ஒருவன், சினையப்பன் ஒருவனா?

பாரப்பா தமிழா பார்ப்பனன் மொழிவதை?
வீரப்பர் போனால் விறலப்பர் இல்லையா?
வேதாஅ கமங்கள் –விரிந்தபு ராணங்கள் –
சூதுஇதி காசங்கள் –சூழ்ச்சிசெய் மனுக்கள் –
இன்றைக்குப் பார்ப்பனன் எழுதும் இழிவுகள் –
என்றிவை யாவுமே இனியவை ஆகுமா?
பெரியார் அண்ணா வாய்களில் பிறந்தவை
உரிய மக்களுக் குதவிட வில்லையா?

தமிழர்க்கு அறிவைத் தந்திட வில்லையா?
தமிழர்க்குத் தன்மானம் ஊட்டிட வில்லையா?

தமிழின் உணர்வைத் தட்டி யெழுப்பி
அமிழாத இனநலம் ஆக்கிட வில்லையா?

ஆரியர் செய்த அழிம்புகள் யாவையும்
கூரிய உரகளால் கொன்றிட வில்லையா?

பார்ப்பனச் சூழ்ச்சியைப் பகுத்துக் காட்டி
ஆர்ப்புற் றெழும் உணர் வளித்திட வில்லையா?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
நாயினுங் கேடாய் நந்தமிழ்ப் பேரினம்

நலிக்கப் பட்டும் நசுக்கப் பட்டும்
மெலிக்கப் பட்டும் மேலே றாமல்
கிடந்த கீழ்மையைக் களைந்து காட்டி
அடர்ந்தவர் எழுந்திட அளிதர வில்லையா?

பெரியார் உரைகளும் பெறற்கருந் தொண்டும்
உரிய பொழுதில் உதவிட விலையெனில்
தமிழினம் விழித்திடும் தகைவுநேர்ந் திருக்குமா?
ஆரியச் சேற்றினுள் அழுந்தித் தமிழன்
வீரியம் குன்றி மூச்சு விளர்ந்து
புதைக்கப் பட்டுப் போயிருக் கானா?
சிதைக்கப் பட்டிருக் காதா அவன் இனம்?

இவையெலாம் நேர்ந்திட வில்லையே என்ற
நகையுறு ஏக்க நலிவினால் அன்றோ
காஞ்சிச் சின்னவாள் கதைத்துத் திரிகிறார்?
பூஞ்சையாய்ப் போன புல்லுரை புகல்கிறார்?

பெரியார் ஊன்றிய நச்சு விதைகளால்
அரிய விளைவே அற்றுப் போகி
நாடே கெட்டு விட்டதாய் நவில்கிறார் !
நாடென்ன இவரது பாட்டனின் ஈட்டமா?
நாடு கெட்டால் நமக்கிது தகாதென
ஓடிட வேண்டுவ தன்றோ உயர்ந்தது !

நாடு கெட்டதா? பார்ப்பனர் நாட்டிய
கேடு கெட்டதா ? எஃது இங்குக் கெட்டது?
ஆரியக் கொட்டங்கள் ஆட்டங் கண்டு, அதன்
பூரியச் செயல்கள் புதைக்கப் பட்டன !

பார்ப்பனப் பூசல்கள் இனிநட வாவெனும்
போர்ப்பண் இங்கே எழுச்சி கொண்டது !
தமிழினம் மீண்டும் பெரியார் தொண்டினால்
இமைவிழி திறந்து எழுந்து கொண்டது !

அந்த எரிச்சலால் ஆரியத் தலைவர்
நொந்து சாகிறார்; நொட்டணை சொல்கிறார்.

பெரியார் விதைத்தது நச்சாம்! காஞ்சிப்
பெரியவர் விதைப்பது மருந்து விதைகளாம் !

ஏமாற்றிக் கொண்டே இருந்திட லாமெனத்
தாமாற்றும் பொய்யையும் புளுகையும் மேலும்
தொடர்ந்து வருகிறார் சின்ன பெரியவாள் !
அடர்ந்து வருமோர் ஆக்கம் அறிகிலார் !

அவருக் கிதன்வழி அறைந்திடு கின்றோம் !
தவறு நடந்தது தனிவர லாறு!
செய்த தவற்றையே மேலும் செய்திட
பொய்செய் பார்ப்பனர் எண்ணுதல் புரையே !

இனநலத் தீங்கை இற்றைத் தமிழர்
உணர்ந்து கொண்டனர்! உறக்கம் கலைந்தனர் !

இன்னும் அவரை இன்னலில் ஆழ்த்திட
எண்ணும் நினைவைப் பார்ப்பனர் எண்ணினால்
அவர்க்கது சாக்காட்டுத் தீமையை அளித்திடும் !
எவர்க்கும் எங்கும் தீங்கினை எண்ணியே
பழக்கப் பட்ட பார்ப்பன இனத்தினர்
வழக்கத்தை மாற்றி வாழ்வகை காணுக !
நெருப்புத் தமிழர் நிலையறிந்து
இருப்பதற் கேனும் இனிநலம் கருதுக !

(கனிச்சாறு இரண்டாம் தொகுதி, பாடல் எண்.118, ப.எண்.180)

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

# சுயநல வெறியர்கள் மகாநாடு

தந்தை பெரியார்

சென்னை ஒற்றைவாடை நாடகக் கொட்டகையில் சென்ற மாதம் 30-ந் தேதியன்று சனாதன தர்மிகள் மகாநாடு என்பதாக சுயநல வெறியர்கள் மகாநாடு ஒன்று கூட்டப்பட்ட விஷயத்தை யாவரும் தெரிந்திருக்கலாம். அதில் முக்கியமாய் மனுதர்ம சாஸ்திரத்தை நிலைநாட்டுவதையே கவலையாகக் கொண்டு அதற்கு வேண்டிய முயற்சிகளும் செய்யப்பட்டு அதை அனுசரித்த பல தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இதை நினைக்கும் போது இன்றைய தினம் நாம் வெள்ளைக்காரர் களுடைய அரசாட்சியிலும் அவர்களுடைய ராணுவக் காப்பிலும் இருப்பதற்கு நம்மை நாமே பாராட்டிக் கொள்ள கடமைப் பட்டவர்கள் ஆவோம். இந்தப்படி நாம் சொல்லுவதைப் பற்றி பொறுப்பும் கவலையுமற்ற சிலர் நம்மீது ஆத்திரப்பட்டாலும் படுவார்கள். ஆனால், உண்மையிலேயே துணிந்தவர்கள் யாரோ சில பொறுப்பற்றவர்களுடைய ஆத்திரத்துக்குப் பயப்படுவார்களேயானால் அது முன்னுக்குப் பின் முரணாகத் தான் முடியும். ஆகையால், அதைப் பற்றி நமக்குக் கவலை யில்லை. நிற்க; மேற்படி மகாநாட்டுக்குத் தலைமை வகித்த கல்கத்தாவிலுள்ள ஒரு தேசியவாதியாகிய திரு.சியாம்சந்திர சக்கரவர்த்தி என்னும் ஒரு வங்காளத்துப் பார்ப்பனர் செய் திருக்கும் அக்கிராசனப் பிரசங்கத்தைப் பார்த்தால் இந்தியப் பார்ப் பனர்களுடைய யோக்கியதையும், அவர்களது மதபக்தி தேசியம் என்பதான சுயநல வெறியும் தாராளமாய் விளங்கிவிடும். ஆதலால் அவற்றை முதலில் சுருக்கமாக எழுதி பிறகு தீர்மான சுருக்கத்தையும் எழுதி பிறகு அதைப் பற்றிக் கவனிப்போம்.

**அக்கிராசனர் உபந்நியாசமாவது**

மதம் கெட்டுப்போய்விட்டது! நமது பழைய சனாதன தர்மத்தை மறுபடியும் நிலை நிறுத்த வேண்டும். ஒரு உண்மையான ஹிந்து என்பவனுக்கு அடையாளம் சனாதன தர்மத்தை நம்புவதேயாகும்.

வேதத்தை நம்பி அதன்படி நடப்பதுதான் ஆஸ்திகனுக்கு அறிகுறியாகும். நமக்கு வேதமே ஆதாரமானது.

வேதத்தின் தத்துவமும், உள்பொருளுமே மனுதர்ம சாஸ்திர மாகும். மனுதர்ம சாஸ்திரம் பகவானால் சொல்லப்பட்டதாகும்.

கடவுள் உண்டாக்கிய சட்டம்தான் மனுதர்ம சாஸ்திரமென்பது.

விஞ்ஞான சாஸ்திரமும் இயந்திர சக்திகளும் மனித சமூகத் திற்கு மிகவும் கேடானது. மேல்நாட்டு கொள்கை நமக்கு உதவாது.

சாரதா சட்டம் சோதனை காலமாகும். அதை ஒழித்தாக வேண்டும்.

சிறு வயதில் கல்யாணம் செய்தால் தான் பெண்கள் ஆண்களுக்கு வணங்கிக் கட்டுப்பட்டிருப்பார்கள்.

அதனால்தான் சாஸ்திரங்களில் பாலிய விவாகம் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. பெண்கள் பூப்பு ஆனபிறகு அவர்கள் உடனே கருத்தரிப்பதை தடுத்தால் அது சிசுக் கொலைக்கு சமானமாகும் என்று பேசி இருக்கிறார்.

**தீர்மானங்கள்**

1. சாரதா சட்டத்தை ஒழித்துவிட வேண்டும்.
2. அதற்காக சத்தியாக்கிரகம் செய்யவேண்டும்.
3. சனாதான தர்மத்திற்காக ஒரு பத்திரிகை நடத்த வேண்டும்.
4. மதத்தில் அரசாங்கமாவது அரசியல் ஸ்தாபனங்களாவது பிரவேசிக்கக் கூடாது.
5. சட்டசபையில் வர்ணாச்சிரம தர்மத்திற்கு விரோதமாகவும் எவ்வித சட்டமும் செய்யக் கூடாது.
6. மனுதர்மத்தைக் காப்பாற்றுகிறதாக வாக்களிப்பவர்களுக்கே சட்ட சபைக்கு ஓட்டுக் கொடுக்க வேண்டும்.
7. கலப்பு விவாக சட்டத்தையும் சம்மத வயது சட்டத்தையும் கண்டிப்ப தோடு சட்டங்களையும் மாற்றிவிட வேண்டும்.
8. விவாகங்களை ரத்து செய்யக் கூடாது. என்பவை போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மகா நாட்டில் இருந்தவர்கள் திருவாளர்கள் எஸ்.சத்தியமூர்த்தி, கோவை சி.வி.வெங்கட்டரமணய்யங்கார், டி. ஆர். ராமசந்திர அய்யர், வி.வி.ஸ்ரீனிவாசய்யங்கார் முதலிய தேசியவாதிகளாவார்கள்.

இந்த இருபதாவது நூற்றாண்டில் இந்திய தேசத்தில் மாத்திரம் இந்திய ஜனத் தொகையில் 100-க்கு 3வீதம் ஜனத் தொகையுள்ள ஒரு சிறு கூட்டத்தார்கள் இவ்வளவு தைரியமாக சுமார் 2000 - வருடத்திற்கு முன் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் கொள்கைகளை இன்றைய தினம் புதுப்பித்து மக்களின் மீது சுமத்தி ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று நினைப்பார் களேயானால் அவர்களது மூடத்தனத்திற்கும் பேராசைக்கும் வெட்கம் கெட்டதனத்திற்கும் எதை உதாரணமாய்ச் சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

மேல்கண்ட நூற்றுக்கு மூன்று பேர் கொண்ட பார்ப்பனர்கள் தங்கள் சமூகத்திற்கு மாத்திரம் எந்த விதமான கொள்கை களையோ சாத்திரங்களையோ மதங்களையோ வைத்துக் கொள்ளுவதானால் நமக்கு அதைப்பற்றி சிறிதும் கவலை இல்லை, அப்படிக்கில்லாமல் எங்கோ நாடோடிகளாகவும், மிலேச்சர்களாகவும் காட்டு மிராண்டிகளாகவும் மலைச் சார்பில் வரன் முறை இல்லாமல், லம்பாடிகள் போல் திரிந்து கொண்டிருந்த ஒரு சிறு கூட்டத்தார்கள் வயிறு வளர்ப்பதற்காக நமது நாட்டிற்குள் வந்து குடியேறி இந்நாட்டு மக்களை ஏமாற்றி மதம் என்றும், வேதம் என்றும், சாஸ்திரம் என்றும், தர்மம் என்றும், தங்கள் ஆதிக்கத்திற்கும் சோம்பேறி வயிற்றுப் பிழைப்புக்கும் ஏற்றபடி என்ன என்னமோ ஏற்பாடுகளை செய்து கொண்டு அவைகளுக் கெல்லாம் தாங்களே அதிகாரிகள் என்றும், தங்களுக்குத்தான் அவ்வித யோக்கியதை உண்டென்றும், ஆதலால் தாங்கள் மேன்மையான ஜாதியார்கள் என்றும், மற்றவர்கள் இழிவான ஜாதியார்கள் என்றும், தங்களுடைய வாழ்வுக்காகவே உலகத்தில் மற்றவர்கள் அடிமைகளாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றார்களென்றும், இவை அனைத்தும் கடவுள் கட்டளை, கடவுள் செயல் என்றும் சொல்லிக் கொண்டு வாழ்ந்து வந்ததல்லாமல், இனியும் அந்தப்படியே இருக்க வேண்டு மென்பதாகவும் முயற்சி செய்வதென்றால், கடுகளவு சுயமரியாதையோ, அறிவோ உள்ள மக்கள் இதை சகித்துக் கொண்டிருக்க முடியுமாவென்று கேட்கின்றோம்.

முதலாவது, மதம் என்பதில் இந்து மதம் என்றால் என்ன என்கின்ற கேள்விக்கு ஒரு சனாதன தர்மியாவது, சாஸ்திரியாவது பதில் சொன்னவர்களே அல்ல எனவே, அஸ்திவாரத்திலேயே அடியோடு வெறுமையாய் இருக்கின்ற

மதத்தைச் சொல்லி ஏமாற்றுவதல்லாமல் அந்த மதத்திற்கு ஆதாரம் வேதம் என்று ஒரு ஆபாசக் களஞ்சியத்தை சொல்லிக் கொண்டு அதை அவர்களை (அந்தப் பார்ப்பனர்களை) தவிர மற்றவர்கள் பார்க்கவோ, படிக்கவோ, கேட்கவோ கூடாதென்று சொல்லிக் கொண்டு இருப்பதுடன் அதை எவன் நம்புகின்றானோ எவன் ஒப்புக் கொள்கின்றானோ அவன்தான் இந்துவென்றும், அப்படிப்பட்ட இந்துவுக்கு ஏற்பட்ட கொள்கைகளே சனாதன தர்மமென்றும், அச்சனாதன தர்மமே மனுதர்ம சாஸ்திர மென்றும், அம்மனுதர்ம சாஸ்திரமே வேதத்தின் தத்துவமும் உள் பொருளுமாகுமென்றும் சொல்லி அதற்கு 20 கோடி மக்களை கட்டுப்படுத்தி அதில் 6 கோடி மக்களை கண்ணில் காணக்கூடாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள், தீண்டாதவர்கள் என்கின்ற கொடுமைக்கு உள்ளாக்கி மீதி 14 கோடியில் 13 கோடி மக்களை சூத்திரர்கள் என்று அதாவது, பார்ப்பானின் தாசி மகன், பரம்பரை அடிமை, படிக்கக் கூடாதவன், சொத்து வைத்திருக்க கூடாதவன். பார்ப்பனர்களின் எச்சிலை சாப்பிட்டுக் கொண்டு அவன் கிழித்து கழித்த கந்தலை கட்டிக் கொண்டிருக்க வேண்டியவன் என்பதாக இழிவு படுத்தி வைத்துக் கொண்டு இருப்பதுடன் இந்தக் கொள்கையை நிலை நிறுத்த இன்றையதினம் மகாநாடு கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றுவ தென்றால் இந்த நாட்டில் கடுகளவு சுயமரியாதை உடையவர்கள் கூட ஒருவரும் இல்லையென்று தானே பொருளாகின்றது.

இவ்வளவு கொடுமையுள்ள மக்கள் ருஷியா போன்ற நாட்டில் இருப்பார்களேயானால் சாலை மரங்களில் கழுத்துக்கு சுருக்கு போட்டு தொங்கவிட்டு உயிருடன் கழுகுகளும் காக்கைகளும் கொத்தி, கொத்தி தின்னும் படியாக அல்லவா செய்யப் பட்டிருப்பார்கள் என்பதில் சிறிதாவது சந்தேகம் கொள்ள முடியுமா? என்று கேட்கின்றோம்.

மனுதர்ம சாஸ்திரம்தான் வேதம் என்றும், வேதம் தான் இந்து மதத்திற்கு ஆதாரம் என்றும், இப்போது இந்துக்கள் என்று சொல்லப்படும் 20 கோடி மக்களில் தங்களைத் தவிர பாக்கி 19 கோடி மக்களும் மனுதர்ம சாஸ்திரப்படிக்கு தான் நடக்க வேண்டும் என்றும் இந்த படிக்கே சட்டமும் ஆட்சியும் இருக்க வேண்டுமென்றும் கோருகின்ற ஒரு கூட்டத்தார்களைவிட உலகில் அயோக்கியர்களும் கொள்ளைக் கூட்டத்தார்களும் கொலைபாதகர்களும் வேறு யாராவது இருக்க முடியுமா என்பதை யோசித்தால் சனாதன மகாநாட்டின் யோக்கியதை இன்னதென்று தெளிவாய் விளங்கும். இந்து மதத்தின் அயோக்கியத்தனமான கொள்கைகள் இப்பார்ப்பனர்களால் இந்நாட்டில் அமுல்படுத்தாமல் இருந்திருக்குமானால் இந்துக் களில் பார்ப்பனர்களில் மாத்திரம் 100க்கு 22 1/4 பேர்கள் ஆங்கில பாஷை கற்றவர்களாகவும், பார்ப்பனரல்லாதவர்களில் 100க்கு 3/4 பேர்கள் மாத்திரம் ஆங்கிலம் கற்றவர்களுமாக இருக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

அதுபோலவே இந்து மதம் இந்தியாவில் உள்ள பார்ப்பன ரல்லாதார்களை எவ்வளவு இழிவுத் தன்மையிலும் ஈன ஸ்திதியிலும் வைத்திருக்கின்றது என்பதை மற்ற இந்நாட்டு பொது மக்களுடன் நம்மை ஒப்பிட்டு பார்த்தால் விளங்காமல் போகாது. சனாதன தர்மம் அழிவுப்பட்டதற்கு காரணம் விஞ்ஞான அறிவும் (அதாவது, சைன்ஸ் அறிவும்) இயந்திர சக்தி தொழிலுமே காரணம் என்றும் அவைகளை வளரச் செய்யக் கூடாதென்றும், தலைவர் சொல்லுவதென்றால் அக்கூட்டத்தின் வஞ்சக தனத்திற்கும் கெடுதல் புத்திக்கும் நாம் வேறு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை. விஞ்ஞான சாஸ்திரமும் இயந்திர சக்தி தொழில்முறையும் உள்ள அமெரிக்கா தேசத்தி லுள்ள ஜனங்கள் சராசரி நபர் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு 2000 ரூபாய் வீதம் வரும்படி சம்பாதிக்கின்றார்கள். அதாவது, நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 166 ரூபாய் வீதம் சம்பாதிக் கின்றார்கள். சனாதன தர்மம் தோன்றிய இந்த நாட்டில் வருஷம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு சராசரி 72 ரூபாய் அதாவது மாதம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம்தான் சம்பாதிக்கின்றார்கள். மற்றும் உயர்ந்த தத்துவங்களும் பகவானால் வேத கட்டளை களும் மனுதர்ம சாஸ்திரங்களும் உண்டான இந்த நாட்டில் 100-க்கு 7 பேர்களே படித்திருக் கின்றார்கள். ஆனால் நீச்ச நாடாகிய மேல் நாட்டில் நூற்றுக்கு நூறுபேரும் படித்து நமது நாட்டிலும் சிலர் படிக்க மேல் நாட்டார்ப் பணமும் முயற்சியும் மதமும் வேலை செய்கின்றது. அன்றியும், அங்கு மக்களின் சராசரி ஜீவிய வயது 52ஆக இருக்கின்றது. பகவான் தர்மத்தை நேரில் வந்து உபதே சித்த இந்த நாட்டில் சராசரி ஜீவிய வயது 25 ஆக இருந்து வரு கின்றது. எனவே, பகவானின் சனாதன தர்மம் உள்ள இந்திய நாட்டிற்கும் அதில்லாத மேல் நாட்டிற்கும் கல்வியிலும் செல்வத் திலும் ஜீவவாழ்விலும் மாத்திரம் இவ்வளவு வித்தியாசமிருக்கு மானால் மற்றவைகளைப் பற்றி நாம் சொல்ல வேண்டுமா என்று கேட்கின்றோம். ஆகவே, இவ்வித வித்தியாசத்திற்கு இச்சனாதன தர்மிகள் என்ன காரணம் சொல்லுகின்றார்கள் என்பதே நமது முக்கிய கேள்வியாகும்.

ஒரு பகவானும் ஒரு மதமும் ஒரு தர்மமும் அப்பகவா னையும் தர்மத்தையும் மதத்தையும் சேர்ந்த எல்லா மக்களுக் கும் ஒன்று போன்ற கொள்கையையோ, நீதியையோ, பலனையோ கொடுக்கவில்லையானால், அப்பகவானும் மதமும் தர்மமும் யோக்கியமானதா அல்லது அயோக்கியமானதா என்பதைப் பற்றி வாசகர்களே அறிந்து கொள்ளவிட்டு விடுகின்றோம். அன்றியும் அப்பகவானையும், மதத்தையும், தர்மத்தையும் அடியோடு அழிக்க வேண்டியதா அல்லது ஒருசிறு வேளையாவது விட்டுவைக்க வேண்டியதா என்பதையும் முடிவு செய்யும் பொறுப்பையும் வாசகர்களுக்கே விட்டுவிடு கின்றோம்.

இனி அம்மகா நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பற்றி சிறிது கவனிப்போம். முதலாவதாக சாரதா சட்டம் ஒழிக்கப்பட வேண்டுமாம். அதாவது பெண்கள் புருஷர்களுக்கு அடங்கி நடப்பதற்காகவே சிறுவயதில் குழந்தைப் பருவத்திலேயே கல்யாணம் செய்யும் வழக்கத்தை பெரியோர்கள் ஏற்படுத்தினார் களாம். ஏனெனில், பெரிய பெண்களான பிறகு கல்யாணம் செய்தால் புருஷர்களுக்கு அடங்கி நடக்க மாட்டார்களாம். ஆகவே பெண்களை ஆண்கள் அடிமை கொள்ளவே இம்மாதிரியான சாஸ்திரங்களை எழுதி வைத்துக் கொண்டு அவைகளை பகவான் சொன்னார் ரிஷிகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள் பாராசர் பரப்பினார் என்று சொல்லி இதுவரை மக்களை ஏமாற்றி வந்திருக்கிறார்கள் என்பது இப்போதாவது மக்களுக்கு விளங்கி இருக்கும். இந்த சூதை எப்படியோ தன்னை அறியாமல் தலைவர் கக்கிவிட்டார் என்றாலும் பாலியவிவாகம் கூடாது என்பதற்கு காரணமாக தவிர பெண்கள் பக்குவமானவுடன் புணர்ச்சிக்கு அனுமதிக்காவிட்டால் அதனால் அநேக குழந்தை கள் உற்பத்தியாவது தடுக்கப்பட்டு சிசுக் கொலையாகிவிடுமாம். ஒரு பெண் 14 வயதில் பூப்பு எய்தி 45 வது வயதில் சாந்தி முகூர்த்தமாவதற்குள் குழந்தை பிறப்பது தடைப்படுவதால் சிசுக் கொலை ஏற்படுமானால் 10 வயது முதல் 50 வயது வரை உள்ள விதவைகள் என்னும் பேரால் பத்து லட்சக்கணக்கான பெண் களை கர்ப்பமுண்டாகாமல் தடுப்பதாலும் தப்பித் தவறி தெரியாமல்

கர்ப்பமுண்டாகி விட்டால் ஒரு மாதம் முதல் பத்து மாதம் வரை அக்கர்ப்பங்களை அப்பெண்களும் தாய் தகப்பன்மார்களும் அழிப்பதாலும் பெற்ற குழந்தைகளை கழுத்தை திருகுவதினாலும் எத்தனை சிசுக் கொலை ஏற்படுகின்றது என்பதை உலகம் அறியாதா? என்று கேட்கின்றோம். தவிர, சனாதன தர்மத்திற்கு சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்றும், பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள். இவ்விரண்டையும் நாம் மேள தாளத்துடன் வரவேற்கின்றோம். ஏனெனில், நாம் இதைதான் சொல்லி வந்திருக்கின்றோம். அதாவது, பெண்களுக்கு உண்மையான விடுதலை ஏற்பட வேண்டுமானால் பாலிய விவாகம் கூடாது என்பதும். பெண்ணுக்கும் ஆணுக்கும் அதிக வயது வித்தியாசம் கூடாது என்பதுமேயாகும். சனாதன தர்மத்தை நாம் பத்து வருஷத்தில் ஒழிப்பதானால் பார்ப்பனர்கள் சத்தியாக்கிரகமும் பத்திரிகையும், நடத்துவதினால் சனாதன தர்மம் ஐந்து வருஷத்திலேயே ஒழிந்து போகும் என்கின்ற தைரியம் நமக்கு இருக்கின்றது.

தவிர மனுதர்ம சாஸ்திரத்தை ஆதரிக்கின்றதாக வாக்குக் கொடுக்கின்றவர்களுக்கே சட்டசபை ஓட்டுக் கொடுக்க வேண்டுமென்கின்ற தீர்மானமும் நமக்கு மகிழ்ச்சியையே கொடுக்கின்றது. ஏனெனில், சுயராஜ்யம் என்பதும் தேசியம் என்பதும் பார்ப்பன ராஜியம்தான் என்றும், அதுவும் மனுதர்ம ராஜியம்தான் என்றும் நாம் சொல்லி வந்ததின் உண்மை இந்த சனாதன மகாநாட்டின் இந்த தீர்மானத்தால் வெளியானதற்கு யாரால்தான் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியும்? அன்றியும் தீவிர தேசியவாதியும் பூரண சுயேச்சைவாதியும் சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை என்ற கொள்கையுடையவருமான திரு.சத்தியமூர்த்தி அவர்களின் சுயராஜ்ஜியமும் தேசியமும் பூரண சுயேச்சையும் பிறப்புரிமையும் இன்னதுதான் என்றும், அவரை சட்டசபைக்கு தெரிந்தெடுத்தனுப்பும் யோக்கியர்களின் கருத்து இன்னதுதான் என்றும் நன்றாய் விளங்க சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

தவிரவும், மனுதர்மவாத தேசீயவாதிகளே சட்டசபைக்கு போகும் படியான ஒரு காலம் வருமானால் அந்த சந்தர்ப்பமானது ஒரு ஐந்து வருஷத்திற்குள் நம் நாட்டிற்கு பொது உடைமைக் கொள்கையும் அபேதவாதக் கொள்கையையும் சம சொத்துக் கொள்கையையும் கொண்டு வந்து விட்டு விடவோ, அல்லது இராணுவ ஆட்சியை கொண்டு வந்து விடவோதான் செய்யுமே ஒழிய, ஒருக்காலமும் நமது நாட்டில் மனுதர்ம ஆட்சி ஒரு ஐந்து நிமிடம் கூட இருக்க முடியாது என்று தைரியமாய் உறுதி கூறுவோம். கடைசியாக நமது நாட்டிற்கு சுயமரியாதை இயக்கம் எவ்வளவு அவசியம் என்பதும் வேதங்களும், மனுதர்ம சாஸ்திரங்களும் அவைகளை மக்களுக்குக் கொடுத்த பகவான்களும் அழிந்து தீரவேண்டியது எவ்வளவு அவசிய மென்றும் பொதுமக்கள் உணர ஒரு அருமையான சந்தர்ப்பத்தைக் கொடுத்த சுயநல வெறியர்கள் மகாநாடான சனாதன தரும மகாநாட்டிற்கு நமது நன்றி யறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

குடி அரசு - தலையங்கம் - 08.12.1929
சுயநலவெறியர்கள்மாநாடு.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மார்ச்சு-2018

| | | |
|---|---|---|
| **பொன். இராமச்சந்திரன்** | பம்மல் | 5000/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மார்ச்சு-2018

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 044-2625 2119

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**